# 2007 வரவு செலவுத் திட்ட உரை

## *பிரிவு I*

1. சபாநாயகர் அவர்களே, எமது சொந்த பலத்தினை அடிப்படையாகக் கொண்டு எமது சொந்த முயற்சிகளினூடாக எமக்கு நாமே வலுவூட்டிக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட மகிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவடைந்தமையினைத் தொடர்ந்து இவ்வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பிக்கின்றேன். இது வறிய மக்களினதும் பிராந்தியங்களினதும் வருமானத்தை கடந்த காலத்தில் அடையப்பட்டதிலும் பார்க்க மிக வேகமாக அதிகரித்தலையும், சமூக நீதியுடன் கூடிய வலுவான பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதன் மீது உந்து சக்தியொன்றை ஏற்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. எமது கடப்பாடுகளில் பலவும், அபிவிருத்தி முயற்சிகளும் 2006ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தினூடாக நடைமுறைக்கிடப்பட்டன. எனினும், மிக ஆரம்பத்திலிருந்தே எமது அரசாங்கம் எமது செயலாற்றத்தினைப் பாதிக்கின்ற பல சவால்களையும் எதிர்கொண்டிருக்கிறது.

2. பேச்சுவார்த்தையொன்றின் மூலமான அரசியல் தீர்விற்கு நாம் உண்மையான பற்றுறுதியைக் கொண்டவர்களாக இருக்கின்றபோதும், நான் தெரிவு செய்யப்பட்ட ஒருசில நாட்களின் பின்னர் எல்.ரி.ரி.ஈ கெப்பிட்டிக்கொலாவவில் 70 குடிமக்களைக் கொன்றமை, பல தற்கொலைத் தாக்குதல்கள் , மாவிலாறு அணைக்கட்டினை பலவந்தமாக மூடியமை மற்றும் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதல்கள் என்பன உட்பட அதிகரித்த வன்முறைகளிலும் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றனது. இது பொது மக்களின் உயிர்களைப் பாதுகாத்தல், அரச சொத்து மற்றும் தேசிய பாதுகாப்பு என்பனவற்றை திறமையுடன் பாதுகாக்க வேண்டிய பொறுப்பினை அவசியப்படுத்தியபோதிலும் எமது சமாதானப் பற்றுறுதியில் நாம் உறுதியாகவே இருந்துவருகின்றோம். எங்கள் நாட்டின் தமிழ் மக்களது உண்மையான குறைபாடுகளை களைவதற்கு அனைத்து ஜனநாயக அரசியல் கட்சிகளுடனும் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுவதில் நாம் வெற்றிகண்டிருகின்றோம். எமது நாட்டுடன் தொடர்பான கரிசனைக்குரிய பொது விடயங்களில் எதிர்க்கட்சியுடன் அரசியல் இணக்கப்பாடொன்றை அடைந்திருப்பது எமது மக்களுக்கு புதிய நம்பிக்கையொன்றை அளித்துள்ளது. மனித உரிமைகளையும் ஜனநாயத்தையும் மதிக்கின்ற இச் செயற்பாட்டிற்குள் எல்.ரி.ரி.ஈ. இன்னமும் நுழையவில்லை. ஆகவே வன்முறைகளை முழுமையாக கைவிட்டு, ஆயுதங்களைக் கையளித்து, எமது சமூகம் அனுபவிக்கும் பரஸ்பர நம்பிக்கையினை அடையும் விதத்தில் புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்பும் அபிலாசையுடன் அமைதி, ஜனநாயம் மற்றும் எமது நாட்டினை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றினை ஊக்குவிக்கும் நோக்கில் எம்முடன்

இணைந்து பணியாற்றுமாறு எல்.ரி.ரி.ஈ. யை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். இந் நோக்கிற்கு எல்.ரி.ரி.ஈ. இனை உடன்பட வைப்பதில் பன்னாட்டு சமூகம் எடுத்த முயற்சிகளை எமது அரசாங்கம் மதிப்பதுடன், தேசிய பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடைமுறைகளைப் பரஸ்பரம் தொடர்வதற்கும் தயாராக இருக்கிறது.

3. அதிகரித்த வன்முறைகள் பாதுகாப்பிற்கும், மனிதாபிமான நிவாரண தொழிற் பாடுகளுக்கும் கூடுதலான மூலவளங்களை வழிப்படுத்துவதற்கு அரசாங்கத்தினை நிர்ப்பந்தித்தன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை உட்பட மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகளின் நிருமாணம், நீர் வழங்கல் திட்டங்கள், மின்வலு இணைப்புக்கள், வீதிகள் மற்றும் பாலங்கள், பள்ளிக்கூடங்கள் , வைத்தியசாலைகள் மற்றும் பல தொழில் முயற்சி நடவடிக்கைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. எல்.ரி.ரி.ஈ யின் மோதல்களினால் மக்களின் அடிப்படைத் தேவைகளும் மனித உரிமைகளும் மறுக்கப்படுவதன் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள அப்பாவி மக்களுக்கான மனிதாபிமான உதவிகளையும் உணவு மற்றும் மருந்துவகைகளின் கிரமமான வழங்கல்களையும் அனுப்பி வைப்பதில் அரசாங்க அலுவலர்களும் பாதுகாப்புப் படைகளும் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றன.

4. சபாநாயகர் அவர்களே, பொருளாதார அறைகூவல்களும் பலம் பொருந்தியனவாகவே இருந்தன. பன்னாட்டு எண்ணெய் விலைகள், சுனாமியின் பாதிப்பிலிருந்து மீள்வதற்குப் போராடிக்கொண்டிருந்த இந்த நாட்டினால் தாங்க முடியாத அளவிற்குமப்பால் உயர்ந்திருக்கின்றன. ஏற்கனவே இவ்வாண்டின் தொடக்கத்தில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 70இனை விஞ்சியுள்ள எண்ணெய் விலைகள் தொடர்ந்தும் அதிகரிப்பது எமது பொருளாதாரத்தினை பெருமளவிற்கு சோர்வடையச் செய்திருக்கிறது. பெற்றோலிய இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணிச் செலவு மட்டும் ஏறத்தாள ஐ.அ.டொலர் 2.2 பில்லியன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2006இல் மட்டும் ஐ.அ.டொலர் 550 மில்லியன் கொண்ட அதிகரிப்புக் காணப்படுகிறது. அரசாங்கமும் எரிபொருள் மானியமாக 2005இல் ரூ.25 பில்லியனையும் 2006 யூன்வரை மேலும் ரூ.12 பில்லியனையும் செலவிட்டிருக்கிறது. உயர்வடைந்துவரும் எண்ணெய் விலைகளின் பின்னணியில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மீதான பெறுமதி சேர் வரியினை அகற்றுவதனைத் தவிர அரசாங்கத்திற்கு இறுதியில் வேறு வழியெதுவும் காணப்படாததுடன், கட்டுப்படுத்தப்பட முடியாத இழப்புக்களைக் குறைக்கும் பொருட்டு செலவு மீட்பு விலையிடலினையும் மேற்கொண்டது. மக்கள் தமது வலுத்தேவைகளுக்கு மிக உயர்ந்த விலைகளைச் செலுத்த வேண்டியிருந்தமையும் அதனைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவு உயர்வடைந்தமையும் கவலைக்குரியனவாகும்.

5. எமது பொருளாதாரம் எதிர் கொள்ள வேண்டியிருந்த இன்னொரு முக்கிய சவால் உலகளாவிய போட்டித் தன்மைக்கேற்ப அனுசரித்துப் போகவேண்டி இருந்தமையேயாகும். பல்நூலிழை உடன்படிக்கைக்குப் பின்னர் ஆடைக் கைத்தொழில் மாற்றத்திற்குள்பட்டுவருவதுடன், கட்டுப்பாடுகளை நீக்குவதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் ஏற்கனவே உணரப்பட்டுவருகிறது. அடுத்த 2 ஆண்டுகளில் சீனா மற்றும் வியட்நாம் மீதான கட்டுப்பாடுகள் காலாவதியாகும் பொழுது சவால்கள் மேலும் பாரியதாகும். எரிபொருள், மின்வலு, மற்றும் போக்குவரத்து என்பனவற்றின் உள்நாட்டுச் செலவு மற்றும் தாழ்ந்த உற்பத்தியாக்கம் என்பனவற்றின் காரணமாக கைத்தொழில் போட்டியில் தாக்குப்பிடிப்பதற்கு ஏனைய பல கைத்தொழில்களும் இதையொத்த இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றன. எமது நாடு இந்தியா மற்றும் பாக்கித்தானுடனான சுதந்திர வர்த்தக ஒழுங்குகளுக்கு அதன் ஆழ்ந்த பற்றுறுதிகளை கொண்டிருந்ததுடன் எமது தொழில் முயற்சியாளர்கள் கடுமையான போட்டிக்கு தம்மை சீராக்கிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். எமது கைத்தொழில்கள் விலைகளின் பெறுமதிகளை குறைத்துப்பட்டியலிடல், பொருட்களைத் தேவைக்கதிகமாக குவித்தல் மற்றும் மலிவான இறக்குமதிகள் என்பனவற்றினால் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன. இவை அனைத்தும் எமது பொருளாதார மாற்றங்களின் மீது கடுமையான சுமையினை ஏற்படுத்தியிருக்கின்றன.

6. சபாநாயர்கள் அவர்களே, இத்தகைய பாதகமான, நிலைமைகளுக்கிடையிலும் ஒளிக்கீற்று ஒன்று தென்படுகின்றது. இவ்வாண்டில் எமது பொருளாதாரம் 7 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியுறுவதற்கு எமது மக்கள் ஒன்றிணைந்து பங்களித்திருப்பதானது மீள் எழுச்சியினை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. இது வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, தயாரிப்பு, கட்டுமானம் மற்றும் பரந்தளவிலான பணி நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து 1978இன் பின்னர் அடையப்பட்டிருக்கிறது. இவ்வளர்ச்சியானது பல பின்தங்கிய பிரதேசங்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து காணப்பட்டது. சாதகமான வானிலை , அதிகரித்த வளமாக்கி மானியம், மா மீதான மானியம் அகற்றப்பட்டமை மற்றும் சிறந்த பண்ணை விலைகள் என்பனவற்றிலிருந்து கிடைத்த நன்மைகன் காரணமாக, எமது வேளாண்மையாளர்கள் அரிசி உற்பத்தியில் நாட்டினைத் தன்னிறைவு காணச் செய்தனர். உள்ளூர் பழ வகைகள், காய்கறிகள் கோழி வளர்ப்பு , உடன்பால், நன்னீர் மீன்பிடி என்பனவற்றின் உற்பத்தியும் இதே போக்கினைக் காட்டியதுடன் அத்தகைய பண்டங்களின் இறக்குமதி குறைக்கப்பட்டமையினால் கிடைத்த வாய்ப்புக்களை இவை பிரதிபலித்ததுடன் உணவுப்பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தின.

7. தயாரிப்புத்துறை ஏறத்தாள 6 சதவீதமான வளர்ச்சியை உருவாக்கியது. உணவு, குடிபானங்கள், இரசாயனம், இறப்பர் பிளாத்திக்கு மற்றும் தோல் உற்பத்திகளின் உற்பத்தி 6 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்தது. ஏற்றுமதிகள் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை, பழவகை மற்றும் காய்கறிகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள், மட்பாண்டம், உயர் பெறுமதி கொண்ட ஆடைகள், தோல் உற்பத்திகள், மென் பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான புதிய ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் பணிகள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட மூலங்களை ஏற்றுமதிகள் பிரதிபலித்தன. இவ்வாண்டின் மொத்த ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனை அடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இவை கைத்தொழில் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்பட்டமையினை பிரதிபலிக்கின்றன.உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் பொறிகள், கருவிகள், கட்டடவாக்கப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. தொலைத் தொடர்பூட்டல் , சுற்றுலா, வர்த்தகம் , போக்குவரத்து கட்டுமானம் மற்றும் நிதியியல் பணிகளின் விரிவாக்கமும் வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியும், ஒன்றுக்கொன்று மீள்வலுவளித்து பணிகள்துறை 6 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சி பெறுவதற்கான உந்து சக்தியை வழங்கின.

8. சபாநாயகர் அவர்களே, அனைத்து மூன்று அரசிறைத் திணைக்களங்களும் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினைக் கொண்டிருந்தன. மேம்பட்ட வரி நிருவாகம் சிறந்த இணங்குவிப்பு, சட்ட விரோத குடிவகைகள், சிகரட்டுக்கள், கள்ளக்கடத்தல் மற்றும் விலைகளின் பெறுமதியினை குறைத்து பட்டியலிடல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க வெற்றி என்பன இவ்வாண்டின் செத்தெம்பரளவில் அரசிறை 22 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பங்களித்தன. வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதற்கும் நிலையான உயர்ந்த அரசிறை வளர்ச்சிக்குமாக நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றினை மேற்கொண்டிருக்கின்றோம். 2002 - 2004 காலப்பகுதியில் இடம்பெற்ற பெறுமதி சேர் வரியில் மேற்கொள்ளப்பட்ட இழிவான மோசடி பற்றிய புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தேக நபர்கள் நீதிக்குமுன் கொண்டுவரப்பட்டிருப்பதுடன் விசாரணைகள் விரைவாக முடிக்கப்படவுள்ளது.

9. முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு, முதலீடுகள் மீதான தீர்மானத்தினை உரிய நேரத்தில் மேற்கொள்வது முக்கியமானதாகும். இச் செயற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக எனது தலைமையின் கீழ் அமைச்சரவை துணைக் குழுவொன்றினை நிறுவியுள்ளேன். விரைவான முறையில் முதலீட்டுப் பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்காக அலுவலர்களின் உயர் மட்டக் குழுவொன்றினையும் ஏற்படுத்தியுள்ளேன். பொருளாதார நடவடிக்கைகள், வர்த்தக முதலீடு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பனவற்றை மேம்படுத்துவதற்காக இலங்கையின் வெளிநாட்டு துதுவராலயங்கள் மீளமைக்கப்பட்டு

வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 600 மில்லியனை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 400 மில்லியனை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்துவரும் 2 ஆண்டுகளில் இவ்விரு துறைகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் கூடுதலான தொகையினைப் பெறவேண்டுமென்பதே எமது நோக்கமாகும். இவ்வாண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிலிருந்தான பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 2.4 பில்லியனை அடையக்கூடும். மொ.உ. உற்பத்திக்கான திரண்ட முதலீடு 2005இன் 26.5 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு மேலும் முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களின் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவையில் ஏறத்தாள ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட மிகையினைக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கி தற்பொழுது ஐ.அ.டொலர் 2.5 பில்லியன்கள் கொண்ட ஒதுக்குடன் வலுவான நிலையிலுள்ளது.

10. எமது அபிவிருத்தியின் தற்போதைய போக்கின் முக்கியமானதொரு பண்புயாதெனில் வேலைவாய்ப்பின்மை ஏறத்தாள 6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளமையேயாகும். இவ்வாண்டுக் காலத்தில் உள்நாட்டு வேளாண்மை, கைத்தொழில், கட்டடவாக்கம் மற்றும் பணிகளில் 250,000 இற்கும் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப் பட்டுள்ளமையினை அண்மைய தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் ஏறத்தாள 200,000 மக்கள் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்கின்றவர்களின் தொழில் தேர்ச்சி மட்டத்தினை அதிகரிப்பதற்கும் அதேபோன்று வெளிநாட்டு நாணயத்திற்காக பணிகளை வழங்குகின்ற தொழில்சார் நிபுணர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும் எமது அரசாங்கம் முன்மொழிகிறது. இதன் மூலம் எமது பொருளாதாரம் எமது சொந்த தேர்ச்சியின் அடிப்படையில் வலுவானதாக மாற்றமுறும்.

11. சபாநாயகர் அவர்களே, றன்தோறா - அதாவது அரசாங்கத்தின் பாரிய உட்கட்டமைப்பு முயற்சிகளே எமது முன்னுரிமையாகும். இவற்றினைப் பொறுத்தவரையில் திரவத் தேசிய வாயுவினை அடிப்படையாகக் கொண்ட வலுவினை உருவாக்கும் விதத்தல் அனைத்து எரிபொருட்களையும் அடிப்படையாகக் கொண்ட பொறிகளை மாற்றியமைப் பதற்காக புத்தளம் நிலக்கரி வலுப்பொறி, திருகோணமலை நிலக்கரி வலுப்பொறி மற்றும் கெறவலப்பிட்டி வலுப்பொறி மற்றும் தொடர்பான உட்கட்டமைப்புக்களைத் தொடங்குவதற்கு நாம் தேவையான ஒழுங்குகளைச் செய்துள்ளோம். பல நீர் மின்வலுப் பொறிகளும் புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. நான்கு பாதைகளுடன் கூடிய தென்பகுதி விரைவுப் பாதையினை நேர காலத்துடன் விரைந்து முடிக்கும் விதத்திலும் கடவத்தை, கொட்டாவ மற்றும் கடுவெல ஆகிய இடங்களில் மூன்று நகரங்களை அமைப்பதுடன் கூடிய வெளிச்சுற்று விரைவுப் பாதையின் கட்டுமான வேலைகளைத் தொடங்குவதற்கும் கொழும்புத் துறைமுகத்தின் இயலளவை விரிவாக்குவதற்கும் தென்பகுதியில் புதிய துறைமுகமொன்றையும்

இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையமொன்றினையும் பன்னாட்டு மாநாட்டு நிலையமொன்றினையும் நிருமாணிப்பதற்கும் நாம் எமது அபிவிருத்திப் பங்காளர்களுடன் பணியாற்றி வருகின்றோம். திருகோணமலையினை முதலீட்டு சுற்றுலா வலயமாக மேம்படுத்துவதற்காக வட பகுதி விரைவுப் பாதையினையும் வடக்கு கிழக்கு மாவட்டங்களிலுள்ள மற்றைய பல்வேறு முக்கிய வீதிகளையும் பாலங்களையும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் கடப்பாடு கொண்டுள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட கட்டுக்குருந்தவிலிருந்து பொத்துவில் வரையான கரையோர நெடுஞ்சாலையினதும் இந்நாட்டிலுள்ள முக்கிய நகரங்களை இணைக்கின்ற முக்கிய பல நெடுஞ்சாலைகளினதும் மீள்கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12. அரசாங்கம், மகாநகும, பத்தாயிரம் குளங்களை புனரமைத்தல், புதிய நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் கிராமிய மின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் ஏறத்தாள ரூ.12,000 மில்லியனைச் செலவிட்டது. ரூ.11,000 மில்லியன் கொண்ட வளமாக்கி மானியம் ரூ.2,900 மில்லியன் கொண்ட நெல் கொள்வனவு ரூ.8,000 மில்லியன் கொண்ட மருந்தாக்கல் பொருட்கள் , பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான ரூ.3,600 மில்லியன் கொண்ட உதவி என்பனவற்றிற்கான நிதியிடல் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த செலவினமாகக் காணப்படுகின்றது. சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமான நடவடிக்கைகளை நேர காலத்துடன் பூரணப்படுத்துவதற்காகவும், குறிப்பிட்ட சில அரசசார்பற்ற நிறுவனங்களின் கவனமின்மை மற்றும் குறைந்த செயலாற்றப்பணி என்பன காரணமாக அத்தகைய வேலைகளுக்காகவும் அரசாங்கம் நிதியிட வேண்டிய தேவை ஏற்பட்டது. இன்றுவரை 62,000 வீடுகள் முற்றுப் பெற்றிருப்பதுடன் ஏறத்தாள 43,000 வீடுகள் நிருமாணிக்கப்பட்டு வருகின்றன. சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட மொத்தச் செலவினம் ஏறத்தாள ரூ.9,200 மில்லியன்களாகும்.பாதுகாப்பு, மனிதாபிமானப் பணிகள், சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் எரிபொருள் மானியம் என்பன மீதான அதிகரித்த செலவினம் காணப்பட்டபோதும் இந் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

13. பல மோசமான தன்மைகள், மற்றும் அதிகரித்த பயங்கரவாத அச்சுறுத்தல் என்பனவற்றிற்கு மத்தியிலும் இவ்வாண்டின் ஓகத்திலும் செத்தெம்பரிலும் தென்னாசிய விளையாட்டுப் போட்டிகளையும் பொதுநலவாய நிதி அமைச்சர்களின் கூட்டத்தினையும் நாங்கள் வெற்றிகரமாக நடாத்தியுள்ளோம். பொதுநலவாயம் உருவாக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாக இலங்கையில் அத்தகைய கூட்டமொன்று நடத்தப்பட்டிருக்கிறது. எமது நாட்டில் காணப்படும் பாரிய இடர்பாடுகளுக்கு மத்தியிலும் கூட அத்தகைய நிகழ்வுகளை நடத்தக்கூடியதாக இருந்தமை எமது இயலளவினை எடுத்துக் காட்டுவதுடன் அபிவிருத்தியையும் சமாதானத்தினையும் மேம்படுத்துவதற்கான ஒன்றிணைந்த ஜனநாயக சூழலொன்றிற்கான எமது ஆழ்ந்த கடப்பாட்டினையும் எடுத்துக் காட்டுகின்றது. இருப்பினும் நாம் மனநிறைவினையடைய முடியாது.

14. வாழ்க்கைச் செலவுச்சுட்டெண் 12 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரியினால் அதிகரித்துள்ளது. இதற்கு எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதனைத் தொடர்ந்து போக்குவரத்து மற்றும் மின்வலுவில் ஏற்பட்ட மாற்றங்களும் பெருமளவிற்குக் காரணமாகும். அரச ஊழியர்களினதும் ஓய்வூதியக்காரர்களினதும் சம்பளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, தனியார்துறைக்கு வங்கித் தொழில் முறைகளினால் வழங்கப்பட்ட கொடுகடனின் பாரிய விரிவாக்கம், கோதுமைமா மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு வேளாண்மை உற்பத்திகளின் மீதான அதிகரித்த வரி விதிப்பு, கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பன மூலப் பொருட்கள், தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பண்டங்கள் என்பனவற்றிற்கான கேள்வி அதிகரிப்பதற்கு பங்களித்தமையின் மூலம் உயர்ந்த விலைகளுக்கு காரணமாகியது. இம் மாற்றங்களில் சில இறக்குமதிகளுக்குப் பதிலாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் தேசிய பொருளாதாரத்தினை கட்டியெழுப்பவும் அவசியமானவையாக இருந்தன. எனினும் அத்தியாவசியமல்லாத நுகர்வு விடயங்கள் மீதான கொடுகடன் விரிவாக்கம் மற்றும் விலைகள் மீதான கேள்வி அழுத்தம் என்பன நெருக்கமான கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கப்பட வேண்டியவையாகும்.

15. பணவீக்க அழுத்தங்களைக் கையாளும் விதத்தில், மத்திய வங்கி அதன் கொள்கை வீதங்களை 2.625 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் நாணயக் கொள்கையினையும் இறுக்கமாக்கியது. திறைசேரி உண்டியல் வீதங்கள் நீடித்த கேள்விகளுக்கு ஏற்பவும் நுகர்வுக் கேள்விகளைக் கட்டுப்படுத்தும் விதத்திலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பல உள்நாட்டு வங்கிகள் தமது வைப்புக்களின் திரட்டல்களுக்கு சமாந்தரமாக அவற்றின் கொடுகடன் விரிவாக்கத்தினை சமப்படுத்தவில்லை. சில வங்கிகள் உயர் வட்டி வேறுபாடுகளையும் இலாபங்களையும் பேணுகின்ற ஒழுக்கமற்ற நடைமுறைகளில் ஈடுபட்டிருந்தன. விரைவானதும் சமச்சீரற்றதுமான கொடுகடன் வளர்ச்சியை அவதானித்த மத்திய வங்கி சந்தை இடர்நேர்வுக்ளுக்காக, குறிப்பாக, முன்னுரிமையல்லா சில்லறைக் கடன் வழங்கல் மற்றும் இறக்குமதிகளுக்கான மூலதன ஒதுக்கங்களை அதிகரித்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமையல்லா விடயங்கள் மீது வைப்பு வரையறையினை விதிப்பது இறக்குமதிக் கேள்வியினையும் அதேபோன்று வங்கித் தொழில் முறையில் தேவையற்ற கொடுகடன் விரிவாக்கத்தையும் குறைப்பதற்கான குறுங்கால வழிமுறையாகக் காணப்படுகின்றது.

16. அரச தலையீட்டிற்கு நிறுவன ரீதியிலான உரிய பொறிமுறை இல்லாமையால் சந்தையில் செல்வாக்கைக் பயன்படுத்தல் மற்றும் போட்டித் தன்மையற்ற நடைமுறைகள் பரந்தளவில் காணப்படுகின்றன. கூமொவி மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபை மூடப்பட்டமை மற்றும் கூட்டுறவு முறைமை நலிவுற்றமை என்பன எமது சந்தை அமைப்பின் பாதகமான தன்மையினை பிரதிபலித்தன. தனியார் - அரச பங்குடைமை ஒழுங்கு முறையை அடிப்படையாகக் கொண்ட “நியாய

விலைக்கடை” என்ற புதிய கோட்பாடு, மொத்த விற்பனை விலைகளில் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் பொருட்டு வழங்குனர்களுக்கு உட்கட்டமைப்பை வழங்கும் வகையில் அமுல்படுத்தப்பட்டது. போட்டித் தன்மையினை மேம்படுத்துவதற்காக கூடிய சனத்தொகையுள்ள பிரதேசங்களில் “லக்சதொச” விற்பனை நிலையங்களும் நிறுவப்பட்டன. பன்னாட்டு எண்ணெய் விலைகளிலான கீழ் நோக்கிய போக்கின் நன்மையை கருத்திற்கொண்டு அரசு பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளையும் லீற்றர் ஒன்றுக்கு ரூ. 7 - 9 ஆல் குறைத்தது. பொது வசதிகள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ், பன்னாட்டு விலைகளுடன் ஒத்துச் செல்லும் வகையில் அரசு பெற்றோலிய உற்பத்திகளுக்கான சில்லறை விலைகளுக்கு மாதாந்தச் சீராக்கங்களை மேற்கொள்ள தொடர்ந்து அனுமதிக்கும்.

## பிரிவு **11**

## தேசிய அபிவிருத்தி உபாயத்துக்கான 10 வருட கால எல்லை

17. சபாநாயகர் அவர்களே, வறுமையை ஒழிப்பதற்கான கடப்பாடான புத்தாயிரம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உலகளாவிய கடப்பாடொன்று இத்தசாப்தத்தில் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இது, தெளிவான தொலை நோக்கு அடிப்படையில் நீண்டகால உபாயத்தை உருவாக்குவதற்கான தேவையை எமக்கு ஏற்படுத்துகிறது. நான் மக்களுக்கு மகிந்த சிந்தனையை முன்வைத்தபோது, எனது தொலைநோக்கு நவீன வீதிகள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள், நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம், நகரமைப்பு மற்றும் சனசமூக வசதிகள், போக்குவரத்துப் பணிகள், தொழில்நுட்பம், தேர்ச்சிகள் மற்றும் அறிவாற்றலைக் கொண்ட நாடாக புதிய இலங்கையை உருவாக்குவதாக இருந்தது. மேல் மாகாணத்துக்கு வெளியே அபிவிருத்தியை எடுத்துச் செல்லும் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வறுமையை இல்லாமல் செய்வதற்கும், சட்டம் மற்றும் ஒழுங்கைக் கவனிக்கும் சமுதாயம் மற்றும் சிநேகபூர்வமான சூழலை மேம்படுத்துவதற்கும் அவ்வாறான பௌதீக மற்றும் மனித உட்கட்டமைப்பு அத்தியாவசியமானதாகும்.

18. சபாநாயகர் அவர்களே, நாம் எமது நாட்டின் கடினமான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக யதார்த்தத்தினை கட்டாயம் பார்க்க வேண்டும். எமது மாகாணங்களில் அநேகமானவை தொடர்ந்தும் வறுமை நிலையிலேயே விளங்குகின்றன. வேளாண்மையை முக்கிய தொழிலாகக் கொண்டவை தொடர்ந்தும் தமது ஜீவனோபாய மட்டத்தில் காணப்படுவதுடன் இவை குறிப்பிடத்தக்க பன்முகப்படுத்தலையும் நவீனமாக்கலையும் வேண்டி நிற்கின்றன. பெருந்தோட்ட வேளாண்மைக்கு

உற்பத்தித்திறன் மேம்பாடுகள் மற்றும் உயர் பெறுமதி கூட்டல் என்பன தேவைப்படுகின்றன. குறைந்த வளமுடைய வினைத்திறனுடன் செயலாற்றும் பலதரப்பட்ட உற்பத்தி மற்றும் பணி நடவடிக்கைகளுக்கு தொழில் நுட்பத்தைப் புகவிடல், நடைமுறைச் சாத்தியமான கொள்கை உபாயங்கள் மற்றும் உட்கட்டமைப்பு உதவிகள் என்பன தேவைப்படுகின்றன. படித்த இளைஞர்கள் தற்போது கூட இலாபகரமான தொழிலைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளமை, எமது பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தப்பட்ட தேர்ச்சிக் கேள்விகளை எதிர் கொள்வதற்கு எமது கல்விமுறைமையை மீளவும் சரியானமுறையில் அமைப்பதற்கு எம்மை கட்டாயப்படுத்துகிறது. வறுமை, வட கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களிலும் தெற்கிலுள்ள 6 மாவட்டங்களிலும் மற்றும் பெருந்தோட்ட பிரதேசத்திலுள்ள 3 மாவட்டங்களிலும் பெருமளவு காணப்படுகின்றது. நவீன தலை நகரமாக விளங்குவதற்கான அத்தியாவசிய உட்கட்டமைப்பு கொழும்பில் போதியளவிற்கு இல்லை. எனவே மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு உள்நாட்டு சொத்துரிமையுடனான கூடியளவு அர்த்தமுள்ள அபிவிருத்தி உபாயத்தை நாம் கட்டாயமாக உருவாக்க வேண்டும்.

19. இவ் உபாயத்தின் முக்கிய பகுதியாக, எமது மக்களுக்கு புதிய வருமான வழிகளையும் இலாபகரமான தொழிலையும் வழங்கும் வேளாண்மை , கைத்தொழில், கட்டடவாக்கம், சுற்றுலா, வர்த்தகம், நிதியியல் மற்றும் போக்குவரத்துப் பணிகளின் அபிவிருத்திக்கான அடிப்படையை வழங்கும் நாடு முழுவதற்குமான நவீன உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் விளங்கும். அடுத்த நான்கு ஆண்டுகளில் எமது அரச முதலீட்டு உபாயம் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ஆண்டொன்றுக்கு மொ.உ.உ இன் 5 சதவீதமளவினை வழங்கும். இது போதுமானதல்லதாகையால் தனியார் மற்றும் அரச துறைகளுக்கிடையிலான பங்குடைமைகள் கட்டாயமாக சகல துறைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும். எமது அபிவிருத்தி உபாயம் , பெறுமதி கூட்டப்பட்ட பன்னாட்டுப் பணிகள் பலவற்றை வழங்கும் ஆரம்ப முயற்சியாக இலங்கையை உரிய இடத்தில் வைப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. குறிப்பாக காப்புறுதியை மேம்படுத்தல் கப்பற்படுத்தல், களஞ்சியப்படுத்தல் வர்த்தகம் மற்றும் துணைப்பணி வழங்கும் திட்டம் சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் பெற்றோலிய ஆய்வுக்கான வாய்ப்புக்கள் உற்சாகமளிக்கின்றன. 2007 முற்பகுதியளவில் எண்ணெய் ஆய்வு உடன்படிக்கையை முன்னெடுக்கும் பொருட்டு பெற்றோலிய ஆய்வு தொடர்பாக சூழல் , உற்பத்தி மற்றும் புவிசார் பௌதீக அம்சங்கள் மீதான உரிய உடன்படிக்கைகளையும் ஒழுங்கு விதிகளையும் தயாரிக்கும் செயல்முறையில் அரசு ஈடுபட்டுள்ளது.

20. வறுமையைக் குறைப்பதில் நாம் வெற்றியடைய வேண்டுமானால் அடி மட்டத்திலுள்ள மக்களுக்கு வலுவூட்டுவது சம அளவில் முக்கியமானதாகும். மகிந்த சிந்தனை சமுதாயத்துக்கு வலுவளிப்பதற்கான முதல் முயற்சியான “கமநகும” என்ற சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தியை முன்மொழிகிறது. இது தமது தேவைகளைப் பிரதிபலிக்கும்

சமுதாயத்திலிருந்து ஆரம்பிக்கும் கீழ் மட்டத்திலிருந்து மேல்நோக்கிய நிகழ்ச்சித் திட்டங்களைப் பின்பற்றுவதற்கான முதற்படியாகும். அவ்வாறான சகல நடவடிக்கைகளும் கிராமிய அபிவிருத்தியை வழிநடத்தும் "ஜனசபா" உடன் தொடர்புடையதாக விளங்கும். தற்போது தொழிற்பாட்டிலிருக்கும் பல கிராமிய அபிவிருத்தி முயற்சிகளில் மீண்டும் கவனம் செலுத்தப்பட்டு அரசியல் வேறுபாடின்றி அவர்களின் தேவைகளை குறிக்கோள் அடிப்படையில் முன்னுரிமை கொடுப்பதற்கு சமுதாயத்தை அனுமதிக்க வேண்டும். கிராமிய சமுதாயத்தின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு மூலவளங்களின் பெருமளவு பயன்தரும் விதத்தில் பயன்படுத்துவதை இயலச் செய்வதற்கு இவ் ஆரம்ப முயற்சிகள் சமுதாயத் தலைவர்களால் கண்காணிக்கப்படும். இச்செயல்முறை மூலம் குறைந்தளவில் அபிவிருத்தியடைந்த மாவட்டங்களை நோக்கி வளங்களின் உரிய ஒதுக்கீட்டினை மீள் சமநிலைப்படுத்த முடியும்.

21. உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கி இலங்கை நீண்ட தூரம் பயணித்துள்ளது. எனினும், இச் செயல்முறை பல நேர்க்கணிய விளைவுகளையும் அதுபோல் எதிர்க்கணிய விளைவுகளையும் இணைந்து ஏற்படுத்தியுள்ளது. கடந்த 30 ஆண்டுகள் பின்பற்றப்பட்ட குறிப்பிட்ட கொள்கைகள் தோல்வியடைந்தமையின் முக்கிய காரணமாக மகிந்த சிந்தனை மாற்று அபிவிருத்தி உபாயமாக மாறியிருக்கிறது. எனவே, உலகளாவிய ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதாரத்தின் பலத்தை இனங்காணும் அதேவேளை, நாம் குறிப்பிட்ட கொள்கைகளை மீண்டும் இயக்கி போட்டிச் சூழலில் உள்நாட்டு மூலங்கள் மற்றும் தேர்ச்சிகளின் பலத்தில் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய பொருத்தமான ஊக்குவிப்பு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

22. சபாநாயகர் அவர்களே, அரசு அதன் 1/10 பங்கு வருமானத்தை கல்விப் பணிகளுக்கான சம்பளத்துக்கு மட்டும் செலவிடுகிறது. எமது நாடு மனித வள அபிவிருத்தியில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருக்கையில், தேசிய தொழில் தேவைகளை மீண்டும் மீண்டும் பூர்த்தி செய்யாத எமது கல்வி முறையினூடாக பட்டங்கள் மற்றும் ஏனைய தராதரங்கள் வழங்கப்படும்போது எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான கல்வியின் பங்களிப்பு சவால் மிக்கதாக விளங்குகிறது. அரசு என்ற ரீதியில், எமது கற்கை நிறுவனங்களில் தேவையான தேர்ச்சிகளுடன் சித்தியடையும் மாணவர்கள் தேசிய அபிவிருத்தி செயல் முறைக்கு பங்களிப்பது போன்று மேலும் அவர்களின் சொந்தப் பதவிக்கு பங்களிப்பு செய்வதனையும் உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும். எனவே, நாம் எமது பாடவிதானத்தை மாற்றியமைத்து பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களை தேர்ச்சிகளைப் பெறுவதற்கான உள்ளகப் பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டும். பல்கலைக்கழகங்கள் தரமுயர்த்தப்படுவதுடன், அவர்களின் ஆராய்ச்சி மற்றும்

ஆற்றல்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பங்காளர்களாக மாற்ற வேண்டும். கல்வி உள்நாட்டுப் பொருளாதாரம் அதுபோல் உலகளாவிய பொருளாதாரத்தால் வேண்டப்பட்ட தேர்ச்சிகளை வழங்கும் விதத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

23. எமக்கு மக்கள் சிநேபூர்வமான நிருவாகம் தேவைப்படுகிறது. அரசின் அரசிறையில் கிட்டத்தட்ட 15 சதவீதம், நிருவாகம் மேற்கொள்ளப்படும் பல அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஏனைய விரிவாக்கப் பணிகளை வழங்குவதற்கு செலவிடப்படுகிறது. வேளாண்மை, கைத்தொழில், கால்நடை, மற்றும் மீன்பிடி மற்றும் ஏனைய பல துறைகளில் சகல அரச பணி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் பொது மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு மீளத் திருத்தியமைக்கப்பட வேண்டும். ஈ - அரசாங்க அமைப்பு அரச பணி வழங்கும் பொறிமுறைக்குள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். சட்ட உட்கட்டமைப்பு மற்றும் நியாயாதிக்க அமைப்பு பிணக்குகளைத் தீர்ப்பதில் ஏற்படும் சட்ட தாமதங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளை கட்டுப்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட வேண்டும். சகல அரச தொழில் முயற்சிகளும் ஆகக் கூடிய இயலளவில் செயலாற்றுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டு அபிவிருத்தியை நோக்கி பங்களிப்புச் செய்ய வேண்டும். செயலாற்றத்தைப் பலப்படுத்தும் விதத்தில் புகையிரதப்பணி, பெற்றோலியம், மின்வலு, நீர் வழங்கல் அஞ்சல், மற்றும துறைமுகப் பணிகள் மற்றும் வங்கியை முழுமையாக மாற்றியமைத்தலை நோக்கி தொழிற் சங்கங்களும் முகாமைத்துவ அமைப்பும் கட்டாயம் இணைந்து பணியாற்ற வேண்டும்.

24. இலங்கை ஆற்றல் மிக்கதும் பன்முகப்படுத்தப்பட்டதுமான தனியார் துறையைக் கொண்டுள்ளது. இது வேளாண்மையாளர்கள், மீனவர்கள் சிறிய நடுத்தர மற்றும் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் மிகப் பெரிய கம்பனித் துறையை உள்ளடக்கியுள்ளது. அநேகமாக சகல வணிக மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளும் தனியார்துறைக்கு திறந்துவிடப்பட்டிருக்கையில் அவற்றின் விரிவாக்கம் போதுமானதற்ற உட்கட்டமைப்பு, மூலதனத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட வழிவகைகள் மற்றும் நிதியின் உயர் செலவு என்பனவற்றால் தடைப்படுகிறது. தனியார்துறை மற்றும் அரசதுறை அபிவிருத்தி முயற்சிகளின் வெற்றி முதலீட்டுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள சேமிப்புக்களில் தங்கியுள்ளது. முதலீட்டுக்கான கூடிய மூலதனத்தை உருவாக்குவதற்காக மூலதனச் சந்தை மற்றும் ஏனைய புதிய நிதியியல் சாதனங்களை மேம்படுத்தும் பொருட்டு 10 வருட உபாயம் உருவாக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பை வழங்கல், மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்திக்கான ஏனைய துணைப் பணிகளை வழங்குவதற்கும் வறுமையை குறைப்பதற்கும் மற்றும் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் அரசிறையை அதிகரிக்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்படுகிறது. இக்குறிக்கோளை நோக்கி 2009 அளவில் அரசிறையை கிட்டத்தட்ட 19 சதவீதத்துக்கு அதிகரிப்பதற்கும் பற்றாக்குறையை 5 சதவீதத்திற்குக் குறைப்பதற்கும் மற்றும் தேசிய படுகடனை மொ.உ.உ இன் 85 சதவீதத்திற்குக் கீழ்

குறைப்பதற்குமாக நடுத்தரகால வரவு செலவுத்திட்ட கட்டமைப்பொன்றினுள் இறை அமைப்பினை மாற்றியமைப்பதற்கு நாம் கடப்பாடு கொண்டுள்ளோம்.

25. சபாநாயகர் அவர்களே, சுருங்கக்கூறின், இலங்கைக்கான எமது நீண்டகால திட்டம் யாதெனில் அடுத்த 10 வருடங்களில் ஒவ்வொரு ஆண்டும் 8 சதவீதத்திற்கும் கூடுதலான ஆண்டு வளர்ச்சியை நீடித்து நிலைத்து வைத்திருக்கக் கூடியதும், எமது மக்களின் தலைக்குரிய வருமான மட்டத்தினை ஐ.அ.டொலர் 3,000 இற்கும் அதிகரிக்கக் கூடியதுமான பொருளாதாரத்தை உருவாக்குவதாகும். வறிய மாவட்டங்களிலும் இதே வருமான மட்டத்தினைப் பிரதிபலிக்கச் செய்யும் விதத்தில் இப் பொருளாதாரம் அமையும். இப் பொருளாதாரமானது நாட்டினுள்ளேயும் அதுபோல் உலகளாவிய முழுப் பொருளாதாரத்திலும் குறிப்பாக பிராந்தியத்திலும் பலமான இணைப்பைக் கொண்டிருக்கும். இவ் அபிவிருத்திச் செயல் முறையினூடாக , இலங்கை அறிவுசார் பொருளாதாரத்திற்கு மாற்றியமைக்கப்படும். நாடு பொருளாதார ரீதியாக முன்னேறுவது மட்டுமன்றி நாடு பொருளாதார முன்னேற்றத்தின் உச்சமட்டத்துக்கு செல்கையில் சமயப்பற்றுள்ள , கலாச்சாரம், மற்றும் பெறுமதி முறைமையை மதிக்கும் சமுதாயத்தையும் உருவாக்கும்.

26. இப் பொதுவான தொலைநோக்கினை அடித்தளமாகக் கொண்டு தொடர்பான அமைச்சுக்களும் நிதி திட்டமிடல் அமைச்சும், எமது அபிவிருத்தி கட்டமைப்பு மீதான பரந்தளவிலான விவாதத்தைத் தூண்டுவதற்கு நீண்ட கால அபிவிருத்தி உபாயம் மீதான கலந்துரையாடல் ஆவணமொன்றை வடிவமைத்தன. இது தொடர்பான பிரச்சனைகளை ஆக்க பூர்வமாக எடுத்தியம்புவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்ட விவாதத்தை பயன்படுத்தும் வகையில் இவ் ஆவணத்தை நான் அட்டவணைப்படுத்துகிறேன். இவ் உபாயத்தை சீர்படுத்துவதற்கு நாம் எமது தொழில்சார் நிபுணர்கள், தனியார்துறை, தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் சமுதாயம் என்பன தமது நேரத்தை அர்ப்பணித்து இவ் உபாயத்தை சீர்படுத்துவதற்கான பங்களிப்பையும் மேற்கொள்ளுமாறு வேண்டுகிறேன். சபாநாயகர் அவர்களே , முதற் தடவையாக அவ்வாறான ஆலோசனைச் செயல்முறையினூடாக அபிவிருத்தி உபாயத்தை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

## பிரிவு 111

## 2007 வரவு செலவுத்திட்ட உரை

27. சபாநாயகர் அவர்களே, துறைவாரியான முன்னுரிமைகள், தேவைகள் குறைந்து காணப்படும் பிராந்தியங்கள் மற்றும் மூலங்களின் கட்டுப்பாடுகள் என்பவற்றை இனங்கண்ட பின்பு 2007 வரவு செலவுத் திட்டம் 2006 - 2009 நடுத்தரகால கட்டமைப்பினுள் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் கட்டமைப்பினுள் முழு அளவிலான பிராந்திய அபிவிருத்தி உபாயம், தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் , மனித வளங்கள் மற்றும் ஏனைய துறைவாரியான நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைந்து சேர்க்கப்பட்டுள்ளன. எனினும், பல் பிராந்திய அபிவிருத்தியின் ஆரம்ப முயற்சிகள் கிராமிய வீதிகள், மின்வலு, நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம், வீடமைப்பு மற்றும் ஜீவனோபாய அபிவிருத்தி ஆகிய ஐந்து முன்னுரிமைத் துறைகளினுள் ஒருங்கிணைக்கப்படும். இந் நிகழ்ச்சித் திட்டங்கள், பொதுவான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணித்தலின் கீழ் உரிய முகவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் விரயம் மற்றும் இரட்டிப்பு வேலையை இல்லாமல் செய்யும் அதேவேளை வளங்களை பயன்தரும் வகையில் பயன்படுத்த முடியும். துணிகர முயற்சியில் புதிய வேலை ஆரம்பிக்க முன்னர் செலவு செய்யும் முகவர்களால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும். எமது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை வழிப்படுத்துவதற்கு செலவு செய்யப்படாத வளங்கள் இனிவரும் ஆண்டுகளுக்கு பயன்படுத்தப்படும்.

28. சபாநாயகர் அவர்களே, 2006 இன் முன்மொழிவுகள் ஒவ்வொன்றினதும் தற்போதைய நிலையை இங்கு தரப்படும் பின்னிணைப்பு 1 இல் விளக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். இம் முன்மொழிவுகளில் அநேகமானவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் சில மிதமான முன்னேற்றத்தைக் காட்டின. இவை 2007இல் முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். 2006இன் பொதுவான இறைச் செயலாற்றம் மற்றும் இது சம்பந்தமான பிரச்சனைகளும் நான் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இறை முகாமைத்துவ அறிக்கை 2007இல் விபரிக்கப்பட்டுள்ளது.

# பிரிவு IV

## முன்மொழிவுகள்

29. சபாநாயகர் அவர்களே, 2007இல் அரசின் அரசிறை, நடைமுறைச் செலவினத்திற்கான ரூ.597 பில்லியன் கொண்ட மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 584 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே அரசிறைக் கணக்கில் ரூ.13 பில்லியன் கொண்ட பற்றாக்குறை காணப்படுகிறது. இது விரும்பத்தக்கதொன்றாக விளங்குவதுடன் கட்டாயம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

### I. செலவினத்தைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள்

- சபாநாயகர் அவர்களே, கல்வி, சுகாதாரம், முக்கியமான அரச பணிகள் மற்றும் தேசிய பாதுகாப்புக்கான சம்பளங்களின் ஏற்பாடுகள் தவிர்க்க முடியாதவையாகும். எனினும், தொலைபேசிகள், எரிபொருள், நீர், ஊர்திகளின் திருத்த வேலைகள் மற்றும் பேணல், தளபாடம் மற்றும் கருவி என்பனவற்றின் கணக்கு மீது செலவழிக்கப்பட்ட செலவினம் திருப்தியளிக்கும் விதத்தைவிட அதிகரித்துக் காணப்படுகிறது. எனவே அவ்வாறான ஏற்பாடுகளின் மீது 2 சதவீத குறைப்பை நான் முன்மொழிகின்றேன்.
- குறைந்தளவில் செயலாற்றும் தொழில் முயற்சிகளின் இழப்புக்கள் அரசு தாங்கக் கூடியதைவிட அதிகரித்து காணப்படுகின்றன. உரிய முகவராண்மைகள் வருமானங்களை உருவாக்குவதற்கு கட்டாயமாக அவர்களின் சொந்தச் சொத்துக்களை பயன்படுத்துவதுடன் 2007இல் திறைசேரியிலிருந்து அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை 5 சதவீதத்தால் குறைக்க வேண்டும்
- சபாநாயகர் அவர்களே, ரூ.30 பில்லியனுக்குக் கூடுதலான செலவைக் கொண்ட உணவு, மருந்துகள், மற்றும் வளமாக்கி தொடர்பான கொள்வனவுகள் மீது கடுமையான கணக்காய்வுகளை மேற்கொள்ளுமாறு நான் முன்மொழிகின்றேன். இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் விசேட கண்காணிப்புப் பிரிவொன்று ஏற்படுத்தப்படும்.
- கவனிக்கப்படாத உட்கட்டமைப்பை பூர்த்தி செய்தல், வீதிகள், கிராமியக் குளங்கள், சந்தைகள், வீடமைப்புச் செயற்றிட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட பூர்த்தி செய்யப்படாத மற்றும் தரம் குறைந்த வேலை பலவற்றுக்கு அநேகமான மக்களும் ஊடகங்களும் கவனம் செலுத்தின. எனவே, இதற்குப் பொறுப்பான உரிய முகவர்கள் முதலில் அவ்வாறான வேலையை பூர்த்தி செய்யுமாறு வேண்டப்படுவதுடன் புதிய செயற்றிட்டங்களை தொடங்க முன்பு தொடர்பான வளங்களின் முழுமையான பயன்பாட்டை உறுதிப்படுத்துமாறும் வேண்டப்படுகின்றன.

அவ்வாறான வேலை பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே புதிய செயற்றிட்டங்ளுக்கான நிதியங்களை விடுவித்தல் மேற்கொள்ளப்படும்.

- அரச முகவர்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களை உறுதிப்படுத்துவதற்கு கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி வேலைக்குத் தேவையான நெருக்கமான மேற்பார்வை சமுதாயத்தின் நன்மை கருதியே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறான செயற்றிட்டங்களை கண்காணிப்பதற்கு மக்களின் தொடர்பான உள்ளூர்ப் பிரதேசங்களினுள் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கௌரவத்தினையும் , மதிப்பையும் உடைய ஆட்களை உள்ளடக்கும் மக்கள் விழிப்புக்குழுக்களை ஏற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

- அபிவிருத்திச் செயற்பாடுகளை வழிகாட்டுவதற்கு பிரதேசச் செயலாளர்கள் மற்றும் உள்ளூர் மாகாண சபைகளை இயலச் செய்யும் ஒவ்வொரு பிரதேசச் செயலகத்தின் முக்கிய அபிவிருத்திச் செலவினங்கள் இனங் காணப்பட்டுள்ளன. நிதியங்கள் பயன்தரும் வகையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவ்வாறான சகல செயற்றிட்டங்களும் சமுதாயப் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்தப்படும். 2007இல் முக்கிய முன்னுரிமையாக கிராமிய அபிவிருத்தி விளங்குவதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் 50 சதவீதத்தை வீதிகளுக்குப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- இரட்டிப்பு மற்றும் அடுத்த ஆண்டுக்குக் கொண்டு செல்லும் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு 2007இல் மூலதன வாக்குகளின் கீழான குறைச் செலவினம் 8 சதவீதமளவில் இருப்பதை நான் காண்கிறேன்.

## II. அரசிறை முன்மொழிவுகள்

### 1. துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை

சபாநாயகர் அவர்களே, அடுத்த மூன்று ஆண்டுகளில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் விரைந்த அபிவிருத்திக்கு அரசு கடப்பாடு கொண்டுள்ளது. இச் செயற்றிட்டங்களின் உள்நாட்டுச் செலவினத்தை நிதியிடக் கூடிய வகையில் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையை 2.5 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். எனினும் உயர்பெறுமதி கூட்டலைக் கொண்டுள்ள கைத்தொழில்களுக்கும், மருந்தாக்கலுக்கும் இறக்குமதி செய்யப்படும் தெரிவுசெய்யப்பட்ட பொறி மற்றும் கருவிக்கு 2.0 சதவீதம் கொண்ட சலுகை வீதத்தை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## 2. பெறுமதிசேர் வரி மற்றும் உற்பத்தி விசேட ஏற்பாட்டு வரி

இவ்விரு வரிகளும் 2007இல் ரூ.306 பில்லியனுக்கும் கூடுதலான தொகையை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நாம் பெறுமதிசேர் வரி முறைமையில் நடைமுறையிலுள்ள சட்டக் குறைபாடுகளை ஏற்கனவே நீக்கியுள்ளோம். மறைமுகமாக இழக்கப்படுகின்ற பணத்தை மேலும் கட்டுப்படுத்தும் பொருட்டு, உள்ளீட்டு வரிக்கான வரவு வைத்தலை உண்மையான உள்ளீட்டு வரி அல்லது செலுத்தப்பட்ட வெளியீட்டு வரியின் 85 சதவீதம் அல்லது அனுமதிக்கக் கூடிய உள்ளீட்டு வரிகள், இவற்றில் எது குறைவானதோ அதற்கு மட்டுப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன். உந்து ஊர்திகளுக்கு செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி உள்ளீட்டு வரவு வைத்தலுக்கு அனுமதிக்கப்படமாட்டாது. ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஏனைய பணிகளை வழங்குவோர்க்கு செலுத்தவேண்டிய பெறுமதிசேர் வரியின் 1/3பங்கை பிடித்து வைக்குமாறு சகல அரச முகவர்களுக்கும் நான் முன்மொழிகின்றேன். பெறுமதிசேர் வரி விதிக்கத்தக்க புரள்வுக்கும் குறைவாகத் தொழிற்படும் சிறு வழங்குனர்கள் இப்பிடித்து வைக்கும் வரிக்கு பொறுப்பாக மாட்டார்கள்

குறைத்து மதிப்பிடலின் தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு, பெறுமதிசேர் வரி மற்றும் உற்பத்தி (விசேட ஏற்பாட்டு) வரியின் கணிப்பீட்டில் பிரயோகிக்கத்தக்க மிகை விலையை 10 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு முன்மொழிகிறேன். “செஸ்”வரி கணிப்பீட்டிற்காகவும் இதே மிகை விலை விதிமுறை பின்பற்றப்படும். காபனீரூட்டப்பட்ட பானங்கள் மற்றும் பூச்சுக்கள் 5 சதவீத உற்பத்தி வரிக்கு உட்படுத்தப்படும்.

பெறுமதிசேர் வரித் தளத்தை விரிவாக்கும் பொருட்டு, பெறுமதிசேர் வரி விதிக்கத்தக்க மட்டமான ரூ.1.8 மில்லியனுக்குச் சற்றுக் குறைவாகவும், பெறுமதிசேர் வரி நோக்கங்களுக்காக பதிவு செய்யப்படாது தொடர்ந்து விரிவடைந்துவரும் எந்தவொரு சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறைக்கு 3 ஆண்டு காலப்பகுதிக்கு அல்லது மொத்தப் புரள்வு ரூ.2.5 மில்லியனை அடையும் வரையில் இதில் எது முதலில் நிகழ்கின்றதோ அதுவரை அதன் புரள்வு மீது 5 சதவீதம் கொண்ட மீளளிக்கப்படாத பெறுமதிசேர் வரியை நான் அறிமுகப்படுத்த முன்மொழிகின்றேன்.

## 3. வருமானவரி

இவ்வாண்டில் வருமானவரி அரசிறை 2005இன் மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்துக்கு அதிகரித்திருப்பதை

நாம் காண்கின்றோம். நாம் இவ்விகிதத்தை 4 சதவீதமளவுக்கு அதிகரித்து வருமான வரியிடலின் தென்கிழக்காசிய மட்டத்தை அடைவதை நோக்காகக் கொண்டுள்ளோம். எனவே நான் பின்வருவனவற்றை முன்மொழிகிறேன்.

அ. காப்புறுதிக் கம்பனிகள் தற்போது ஆயுள் காப்புறுதி வியாபாரத்திலிருந்து வரும் அவற்றின் இழப்புக்களை பொதுக் காப்புறுதி வியாபாரத்திலிருந்து வரும் இலாபங்களுக்கெதிராக எதிரீடு செய்கின்றன. வரி நோக்கங்களுக்காக இவ்விரு தொழிற்பாடுகளையும் வெவ்வேறாக கருதப்பட வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

ஆ. மூலதனச் சந்தை அபிவிருத்தியின் நன்மைக்காக, ஒவ்வொரு கம்பனியும் பகிர்ந்தளிப்புக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாபத்தில் 50 சதவீத பங்கிலாபக் கொடுப்பனவை நோக்காகக் கொள்ள வேண்டுமென நான் கருதுகிறேன். இப்போக்கில் சகல கம்பனிகளும் செயற்படும் பொருட்டு 1/3 இற்கும் குறைவான பங்கிலாபக் கொடுப்பனவைக் கொண்டிருக்கும் எந்தக் கம்பனியும் 1/3 இற்கும் பங்கிலாபக் கொடுப்பனவுக்குமிடையிலான வித்தியாசத்திற்கு 15 சதவீதத்தில் வரிவிதிக்கப்பட வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

இ. 2006 வரவு செலவுத் திட்டத்தில், ரூ.5 மில்லியனுக்கும் குறைவான வரி விதிக்கத்தக்க இலாபத்தை உருவாக்கும் சிறு கம்பனிகளுக்கு வரி வீதத்தை நான் 15 சதவீதத்துக்கு குறைத்தேன். எனினும், இக் கம்பனியானது துணைக் கம்பனியாகவோ அல்லது இணைக்கம்பனியாகவோ இருக்குமிடத்து பிரயோகிக்கத்தக்க வரிவீதம் வழமையான வீதமாக இருக்க வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

ஈ. வங்கித் தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் விசேட கடன் இழப்பு ஏற்பாடுகளுக்கான வருமானவரி நிவாரணத்தை அனுமதிப்பதன் மூலம் அரசு கிட்டத்தட்ட ரூ.4 பில்லியனை இழக்கின்றது. கடன் இழப்பு ஏற்பாடுகள் , வரி ஆண்டு இறுதியில் வெளிநின்ற கடன் அளவின் 1 சதவீதம் அல்லது இழப்புக்கான உண்மையான ஏற்பாடு, இதில் எது குறைவானதோ அதற்கு மட்டுப்படுத்த நான் முன்மொழிகின்றேன்.

உ. பொருளாதாரப் பணிக் கட்டணத்தினை வருமான வரிக்கெதிராக எதிரீடு செய்ய முடியும். எனவே வரித் தளத்தை மேலும் விரிவாக்கும் பொருட்டு, பொருளாதாரப் பணிக் கட்டணத்துக்கான வரிவிதிக்கத்தக்க கீழ்மட்டப் பொறுப்பை ரூ.40 மில்லியனிலிருந்து ரூ.30 மில்லியனுக்குக் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். பொருளாதாரப் பணிக் கட்டணம் 3ஆண்டு அறவிடப்படாமை, தயாரிப்புக் கைத்தொழில் தொடர்பானவற்றுக்கு மட்டுமே பிரயோகிக்கப்படும். எனினும், மேலும்

நிவாரணம் வழங்குவதற்காக பொருளாதாரப் பணிக் கட்டணத்தை எதிரீடு செய்யும் காலப்பகுதி 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்படுகிறது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரப் பணிக் கட்டண அறவீடு உந்து உருளி மற்றும் குடிவகை தவிர்ந்தவைக்கு 0.25 சதவீதத்துக்குக் குறைக்கப்படும். சில்லறை மட்டமளவிலான விநியோகஸ்தர்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரப் பணிக் கட்டணம் 0.05 சதவீதத்திற்குக் குறைக்கப்படும்.

ஊ. குறிப்பாக நடுத்தர அளவிலான பங்குடைமைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ரூ.600,000 கொண்ட வரியற்ற கீழ்மட்ட எல்லை அறிமுகப்படுத்தப்படும்.

எ. கூறு நம்பிக்கையினூடாக சேமிப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு, கூறு நம்பிக்கையின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான முத்திரைத் தீர்வை நீக்கப்படுவதுடன் பங்குகளின் விற்பனையிலிருந்து பெறப்படும் வருமானம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். கூறு நம்பிக்கை மீது விதிக்கப்பட்ட சமூகப் பொறுப்பாண்மை அறவீடு 0.5 சதவீதத்துக்கு குறைக்கப்படும்.

## 4. கடவுச்சீட்டு மற்றும் விசாக் கட்டணம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், வெளியிடங்களிலுள்ள விண்ணப்பதாரிகளின் வசதிக்காக அதன் பிராந்திய அலுவலகங்களை விரிவாக்கியதைத் தொடர்ந்து கடவுச்சீட்டொன்று 10 நாட்களுக்குள் வழங்கப்படும். எனவே, சாதாரணமான கடவுச்சீட்டுக் கட்டணம் ரூ.3,500இலிருந்து ரூ.2,500இற்குக் குறைக்கப்படும். ஒரு வேலை நாளினுள் வழங்கப்படும் கடவுச்சீட்டு மீதான கட்டணம் ஆவணங்களைச் சரிபார்த்தலில் ஏற்படும் செலவைக் கருத்திற் கொண்டு ரூ.7,500 ஆக நிர்ணயிக்கப்படும்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிக்கு ஐ.அ.டொலர் 10 ஐக் கொண்ட விசாக் கட்டணம் விமானப் பிரயாணச் சீட்டைக் கொள்வனவு செய்யும் வேளையில் விதிக்கப்படுவதுடன் விசா ஒழுங்கு விதியை மீறுவதற்கான குற்றப் பணமும் அதிகரிக்கப்படும். இலங்கையிலுள்ள வங்கியொன்றில் ஐ.அ.டொலர் 25,000 இற்கும் கூடுதலான வெளிநாட்டுப் பெறுமதியில் 3ஆண்டுகளுக்கான நிலையான வைப்பை ஆரம்பித்தால் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையருக்கான இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழுக்கு அறவிடப்படும் கட்டணம் குடும்பமொன்றுக்கு ரூ.400,000 இலிருந்து ரூ.200,000 இற்குக் குறைக்கப்படும். 3 ஆண்டு நிலையான வைப்புக்களுக்கான பெறுமதி ஐ.அ.டொலர் 50,000ஐ விஞ்சினால் எதுவித கட்டணம் அறவிடப்படமாட்டாது.

5. **மாகாணசபை அரசிறை**

கடந்த பல ஆண்டுகளாக மாகாண சபைகளால் உருவாக்கப்பட்ட சராசரி அரசிறை கிட்டத்தட்ட மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதமாகும். 2007இல் அரசின் மாற்றல்கள் அவற்றின் மதிப்பிடப்பட்ட அரசிறையான ரூ.20 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.100 பில்லியன் அளவில் மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரமளித்து ஒப்படைக்கப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகள் மாகாண மட்டத்தில் முழுமையான அளவில் பயன்படுத்தப்படவில்லை. உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப் படும் வதிவிடம் மற்றும் வியாபாரத் தலங்களுக்கான வாடகையை கணிப்பிடுவதற்காக உண்மையான பெறுமதியை பிரயோகிக்க வேண்டியுள்ளது. மாகாண சபைகளால் மேற்கொள்ளப்படும் புரள்வு வரியின் சேகரிப்பு மேம்படுத்தப்பட வேண்டும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஆகக் குறைந்தது மொ.உ.உற்பத்தியின் 1 சதவீதத்திற்காவது அரசிறையை அதிகரிப்பதற்கு, மாகாண சபைகளுக்கு உதவும் பொருட்டு மாகாண சபைகள், நிதியியல் ஆணைக்குழு மற்றும் திறைசேரியுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன. அடுத்த ஆண்டில் மட்டும் ஆகக் குறைந்தது ரூ.2 பில்லியனை மேலதிகமாக அரசிறையாகப் பெற நான் இலக்கிட்டுள்ளேன்.

6. **செலுத்தத் தவறிய வரியின் சேகரிப்பு**

சபாநாயகர் அவர்களே, குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறையால் எதிர்கொள்ளப்பட்ட இடர்பாடுகளை ஏற்றுக்கொண்டு கடந்த 5 ஆண்டுகளாக செலுத்தத்தவறிய எந்த வரி மீதும் ஒன்று சேர்ந்த சகல குற்றப்பணங்களையும் தளர்த்துவதற்கும் அவ்வாறான சகல நிலுவைகளையும் தவணை முறைகளில் தீர்ப்பதற்கு 3 ஆண்டு காலப்பகுதியை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இவ் ஒழுங்கு முறைக்கு இணங்கி ஒழுகத் தவறும் எவரும் குற்றப் பணத்துடன் முழுத் தொகையையும் செலுத்துவதற்கு பொறுப்பாவார்.

7. **பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் தீர்வை**

மோசமான உட்கட்டமைப்பு குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு நாம் அபிவிருத்தி குறைந்த பிராந்தியங்களுக்கு கூடிய நிதியங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும். எனவே, சகல வரிகள் மற்றும் சுங்க மையத்தில் விதிக்கப்பட்ட தீர்வைகள் உள்ளடங்கலாக உந்து ஊர்திகளின் பெறுமதி மீது அவை தொடர்பாக நிதியியற் சட்டத்தின் கீழ் 2.5 சதவீத தீர்வையை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். உந்து ஊர்தியைக் கொள்வனவு செய்யும் ஆற்றலுடையவர் களிடமிருந்து ஆகக் குறைந்தது ஒரு நாள் ஜீவனோபாயத்தையாவது கொண்டிராதவர்களுக்கு பணத்தை மாற்றுவது எமது சமூகப் பொறுப்பாகும்.

## III. சேமிப்பு மற்றும் முதலீட்டுக்கான ஊக்குவிப்புக்கள்

**1. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பெறும் வட்டி மீதான பிடித்து வைக்கும் வரி**

சபாநாயகர் அவர்களே, தற்போது ரூ.108,000 இற்கும் அதற்குக் கூடுதலான வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி தனிப்பட்ட நபரின் வைப்புக்களுக்கு 10 சதவீதத்திற்குட்பட்டதாகும். இதை ரூ.300,000இற்கு உயர்த்துவதற்கும் ரூ.300,000 - ரூ.600,000 இற்கிடையேயான வட்டி வருமானத்திற்கான வரி வீதத்தை 5 சதவீதத்திற்குக் குறைப்பதற்கும் முன்மொழிகின்றேன். மொத்த வருமானம் ரூ.600,000 ஐ விஞ்சுமிடத்து வட்டி வருமானத்தில் தங்கியிருப்போருக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ.300,000ஐ விஞ்சிய வட்டிக்கு 10 சதவீதமான இறுதி பிடித்துவைக்கும் வரி பிரயோகிக்கப்படும்.

**2. ஓய்வுபெறும் ஊழியர்களின் தொழில் முடிவுறுத்தலிலிருந்து கிடைக்கும் நன்மைகள் மீதான வரிவிதிப்பு**

20 ஆண்டுகள் பணிக்குப்பின் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு நிவாரணத்தை வழங்கும் பொருட்டு தொழில் முடிவுறுத்தலிலிருந்து கிடைக்கும் நன்மைகளுக்கான வரியற்ற தொகையினை ரூ.2 மில்லியனிலிருந்து ரூ.5.0 மில்லியனுக்கு உயர்த்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். ஏனையோருக்கான கீழ்மட்டம் ரூ.1 மில்லியனிலிருந்து ரூ.2.0 மில்லியனுக்கு உயர்த்தப்படுவதுடன், வரிச் சுமையைக் குறைப்பதற்காக வரிப் பிரிவுகளும் அதிகரிக்கப்படும்.

**3. ஊழியர் பங்குகளுக்கான வரி நிவாரணம்**

தற்போது ஊழியர் பங்கு வியாபாரத்தினூடாக ஊழியர்களுக்குச் சொந்தமான பங்குகளிலிருந்து கிடைக்கும் மூலதன இலாபங்கள் மற்றும் தொழில் நிலை நன்மைகள் வரிக்குட்படுகின்றன. அவர்களின் வியாபார அபிவிருத்தியில் தொழில் தருநர்கள் - ஊழியர்கள் பங்குடைமையை ஊக்குவிப்பதற்காக மூலதன இலாபங்கள் மற்றும் தொழில்நிலை நன்மைகள் ஆகிய இரண்டின் மீதான வரியை முற்றாக நீக்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

**4. தொழில்சார் நிபுணர்களுக்கான ஊக்குவிப்புக்கள்**

எனது கடந்த வரவு செலவுத் திட்டத்தில், வெளிநாட்டு நாணய வருவாய்களுக்கான பணிகளில் ஈடுபடுவதற்கு தொழில்சார் நிபுணர்களுக்காக வரிச்சலுகையை நான் வழங்கினேன். வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கும் தொழில்சார் நிபுணர்கள் எமது வங்கிகளில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதை இயலச் செய்வதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் வழங்கப்பட்டுள்ளன. எமது தொழில்சார் நிபுணர்களின் சர்வதேச தரத்தை மேலும் அதிகரிப்பதற்கு சருவதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தரமான தொழில்சார்

தகைமைகளையும் அதற்குக் கூடியவற்றையும் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட செலவினத்தைக் கழிக்கக்கூடிய செலவினமாக அனுமதிக்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

5. **பேருந்துப் போக்குவரத்து**

தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்கள் பேருந்துப் போக்குவரத்துப் பணியின் கிட்டத்தட்ட 70 சதவீதத்தை நாளாந்தப் பயணிகளுக்கு வழங்குகின்றனர். பயன்படுத்தப்பட்ட பேருந்திற்குப் பதிலாக வழித்தடத்திற்கான அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கும் பேருந்துச் சொந்தக்காரர்கள் பேருந்தை இறக்குமதி செய்யும்போது தீர்வை மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்குமாறு நான் முன்மொழிகின்றேன். பயணச்சீட்டு பொறிகள் மீதான பெறுமதிசேர் வரி 5 சதவீதத்திற்குக் குறைக்கப்படும்.

6. **வீடமைப்பு**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கடன்பெற்ற குறைந்த வருமானமுடைய கிட்டத்தட்ட 5,000 குடியிருப்பாளர்களுக்கு உறுதியை வழங்கி செலுத்தப்படாத கடன்களை பதிவழிக்குமாறு நான் முன்மொழிகின்றேன். கொழும்பில் சேரி வாசிகளுக்கான வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு 60,000 வீடமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் அடுத்த மூன்று ஆண்டுகளிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். சேரி வசிப்பிடம் ஏனைய பல மாநகர சபைப் பகுதிகளிலும் காணப்படும் ஒரு பொதுவான பிரச்சனையாகும். எனவே, இப் பிரதேசங்களில் சேரி வாசிகளின் வீடமைப்புக்கான தடைகளைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாட்டு முகவர்கள் , கொடைஞர்கள் மற்றும் அரசசார்பற்ற முகவர்கள் அழைக்கப்படுவர். சேரி வாசிகளின் ஈடுபாட்டை பிரதிபலிப்பதற்கு இவர்களிடமிருந்தான பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. இச் செயல்முறையில் பங்கேற்பதற்கு தனியார்துறை, கொடைஞர்கள், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு கட்டடவாக்கம் மற்றும் சமூக வீடமைப்பு தொடர்பாக பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய உள்நாட்டு வரிகளை தள்ளுபடி செய்வதற்கான திட்டமொன்று உருவாக்கப்படும்.

7. **சுகாதாரம்**

சபாநாயகர் அவர்களே, எமது நாட்டினுள் முன்னேற்றமான மருத்துவ வசதிகளின் கிடைப்பனவை மேம்படுத்தும் பொருட்டு உயர் தொழில்நுட்பம் கொண்ட கருவி மற்றும் பொறி மீதான பெறுமதிசேர் வரியை 5 சதவீதத்திற்குக் குறைக்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

8. **அரச மருந்தாக்கல் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் / அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் முகாமைப்படுத்தும் மருந்துக் களஞ்சியங்களை நிறுவுதல்.**

அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருந்துகளின் செலவு ஏறத்தாள ரூ.12 பில்லியன்காளக இருப்பதுடன் ஒவ்வொரு ஆண்டும் இது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.ஆகவே பெரிய வைத்தியசாலைகளின் மருந்து தேவைப் பாடுகளை வழங்குவதற்காக அரச மருந்தாக்க தயாரிப்புக் கூட்டுத்தாபனம் / அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் முகாமைப்படுத்தப்படும் மருந்துக் களஞ்சியங்களை ஏற்படுத்த முன்மொழியப்படுகின்றது. அத்தகைய களஞ்சியங்கள் இன்றியமையாத மருந்துகளை போட்டி விலைகளில் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் மருந்தகங்களாகவும் பணியாற்ற முடியும். வைத்தியசாலைகளுக்கு இன்றியமையாத மருந்துவகைகளை வழங்கும் அரச மருந்தாக்கல் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் இயலளவு இறக்குமதியைக் குறைக்கும் விதத்தில் அதிகரிக்கப்படும்.

## 9. தர நியமங்களை விதித்தல்

இலங்கைக் கட்டளைகள் பணியகத்தின் “இறக்குமதி சான்றுபடுத்தும் திட்டம்” தரம் குறைவான பொருட்கள் நாட்டினுள் நுழையாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக விரிவுபடுத்தப்படும். சகல இனிப்புப் பொருட்கள், சாக்கலேட்டை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், மீன் இறைச்சி போன்றவற்றை உள்ளடக்கும் உணவுப் பொருட்கள் மற்றும் காலாவதி திகதியை அண்மிக்கும் பொருட்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் உணவு மதியுரைக் குழுவால் ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்படும். சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொலித்தீன் பைகளின் பாவனையை ஊக்கமிழக்கச் செய்வதற்கு அவ்வாறான பொருட்கள் மீது 5 சதவீத கலால் வரி விதிக்கப்படும்.

## 10. உள்நாட்டில் பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில்களை மேம்படுத்தல்

சபாநாயகர் அவர்களே, நாம் உள்நாட்டு வியாபாரத்தில் பெறுமதி கூட்டலின் உயர் அளவை ஊக்குவிக்கிறோம். இது சம்பந்தமாக எதிர்காலத்தில் செயற்றிட்டம் தொடர்பான மூலப்பொருள் உள்நாட்டில் போதிய அளவிலோ அல்லது தேவைப்படும் தரத்திலோ கிடைக்காதவிடத்து அம் மூலப் பொருட்களுக்கு தீர்வையற்ற இறக்குமதிகளின் அடிப்படையில் முதலீட்டுச்சபை ஒப்புதல்கள் வழங்கப்படும். அவ்வாறான முதலீட்டுச்சபைச் செயற்றிட்டங்கள் உள்நாட்டுக் கைத்தொழில்களிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பெறுமதிசேர் வரியைப் பிற்போடும் வசதி வழங்கப்படும். உள்நாட்டுக் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யும் உள்ளீடுகளுக்கு முதலீட்டுச்சபைக் கம்பனிகள் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்வதை வசதிப்படுத்தும் பொருட்டு விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்று மத்திய வங்கியால் திறக்கப்படும்.

## 11. நிர்மாணக் கைத்தொழில்

கொழும்பில் மேம் பாலங்கள் மற்றும் 10,000 வீடுகளைக் கொண்ட நகரங்களின் நிர்மாணம் டிபிரி அடிப்படையில் உள்நாட்டு நிர்மாணக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்டமை அதன் இயலாற்றல்களில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவற்றின் காசுப் பாய்ச்சலை மேம்படுத்துவதற்காக நிர்மாணக் கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட பொறி மீதான பெறுமானத் தேய்வுப் படியை 12.5 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்துக்கு அதிகரிப்பதற்கும் அவற்றின் நிர்மாணக் கட்டணம் மீதான பிடித்து வைத்தல் வரியை 5 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்துக்கு குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். பாவிக்கப்பட்ட நிர்மாணப் பொறி மற்றும் கருவியின் இறக்குமதிக்கான உரிமப் பத்திரம் பெறும் தேவைப்பாடுகள் தளர்த்தப்படும். சேகரிப்பு நடைமுறையை இலகுவாக்குவதற்கும் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதியத்தைப் பலப்படுத்தும் பொருட்டும் நிர்மாணம் மீது விதிக்கப்பட்ட “செஸ்” வரி பிடித்து வைத்தல் வரியுடன் சேர்த்து சேகரிக்கப்படும். தேர்ச்சிகள் பற்றாக்குறைகளை நிரப்புவதற்கு தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அமைப்புக்களூடாக இணைந்த தேர்ச்சிகளை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அரச செயற்றிட்டங்களில் ஈடுபடும் நிர்மாணக் கம்பனிகள் சீமெந்தை இறக்குமதி செய்வதற்கு தீர்வைச் சலுகைகள் வழங்கப்படும்.

## 12. லங்கா புத்திர அபிவிருத்தி வங்கியின் உருவாக்கம்

சபாநாயகர் அவர்களே, முதன்மையான அபிவிருத்தி வங்கியொன்றினை நிறுவும் பொருட்டு ரூ.5 பில்லியனுக்குக் கூடுதலான மூலதனமொன்றினை உறுதிப்படுத்தும் விதத்தில் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் அனைத்து பிராந்திய வங்கிளையும் எஸ்.எம்.ஈ வங்கி என அழைக்கப்படும் சிறிய நடுத்தர தொழில் முயற்சி வங்கியினையும் லங்காபுத்திர வங்கியுடன் ஒன்றிணைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இம் மூலதனத்தினை 5 ஆண்டுகளுக்குள் ரூ. 10 பில்லியனுக்கு உயர்த்துவதே எனது தொலை நோக்காகும். எஸ்.எம்.ஈ வங்கியினதும் பிராந்திய வங்கிகளினதும் தற்போதுள்ள கிளையமைப்பும் அவற்றின் ஊழியர்களும் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கிக்குள் ஈர்த்துக் கொள்ளப்படுவர். தேசிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அரச முகவராண்மைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் இவ் வங்கி வலையமைப்பின் மூலம் நன்மை பெறுநர்களுக்கு வழிப்படுத்தப்படும்.

## 13. தேசிய செல்வக் கூட்டுத்தாபனம்

சபாநாயகர் அவர்களே, முதன்மையான அரச சொத்துக்கள் நாட்டின் அபிவிருத்திக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படாதிருக்கிறது. பெறுமதிமிக்க

நிலங்கள் அவை தொடர்பான உரிய மதிப்பீடுகளைப் பெறாமலே பல்வேறு செயற்றிட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டு வருகின்றன. தனியார் மயப்படுத்தப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள அரசாங்கத்தின் பங்குகள் சரியான முறையில் முகாமைப்படுத்தப்படவில்லை. மறுபுறத்தில் எமது கிராமிய மக்கள் மற்றும் அரசு அதேபோன்று தனியார் துறையிலிருந்து ஓய்வு பெறுவோரில் பெரும்பான்மையோர் வருமானத்தை ஈட்டுவதற்கான வழிவகைகள் உருவாக்கப்படவில்லை. ஆகவே நான் தேசிய செல்வக் கூட்டுத்தாபனமொன்றினை ஏற்படுத்த முன்மொழிகின்றேன். இது அரசாங்கத்திற்குச் சொந்தமான பிரதான நிலங்களையும் ஏனைய சொத்துக்களையும் சொந்தமாக்குவதுடன் அத்தகைய சொத்துக்களை வருமானத்தை உருவாக்கப் பயன்படுத்தும். இலங்கையர்கள் ஆகக் குறைந்த வைப்பான ரூ.500 உடன் வருமான அலகொன்றினை வாங்குவதற்கு அனுமதிக்கப்படுவர். இத்தொகையினை அதிகரிக்க முடியும். அத்தகைய முதலீடுகளுக்காக திறைசேரி உண்டியல் வீதத்திலும் பார்க்க கூடுதலான வீதத்தில் ஒரு கிரமமான ஆண்டு வருமானத்தினை அரசாங்கம் உத்தரவாதப்படுத்தும்.

**14. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்**

சபாநாயகர் அவர்களே, பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரச ஊழியர்களுக்கு சிறந்த மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக இந் நிதியமானது பொது வைத்தியசாலை முறையை அபிவிருத்தி செய்யும். இது பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்காகத் தேவைப்படும் இடர்நேர்வுக் காப்புறுதியினை வழங்குவதற்காக சிவில் குழப்ப மற்றும் கிளர்ச்சி நிதியத்தினையும் ஈர்த்துக் கொண்டிருக்கிறது. இந் நிதியமானது மீள் காப்புறுதிச் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டுள்ளது. ஆகவே அரசிற்கு முழுச் சொந்தமான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் 50 சதவீதமான மீள் காப்புறுதியினை மேற்கொள்வதற்கு பணிக்கப்பட வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

**15. மின்வலு மற்றும் கைத்தொழில் எரிபொருள் மீதான வரிகள்**

மின்வலு மற்றும், கைத்தொழில் எரிபொருள் மீதான உயர்ந்த தீர்வையின் காரணமாக எமது கைத்தொழில்களில் பல தமது போட்டித் தன்மையினை மிக விரைவாக இழந்து வருகின்றன. புதிய வலுப்பொறிகள் மின்வலுவின் நீண்டகாலச் செலவினை குறைக்கக் கூடியதாகவுள்ளவேளையில், கடுமையான போட்டித் தன்மையினைக் கருத்திற்கொண்டு கிட்டிய காலத்தில் தயாரிப்பு மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட செய்முறைகளை ஊக்குவிப்பதற்காக போட்டித் தன்மை வாய்ந்த உள்ளீடுகளை வழங்குவது அவசியமானதாகும். ஆகவே பெறுமதிசேர் வரியிலிருந்து பார எரிபொருள் எண்ணெய், உலை எண்ணெய் மற்றும் மின்வலு என்பனவற்றிற்கு

விலக்களிக்குமாறு நான் முன்மொழிகின்றேன். இலங்கை மின்சபையின் காசுப் பாய்ச்சல் சுமையினைக் குறைப்பதற்காக ஆதனால் இறக்குமதி செய்யப்பட்ட பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகளுக்கும் பெறுமதிசேர்வரியிலிருந்து விலக்களிக்கப்படும். இதன்படி இம் மாற்றங்களை பிரதிபலிக்கின்ற புதிய மின்வலு தீர்வை அட்டவணையொன்றும் கைத்தொழில் தீர்வைகள் ஏறத்தாள ஐ.அ.டொலர் 0.07 சதத்திற்கு சமமான தொகைக்கு குறைக்கின்றமையும் வெளியிடப்படவுள்ளன.

## 16. உள்ளூர் திரைப்படத் தொழில்

சபாநாயகர் அவர்களே, தயாரிப்பாளர்கள், விநியோகத்தர்கள், திரையிடுவோர் மற்றும் படத் தயாரிப்பிற்கான ஆய்வுகூட வசதிகளை வழங்குவோர் ஆகியோரை பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்குமாறு நான் முன்மொழிகின்றேன். திரைப்படத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் இறக்குமதி மீதுான சுங்கத் தீர்வை அகற்றப்படும். அத்தகைய விடயங்கள் மீதான பெறுமதிசேர் வரி 5 சதவீதத்திற்குக் குறைக்கப்படும். மேலதிக செய்முறைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் திரைப்படங்கள் அல்லது தொலைக்காட்சி நாடகங்கள் மீண்டும் இலங்கைக்கு எடுத்துவரப்படும் பொழுது துறைமுக வானூர்தி நிலைய தீர்வை, சுங்கத் தீர்வை, அல்லது பெறுமதிசேர் வரி என்பனவற்றிற்கு உள்படுத்தப்படமாட்டா. மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய திரைப்பட மாளிகைகள் எதுவும் புதிதாக நிருமாணிக்கப்படுமிடத்து அதற்கு 10 ஆண்டு வரி விடுப்பு வழங்கப்படும். ஏற்கனவேயுள்ள திரைப்பட மாளிகைகள் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்ப வசதிகளுடன் தரமுயர்த்தப்படுமிடத்து அவை அனைத்திற்கும் 5 ஆண்டு வரி விடுப்பு வழங்கப்படவுள்ளது. எந்தவொரு திரைப்படத்தினதும் தயாரிப்புச் செலவினையும் குறைப்பதற்காக வழங்கப்படும் வரி நிவாரணம் ரூ.5 மில்லியனிலிருந்து ரூ. 25 மில்லியனுக்கு அதிகரிக்கப்படும்.

## 17. “குறுஷ்ஷி நவோதய”

சபாநாயகர் அவர்களே, நாங்கள் மா, சீனி, அரிசி, வெங்காயம், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் மீது தீர்வைகளை விதித்திருப்பினும் பால்மா மீது இன்னமும் தீர்வைத் தளர்த்தல்களை வழங்கியே வருகின்றோம். கொள்கை ரீதியாக எமது வேளாண்மையாளர்கள் சுய நிறைவினை அடைவதனை ஊக்குவிப்பதற்காகவும் உணவுப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்காகவும் இத் தளர்த்தல்களை படிப்படியாக அகற்ற வேண்டுமென முன்மொழிகின்றேன். உயர் பெறுமதி கொண்ட வேளாண்மை மற்றும் பதனிடல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக, அனைத்தையுமுள்ளடக்கிய பொதியிடல் கொடுகடன் வழங்கல், பொதிகள் மற்றும் கருவிகளுக்கான வரித்தள்ளுபடி மற்றும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வேளாண்மையாளர்களுக்கான விரிவாக்கப் பணிகள் என்பனவற்றை நடைமுறைக்கிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன். இப்பொதியானது

வேளாண்மை, விலங்கு வளர்ப்பு , நன்னீர் மீன்பிடி, இறால் வளர்ப்பு, பழவகை மற்றும் காய்கறிகள், மலர் வளர்ப்பு, சேதன வளமாக்கி விதை விருத்தி போன்றவற்றிற்கு கிடைக்கத்தக்கதாக இருக்கும். அடுத்த மூன்று ஆண்டுகளில் இப்பொதியின் கீழ் கடன்களை வழங்குவதற்கு ஒவ்வோராண்டிற்கும் ரூ.2 பில்லியனை ஒதுக்குமாறு நான் முன்மொழிகின்றேன். அத்தகைய கடன்களை 8 சதவீத வட்டியில் வழங்குவதற்காக வங்கிகளுடன் செலவினைப் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் செஸ் வரியிலிருந்து ரூ.300 மில்லியனை வழங்குமாறு முன்மொழிகின்றேன். அரிசிமா உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு அரிசி ஆலையாளர்களுக்கு இப்பொதியின் கீழ் மேலதிக ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும். அரிசி ஆலைகளை நவீனமயப்படுத்துவதற்காக உள்ளூரில் தயாரிக்கப்படாத குறிப்பிட்ட பொறிகள் பெறுமதிசேர் வரி மற்றும் இறக்குமதி தீர்வைகளிலிருந்து விலக்கப்படும். எமது சொந்தப் பயிர்ச்செய்கை முறையை அடிப்படையாகக் கொண்ட பழவகை மற்றும் காய்கறிச் செய்கையினை அபிவிருத்தி செய்வதற்காக வரி மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களினூடாக மையப் பண்ணைகள் ஊக்குவிக்கப்படும்.

## 18. பெருந்தோட்ட வேளாண்மை

வேளாண்மைப் பதனிடல் மற்றும் பெறுமதி கூட்டல் என்பனவற்றிலிருந்தான வருமானம் உள்ளடங்கலான வேளாண்மை வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றின் பதனிடலுக்காக மேலும் ஊக்குவிப்புக்களை வழங்க நான் முன்மொழிகின்றேன்.

- தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடல் கைத்தொழில்களுக்கு ஏற்புடைத்தான பொருளாாரப் பணிக்கட்டணங்கள் 0.5 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதத்திற்குக் குறைக்கப்படும்.
- தேயில, இறப்பர் மற்றும் தெங்குப் பதனிடல் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொறிகள் மீதான பெறுமதிசேர் வரியும் சுங்கத் தீர்வைகளும் விலக்கப்படும்.
- மின்வலுவின் மிதான பெறுமதிசேர் வரியின் குறைப்பும் இக் கைத்தொழிலுக்கு நன்மை பயக்கும்.

## 19. மீன்பிடி

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்ட நன்னீர் மீன்பிடி அதேபோன்று அலங்கார மீன் வளர்ப்புப் பரிவர்த்தனை என்பனவற்றிற்கான வசதிகள் உட்பட மீன் சந்தை கட்டடத் தொகுதியின் கட்டுமான வேலைகள் தொடங்கியுள்ளன. “தியவறா” வீடமைப்புச் செயற்றிட்டத்தினை நிறைவு

செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர்களுக்கும் அதேபோன்று அவர்களின் படகுகள், கலம்கள் என்பனவற்றிற்கும் ஏற்படும் இடர்நேர்வுகளை காப்புறுதி செய்வதற்காக காப்புறுதித் திட்டங்களை நடைமுறைக்கிடுமாறு நான் முன்மொழிகின்றேன். மீன்பிடிச் சமூகத்திற்காக, உதவுதொகைகளின் அடிப்படையில், இயற்கை அனர்த்த நிவாரண நிதியமொன்று தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் ஏற்படுத்தப்படும்.

20. **இறால் பண்ணை**

சிறு வேளாண்மையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் இறால் வளர்ப்பில் ஈடுபட்டிருப்பதனால் இறால் வழங்கல்களுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட வேண்டுமென முன்மொழிகின்றேன். உள்ளூர் வேளாண்மை யாளர்களை பாதுகாக்கும் பொருட்டு, இறால் மற்றும் மீனின் இறக்குமதிகளின் சுகாதாரத் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் அத்தகைய இறக்குமதிகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக அவற்றின் மீது செஸ் வரி விதிக்கப்படும். புத்தளம் மாவட்டத்திலுள்ள இறால் பண்ணைகளின் நன்மைகருதி ஒல்லாந்தர் கால்வாயின் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டமும் நோய்க் கட்டுப்பாட்டு முறைகளும் 2007இல் நிறைவு செய்யப்படும்.

21. **விலங்கு வளர்ப்பு**

சபாநாயகர் அவர்களே, விலங்குகளின் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு உயிர்பெருக்க உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட விலங்குகளின் கிடைப்பனவினை உயர்த்துவது அவசியமானதாகும். ஆகவே, கால்நடை இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படும். கறவைப் பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் ஏனைய விலங்கினங்கள் , விந்து மற்றும் ஏனைய கருவிகளின் இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரியும் தீர்வையும் விலக்கப்படும்.

22. **சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள்துறை அபிவிருத்தி**

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அல்லது பதனிடப்பட்ட உற்பத்திகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவியின் காரணமாக உள்ளூர் பெறுமதி கூட்டல்களில் திடீர் உயர்வொன்று காணப்பட்டது. ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் உறுதிப்பாடு உள்ளிட்ட உள்ளூர் உதவிகளை வழங்கும் பொருட்டும் உணவு பதனிடலுக்கு உதவும் பொருட்டும், இறைச்சி மற்றும் கோழி இறைச்சி, ஆபரணம், சப்பாத்துத் தயாரிப்பு, ஆயர்வேத உற்பத்திகள், வைக்கோல் அட்டை, அழகுச் சாதனப் பொருட்கள் , கழிவறைத் தயாரிப்புக்கள், தொலைபேசி, வர்த்தக விபரக் கொத்து போன்றவற்றிற்கு மேலதிக செஸ் வரி விதிக்கப்படும். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றிலிருந்தான உயர்ந்த பெறுமதி கொண்ட உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் பதனிடல் அதேபோன்று விலங்கு வளர்ப்பு மருந்தாக்கல் பொருட்கள், பரிசுப் பொருட்களின் தயாரிப்பு என்பனவற்றிலிருந்தான உயர்ந்த பெறுமதி வாய்ந்த உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் பதனிடலுக்குப்

பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் முன்னேற்றங்கண்ட பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான தீர்வை அகற்றப்படுவதுடன் மேலதிக கொடுகடன் வசதிகளும் வழங்கப்படும்.

**23. களஞ்சியப்படுத்தல் வர்த்தகம்**

இலங்கையில் உருவாக்கப்படுகின்ற பல்வேறு பணி நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்ற எமது முயற்சியொன்றாக கரைகடந்த வர்த்தக நடவடிக்கை களிலிருந்தான இலாபத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. கரைகடந்த வர்த்தக நடவடிக்கைகள் பொருளாதாரப் பணிக் கட்டணங்களிலிருந்தும் விலக்கப்பட வேண்டும் என நான் இப்பொழுது முன்மொழிகின்றேன். கரையோர களஞ்சியப்படுத்தல் வர்த்தகத்திற்குள்வரும் பொருட்களின் தொகுதி, சட்டத்தில் தற்பொழுது குறித்துரைக்கப்பட்ட ஒருசில தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்குப் பதிலாக எந்த ஒரு பொருளையும் சேர்த்துக் கொள்ளும் விதத்தில் விரிவாக்கப்படும். கரையோர நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் 10 சதவீதத்திற்குள்பட்டிருக்கும். க.ஏ.பெ. மீதான பொருளாதாரப் பணிக் கட்டணத்திற்கான பொறுப்பு 0.1 சதவீதமாக இருக்கும்

**24. ஆபரணக் கைத்தொழில்**

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலினை உயர் பெறுமதி கூட்டல் தொழில் வாய்ப்பு, வெளிநாட்டுச் செலாவணி உழைப்பு மற்றும் அரசின் அரசிறை என்பனவற்றை உருவாக்கும் கைத்தொழிலாக மாற்றுவதற்காக வரிவிதிப்பு உபாயத்தினை மாற்ற வேண்டியுள்ளது. ஆகவே, இரத்தினக்கல், வைரம் மற்றும் தங்கம் மீதான துறைமுக வானூர்தி நிலைய தீர்வை அகற்றப்படும். ஆபரணம் மீதான பெறுமதிசேர் வரி 20 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்படும். ஆபரணங்களின் இறக்குமதி மீது 15 சதவீத செஸ் வரி விதிக்கப்படவுள்ளதுடன், உயர் பெறுமதி கொண்ட விடயங்களின் தயாரிப்பிற்கான தொழில்நுட்ப அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு ஆபரணத் தயாரிப்பாளர்களி மீது ஆண்டு பதிவுக் கட்டணமாக ரூ.5,000 விதிக்கப்படும். உள்ளூர் ஆபரணத் தயாரிப்பாளர்களுக்கு 1 சதவீதங் கொண்ட பொருளாதாரப் பணிக் கட்டணம் ஏற்புடைத்தாக இருக்கும். இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதியாளர்களைப் பொறுத்தவரையில் 1 சதவீதங் கொண்ட பொருளாதாரப் பணிக் கடடணம் பெறுமதிக் கூட்டலுக்கு மட்டுமே ஏற்புடைத்தாகும்.

**25. ஆடைக் கைத்தொழில்**

ஆடைக் கைத்தொழில் 2010 அளவில் அதன் ஏற்றுமதிகளை ஐ.அ.டொலர் 5 பில்லியனுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் புடவை பதனிடலுக்கான துணை வழங்கல் உற்பத்திகளை நிறுவுவதற்கு குறிப்பிடத்தக்களவு உள்ளார்ந்த வளம் காணப்படுவதனால் உள்நாட்டுப் பெறுமதி கூட்டல் அதிகரிக்கும்.

புடவை பதனிடல் ஏறத்தாள ஐ.அ.டொலர் 300 மில்லியன் முதலீட்டினை இலக்காகக் கொண்ட துல்கிரியா மற்றும் கொறணை ஆகிய இடங்களில் அமைந்துள்ள இரண்டு பாரிய புடவை பதனிடல் வலயங்கள் இப்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இக் கைத்தொழிலை மேலும் உத்வேகப்படுத்தும் பொருட்டு அனைத்துப் புடவைகள் ஆடை தயாரிப்பு மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்பான பொருளாதாரப் பணிக் கட்டணங்களை 0.1 சதவீதத்திற்கு குறைக்க முன்மொழிகின்றேன். தேவையற்ற மற்றும் மோசமான தரத்தினைக் கொண்ட ஆடைகளின் இறக்குமதியினை ஊக்கம் குன்றச் செய்யும் பொருட்டு அவர்களின் உள்ளூர் விற்பனைகளின் மீது துண்டொன்றுக்கு ரூ.25 கொண்ட ஒன்று திரட்டிய தீர்வைக் கொடுப்பனவிற்குட்படுத்தப்பட்டு தயாரிப்பாளர்களின் உள்ளூர் விற்பனைகள் ஊக்குவிக்கப்படும்.

## 26. தோல் கைத்தொழில்

உள்ளூர் தோல் கைத்தொழில் அபரிமிதமான ஏற்றுமதி உள்ளார்ந்த வளத்தைக் கொண்டிருந்ததுடன் உலகளாவிய சந்தையில் ஆடைக் கைத்தொழில் அனுபவித்த அதே வாய்ப்புக்களை அனுபவிக்கிறது. ஆகவே இலங்கையில் தோல் மற்றும் அதனுடன் தொடர்பான கைத்தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தோல் மற்றும் தோல் உற்பத்திகளின் பதனிடலுக்காகவும் தயாரிப்பிற்காகவும் இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் இறக்குமதித் தீர்வையிலிருந்தும் பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்கப்படும். மேலும், இக் கைத்தொழிலுக்குத் தேவையான முன்னேற்றங்கண்ட பொறிகளும் கருவிகளும் தீர்வையின்றி கிடைக்கச் செய்யப்படும். குறைத்து மதிப்பிடப்பட்ட விலைப் பட்டியல் பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டும் தேவையான ஆராய்ச்சி மற்றும் கைத்தொழிலின் ஏனைய பணிகளுக்கு நிதியினை வழங்கும் பொருட்டும் இறக்குமதி செய்யப்படும் சப்பாத்துக்கள் மீதான செஸ் தீர்வை சோடி ஒன்றுக்கு ரூ. 300இற்கு உயர்த்தப்படும்.

## 27. மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீளத் திறத்தல்

பல்வேறுபட்ட இடர்பாடுகளின் காரணமாக பின்தங்கிய மாவட்டங்களில் அமைந்துள்ள பல தனியார் தொழிற்சாலைகள் கடந்த பல ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையிலுள்ளன. அத்தகைய தொழிற்சாலைகளில் ஏறத்தாள 30 - 40 தொழிற்சாலைகளைப் புதுப்பித்து இப்பிரதேசத்திலுள்ள ஏறத்தாள 10,000 பேருக்கு தொழிலை வழங்க முடியும். இத் தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பதற்காக லங்கா புத்திர அபிவிருத்தி வங்கிக்கு ரூ.2,000 மில்லியன்களை வழங்க நான் முன்மொழிகின்றேன். அது இப்பணத்தை சரியான மீளமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் அத்தகைய தொழிற்சாலைகளுக்கு ஒன்றில் பங்குடைமையாகவோ

அல்லது படுகடனாகவோ வழங்க முடியும். அவற்றின் வரிப் பொறுப்புக்கள், சேமலாப நிதியம் மற்றும் வெகுமதிக் கொடுப்பனவுகள் என்பன முதலில் தீர்க்கப்பட வேண்டும். உடனடித் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்காக நிதியியல் உதவிகள் வழங்கப்படும். படுகடன் நிவாரணங்களை வழங்குவதற்காக ஏற்கனவேயுள்ள கடன் மீளமைப்புச் செய்யப்படும். அத்தகைய கைத்தொழில்களுக்கு 3 ஆண்டு வரி விடுப்பு வழங்கப்படுவதுடன் அதே காலப்பகுதிக்கு பொருளாதாரப் பணிக் கட்டணத்திலிருந்தும் விலக்களிக்கப்படும். இத் தொழிற்சாலைக் கட்டடங்களின் காணி உறுதி பொருத்தமான விதத்தில் நீண்டகாலக் குத்தகைக்கு மாற்றப்படுமாகையால் தொழிற்சாலைகள் தெளிவான உறுதியின் கீழ் தொழிற்பட முடியும். ஒவ்வொன்றும் 200 இற்கு மேற்பட்ட தொழில் வாய்ப்பினைக் கொண்ட மூடப்பட்டுள்ள அனைத்து ஆடைத் தொழிற்சாலைகளையும் மீண்டும் தொடங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 28. கப்பற்படுத்தல் கைத்தொழில்

இலங்கை ஒரு தீவாகவும் பன்னாட்டு வர்த்தகத்தில் பெருமளவிற்கு தங்கியுமிருப்பதனால் கப்பற்படுத்தல் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள், தொழில் வாய்ப்புக்கள் துணை வசதி முகாமைத்துவ மேம்பாடு, மற்றும் துணைப் பணிகளின் வழங்கல் என்பனவற்றை உருவாக்கும் ஒரு உந்து விசைக் கைத்தொழிலாக மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. ஆகவே இலங்கைக் கொடியின் கீழ் பதிவு செய்யப்படும் கப்பல்களுக்கு ஏற்புடைத்தான இறக்குமதித் தீர்வைகளையும் ஒப்பந்த அடிப்படையிலான கப்பல் கலங்களின் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தீர்வைகளையும் அகற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன். இலங்கையர்களின் கப்பற் கட்டணங்களின் வருமானம் வருமான வரியிலிருந்து விலக்கப்படும். கப்பல்களுக்கான தேய்மானப்படி 1/3 இற்கு அதிகரிக்கப்படவுள்ளதுடன் கரைகடந்த கடன்பாடுகள் மீதான கட்டுப்பாடுகளும் அகற்றப்படும்.

## 29. நானோ தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல்

நானோ தொழில்நுட்பத்தினை பிரயோகிப்பது புடவை, இறப்பர், ஆயுர்வேத மருந்துகள், இலத்திரனியல் கனிப்பொருள் மற்றும் மூலப்பொருள் கைத்தொழில்களின் போட்டித் தன்மையினை மேம்படுத்தும். ஆகவே தேசிய ஆராய்ச்சிச் சபையின் முழுமையான மேற்பார்வையின் கீழ் அரச தனியார் பங்குடைமைச் செயற்றிட்டமாக நானோ தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்த நானோ அறிவியல் பூங்காவும் ஏற்படுத்தப்படும். பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களின் கீழ், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அரசாங்கம் ஏறத்தாள ரூ.2 பில்லியன்களைச் செலவிடும். நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக இவ்வொதுக்குகள் 2007 வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

தேசிய ஆராய்ச்சிச் சபையானது இவ்வனைத்து ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைப்பதுடன் ஆராய்ச்சிக்கான நிதியங்கள் தேசிய முன்னுரிமை வாய்ந்த விடயங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவற்றின் வரவு செலவுத் திட்டங்களை மேற்பார்வை செய்யும்.

30. **வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான ஆகக்குறைந்த சம்பளத்தினைக் குறித்துரைத்தல்**

முதற் தடவையாக வெளிநாட்டு வேலைக்காகச் செல்லும் இலங்கையர்களுக்காக குறிப்பிடப்படும் ஆகக்குறைந்த சம்பளம் மொத்தத்தில் போதாததாகவுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய தேர்ச்சி அபிவிருத்தி முகவராண்மைகளுடன் சேர்ந்து, அடுத்த மூன்று ஆண்டுகளில், ஆகக் குறைந்தது மாதமொன்றிற்கு ரூ.50,000இனை (ஐ.அ.டொலர் 500) பெற்றுக் கொள்ளத்தக்க தொழில் ஒன்றினை உறுதிப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்காக தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்துமாறு கேட:டுக் கொள்ளப்படவுள்ளன. முதற்படியாக, அடுத்த ஆண்டிலிருந்து வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கான ஆகக்குறைந்த குறித்துரைக்கப்பட்ட சம்பளம் ரூ.25,000 ஆக (ஐ.அ.டொலர் 250) நிர்ணயிக்கப்படும். அனைத்து வேலைவாய்ப்பு முகவர்களும் இத் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

31. **மாகாண ரீதியான உயர் நீதிமன்ற உட்கட்டமைப்பு**

மேல் முறையீட்டு நீதிமன்றங்களுடன் கூடிய விதத்தில் மாகாண உயர் நீதி மன்றங்களை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் முன்மொழிகின்றது. இதன்படி, வழக்காளர்களுக்கான குறைகளை விரைந்து தீர்ப்பதற்கும் சட்டரீதியான தாமதங்களைத் தவிர்ப்பதற்குமாக நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய 3 மாதிரி உயர் நீதிமன்றங்கள் கோமாகம, நுவரெலியா, மற்றும் தம்புள்ள ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்படும். நீடித்த பரந்த சட்ட சீர்திருத்தங்களுக்காக சட்டசீர்திருத்த செயற்றிட்ங்களின் கட்டம் 11 இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

32. **தேசிய உற்பத்தியாக்க மேம்பாட்டின் மீதான சனாதிபதி செயலணிக் குழு**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி உற்பத்தியாக்கத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளைத் தேவைப்படுத்துகின்றது. எமது தொழிற்படையின் உற்பத்தி யாக்கத்தினை மேம்படுத்துவதற்காகவும் எமது மக்களின் உற்பத்தியாக்கத்தினைக் குறைக்கின்ற பல்வேறு காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்குமாக தேசிய உற்பத்தியாக்க மேம்பாட்டின்மீது சனாதிபதி செயலணிக்குழுவொன்றினை ஏற்படுத்த முன்மொழிகின்றேன். இச் செயலணிக்குழுவானது மிக வெளிப்படையான தடைகளை இனங்கண்டு அவற்றினை விடயங்களின் முன்னுரிமை அடிப்படையில் கட்டுப்படுத்தும். தொழிற்சங்கங்கள் மற்றும் கைத்தொழில் பிரதிநிதிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றவுள்ள இச் செயலணிக்குழுவிற்கு உற்பத்தியாக்க முன்னேற்றங்களுக்கான தடைகளை அகற்றுவதற்கான முழு அதிகாரமும் வழங்கப்படும்.

## 33. நகெனகிறா மற்றும் றுகுணு மீள்எழுச்சி

சபாநாயகர் அவர்களே, 1977ஆம் ஆண்டிலிருந்து அபிவிருத்தியானது மேல் மாகாணத்தில் குவிந்திருந்தமை எங்கள் எல்லோருக்கும் தெரியும். நாம் இதனை மாற்ற வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபையும் முதலீட்டுச்சபையும் திருகோணமலையினை முதலீட்டு மற்றும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கான உட்கட்டமைப்புத் திட்டத்தினை ஏற்கனவே இறுதிப்படுத்தியுள்ளதுடன் முதலீடுகளைக் கவர்வதற்காக இடர்நேர்வு உத்தரவாதம், வரி விலக்கல்கள், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஏனைய ஊக்கவிப்புக்கள் என்பனவற்றை வழங்கும். கொழும்பு துறைமுகத்தின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்காக திருகோணமலைத் துறைமுகம் உள்நாட்டு வர்த்தக கப்பற் சரக்குப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும். புதிய நிலக்கரி வலுச் செயற்றிட்டத்தினை இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான கூட்டுத் தொழில் முயற்சியாக மேற்கொள்வதற்கு ஏற்கனவே கலந்துரையாடப்பட்டிருக்கிறது. பாரிய தம்புள்ள நகரமயமாக்கல் திட்டத்தின் மீதான குடிசார் வேலைகள் ஏற்கனவே தொடங்கி விட்டன. அனைத்து சந்தைப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளுடனும் கூடிய பிரத்தியேக பொருளாதார மையமொன்று வவுனியாவில் ஏற்படுத்தப்படுவதுடன் தம்புள்ள பிரத்தியேக பொருளாதார மையத்துடன் அது இணைக்கப்படும். வீரவில வானூர்தி நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், பன்னாட்டு மாநாட்டு நிலையம், தென்பகுதி விரைவுப் பாதை, புதிய புகைவண்டிப்பாதை மற்றும் முதலீட்டு வலயம் என்பன றுகுணு மீள்எழுச்சிக்குத் தேவையான தூண்டுதல்களை வழங்கும்.

## iv. அரச பணிகள்

## 1. தேசிய சம்பளக் கொள்கை

தேசிய சம்பளக் கொள்கையொன்று இல்லாமையானது சம்பளங்களில் முரண்பாடுகளுக்கும் குறைபாடுகளுக்கும் பிணக்குகளுக்கும் வழிவகுக்கின்றது. இப் பிரச்சனையைத் தீர்க்கும் பொருட்டு 2006இல் அரச பணிகளுக்கு 1:4.3 விகிதத்தில் புதிய தேசிய சம்பள அமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சம்பள அளவுகள் மீளத் தொகுதிப்படுத்தப் பட்டதுடன் 126 இலிருந்து 37இற்கு குறைக்கப்பட்டன. செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வு நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உச்சமட்ட சம்பள அளவு தேக்க நிலையிலிருக்கும் பிரச்சனை உள்பட எஞ்சியுள்ள குறைபாடுகளுக்கு தீர்வு காண்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பள உயர்வு அமைப்பில் காணப்படுகின்ற முரண்பாடுகளும்கூட, 1:4.2 என்ற சம்பள விகிதம் திரிவுபடுத்தப்பட மாட்டாது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. நியம

தொழில் பகுப்பாய்வு மற்றும் மொ.உ.உற்பத்தி வளர்ச்சியுடன் இணைக்கப்பட்டிருக்கும் தன்மை என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய பூரணமான சம்பளக் கொள்கையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. தேசிய மட்டத்திலும் அதேபோன்று மாகாண மட்டங்களிலும் ஒரேவிதமான முறையினைக் கொண்டிருக்கும் பொருட்டு பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சேர்ப்புக் கொள்கையொன்று வடிவமைக்கப்படும். பிரச்சனைகளை விரைந்து தீர்ப்பதனை இயலச் செய்யும் விதத்தில் சம்பளங்கள் மற்றும் பதவி நிலைக்குழுவின் மனிதவள இயலளவு அதிகரிக்கப்படும்.

2. **அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள்**

சபாநாயகர் அவர்களே, கடந்த வரவு செலவுத் திட்டத்தில் ஆயுதப்படைகள் மற்றும் பொலிசார் உட்பட அரச ஊழியர்களுக்காக பொதுவான பொதியொன்றினை வழங்கியிருந்தேன். இப்பொதியானது மாதமொன்றுக்கு ரூ.1,000 கொண்ட ஆரம்ப வாழ்க்கைச் செலவுப்படியினையும் அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆறு மாத காலப்பகுதிக்கும் ஆகக் கூடியது ரூ. 375 என்ற வரையறைக்குள்பட்ட சீராக்கத்தினையும், பயன்படுத்தப்படாத விடுப்பிற்கு ஆகக்கூடியது ஒரு மாத சம்பளத்திற்குச் சமமான ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றினையும் உள்ளடக்கியிருந்தது. புதிய சம்பள அமைப்பின் அடிப்படையில், உத்தேச அதிகரிப்பில் 50 சதவீதம் வழங்கப்பட்டிருக்கிறது. நியதி முகவராண்மைகளின் சம்பள திருத்தங்களும் 2006 திசெம்பருக்குமுன் இடம்பெறும். நான் இப்பொழுது மீதி அதிகரிப்பினை 2007 சனவரியிலிருந்து மேற்கொள்ள முன்மொழிகின்றேன். 2006இன் பின்னரைப்பகுதி மற்றும் 2007இன் முதலரைப் பகுதிக்கான வாழ்க்கைச் செலவுச் சீராக்கமும் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு விடுப்பிற்கான காசும் 2007இல் வழங்கப்படும். இவ்வதிகரிப்புக்களுக்காக வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதன்படியான மொத்தக் கூலிச் செலவு ரூ.196.7 பில்லியனுக்கும் ஓய்வூதியங்கள் ரூ.68.2 பில்லியனுக்கும் அதிகரிக்கும்.

3. **அரச ஊழியர்களுக்கு இடர்ப்பாட்டுக் கடன்**

தற்போதைய முறையின் கீழ் இடர்ப்பாட்டுக்கடன் 2004இன் சம்பள அமைப்பின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. கொள்கை விடயங்கள் எப்படியிருப்பினும், 2007 இலிருந்து இடர்ப்பாட்டுக் கடனானது தொடர்பான ஆண்டின் சம்பள அமைப்பின் அடிப்படையிலேயே வழங்கப்படும். எனினும், குறைந்த தரங்களிலுள்ள ஊழியர்களும், முதல்தரமாக விண்ணப்பங்களைச் செய்வோரும் நன்மைகளைப் பெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், இதற்கு முன்னர் எந்த இடர்ப்பாட்டுக் கடனையும் பெற்றிராத ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள இடர்ப்பாட்டுக் கடன்கள் அரசாங்கம் தாங்கக்கூடிய உச்சமட்ட எல்லைக்குட்பட்டு வழங்கப்பட வேண்டுமென நான் முன்மொழிகின்றேன். ஏற்கனவேயுள்ள கடன்களில் 2/ 3பங்கு தீர்க்கப்பட்டதன்

பின்பே புதிய இடர்ப்பாட்டுக் கடன் வழங்கப்பட வேண்டும் எனவும் முன்மொழிகின்றேன்.பாதுகாப்புப் படைகள், பொலிஸ், கல்வி மற்றும் நலத்துறை போன்ற நிறுவனங்களிலுள்ள பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் இதுவரை இடர்ப்பாட்டுக்கடன்களிலிருந்து நன்மைகளைப் பெற்றிருக்காததினால் அத்தகைய நிறவனங்களிலுள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. **ஓய்வூதியம் பெறுவோர்**

ஒவ்வொரு ஆறுமாத சீராக்கங்களுடன் அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும் ரூ.500 கொண்ட படியொன்றினை நான் வழங்கியுள்ளேன். இதன்படி, தற்பொழுது அவர்கள் மாதமொன்றிற்கு ரூ.687.50 கொண்ட வாழ்க்கைச் செலவுப் படியினை பெறுகின்றனர். இது அடுத்த ஆண்டு சனவரியிலும் யூலையிலும் ரூ.375 இனால் மீண்டும் அதிகரிக்கப்படும். 1997.01.01இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கான மீதி நிலுவை கொடுப்பனவுகளும் 2007 இல் வழங்கப்படும்.

5. **பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு**

பல்வேறு அரச முகவராண்மைகளிலுமுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 10,000 பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு கடந்த ஆண்டு வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்தது. இதில் 5,000பட்டதாரிகள் உள்நாட்டரசிறைத் திணைக்களம் போன்ற அரச முகவராண்மைகளுக்கு பொருத்தமான ஆட்சேர்ப்பு நடைமுறைகளினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். அரசாங்கமும் பின்தங்கிய பிரதேசசபைகளிலுள்ள பள்ளிக்கூடங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கற்பித்தல், திட்டமிடல் மற்றும் விரிவாக்கப் பணிகளில் ஏறத்தாள 5,000 வெற்றிடங்கள் நிலவுவதாக அடையாளம் கண்டிருக்கிறது. குறித்துரைக்கப்பட்ட துறைகளில் மாதாந்தம் ரூ.7,500 சம்பளத்தில் 2 ஆண்டு காலப்பகுதிக்கு பயிலுநர்களாக 2007இல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் உறுதிப்படுத்தல் வழமையான சம்பளத்தின் அடிப்படையில் மேற் கொள்ளப்படும். அவர்கள் நியமிக்கப்பட்ட இடத்தில் 5ஆண்டுப் பணிகளைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். தொழிலற்ற பல்கலைக்கலகப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

v. **நலன்புரி**

**1. பெருந்தோட்ட சமூக நலன்புரி**

சபாநாயகர் அவர்களே, எனது கடந்த வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட வீதிகளையும் வீடமைப்புக்களையும் மேம்படுத்த முன்மொழிந்திருந்தேன். இந் நிகழ்ச்சித் திட்டங்கள் 2007இல் விரிவுபடுத்தப்படும். முன்மொழியப்பட்ட தொழிற்

பயிற்சிக் கல்லூரி நுவரெலியாவில் 2007இல் தொழிற்பாட்டிற்கு வரும். பெருந்தோட்ட சமூகத்தின் சுகாதார நிலைமைகளை உயர்த்தும் பொருட்டு சுகாதார அமைச்சின் கீழான சிறப்புச் செயற்றிட்டமொன்றாக பெருந்தோட்டத் துறையிலுள்ள அனைத்து சுகாதார நிலையங்களையும் தரமுயர்த்துமாறு நான் முன்மொழிகின்றேன். பெருந்தோட்டச் சமூகத்தினருக்கு மானிய விலையில் அரிசி மாவினை விநியோகிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**2. பாதுகாப்பற்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான நலன்புரி**

பாதுகாப்பற்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்த ஆட்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தரங்களை முக்கியமாகக் கொண்ட சிறப்பு நிகழ்ச்சித் திட்டமானது பெண்கள் மற்றும் பிள்ளைகளை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

**3. ஈ - கிராமங்கள்**

தூர இடங்களில் வசிக்கின்ற மக்களுக்கு தகவல்கள் சென்றடைவதனை மேம்படுத்துவதற்காக கணனிப் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்தும் முன்னோடிச் செயற்றிட்டமாக தெரிந்தெடுக்கப்பட்ட கிராம நிலையங்களை அபிவிருத்தி செய்ய முன்மொழிகின்றேன்.

**V. சமயம் மற்றும் கலாச்சாரம்**

**சமயத்தின் மதிப்பினை மேம்படுத்தல்**

சபாநாயகர் அவர்களே, நான் இதுவரை பொருளாதாரம் , வியாபாரம் மற்றும் நிதி விடயங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தேன். நாம் எமது சமயங்களையும் கலாச்சாரங்களையும் பேணி அவற்றினை மேம்படுத்தினாலொழிய எமது பொருளாதார அபிவிருத்திகளில் எந்த அர்த்தமும் இருக்காது. குடிவகைகளின் பாவனையையும் போதைப் பொருட்கள் பயன்பாட்டினையும் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவரும் அதேவேளையில் அத்தகைய வழிமுறைகளின் இறுதிவெற்றி பொதுமக்களின் விழிப்புணர்விலேயே தங்கியிருக்கிறது. ஆகவே இத்தகைய பழக்கங்களை ஊக்கமிழக்கச் செய்வதற்கு சமூகத்தில் விழிப்புணர்வினை மேம்படுத்தும் மையங்களாக 1000 கோயில்களை தெரிவு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். பணியிலிருக்கும்போதே பயிற்சியளிப்பதனூடாக சமயக் கல்வியை மேம்படுத்துவதற்காக சமயக் கல்வியை வழங்குகின்ற ஆசிரியர்களின் தொடர்பாடல் மற்றும் கற்பித்தல் தேர்ச்சிகளை உயர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சபாநாயகர் அவர்களே, பெரும் எண்ணிக்கையான பௌத்த தமிழர்கள் இலங்கைக்குள்ளும் வெளியிலும் குறிப்பாக இந்தியாவிலும் வாழ்கிறார்கள். பௌத்த போதனைகள் அத்தகைய சமூகத்தினருக்கு வழங்கப்படவுள்ளதுடன் மற்றைய

இனங்களுக்கிடையேயுள்ள பௌத்தர்களிடையேயும் மேம்படுத்தப்படும். கொடை வழங்கும் நாடுகளின் உதவியுடன் பௌத்தம், பௌத்த கலாச்சாரம் என்பன மீதான பன்னாட்டு ஈடுபாடுகளை மேம்படுத்துவதற்காக பௌத்த கற்கைகளுக்கான பன்னாட்டு நிறுவனமொன்றினை உருவாக்க முன்மொழிகின்றேன். இலங்கையர்களின் பாரம்பரியங்கள் சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பேணிப்பாதுகாக்கப்படும்.

30. சபாநாயகர் அவர்களே, எனது முன்மொழிவுகளின் அரசிறை மற்றும் செலவினம் தொடர்பான விடயங்கள் இணைப்பு II இலும் இயலச் செய்கின்ற திருத்தங்களுடாக தொடர்பான சட்டவாக்கங்களில் கூட்டிணைக்கப்படவுள்ள அரசிறை முன்மொழிவு களின் தொழில்நுட்ப விபரங்கள் இணைப்பு III இலும் தரப்பட்டுள்ளன. எனது உரையுடன் இன்று நான் சமர்ப்பிக்கின்ற ஆவணங்களின் பட்டியல் இணைப்பு iV இல் தரப்பட்டுள்ளன. இறுதி வரவு செலவுத்திட்ட வெளிப்பாடுகள் இணைப்பு V இல் தரப்பட்டுள்ளன. சுனாமியின் பின்னரான நடுத்தரகால இறைக்கட்டமைப்பினை அங்கீகரிப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இறுதி வரவு செலவுத்திட்ட விளைவுகள் அரசிறைக் கணக்கில் சிறிய மிகையொன்று இருப்பதனையும் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 7.2 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளமையினையும் எடுத்துக் காட்டுகின்றது. சிறப்பு டிபிரி செயற்றிட்டங்களுடன், 2007இல் திரண்ட அரச முதலீடுகளுக்காக மொ.உ.உற்பத்தியில் 8 சதவீதத்தினையாவது கொண்டிருப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். தற்பொழுது எமது நாடு சாதகமான வானிலைக்கான ஆசியினைப் பெற்றிருப்பதுடன் அனைத்து நீர்த் தேக்கங்களும் நிறைந்து வழிகின்றன. இவை வெற்றிகரமான வேளாண்மையைக் கொண்ட இன்னொரு ஆண்டிற்கான அடையாளங்களாகும். சிறிய, நடுத்தர தொழில் மூலங்கள் கைத்தொழில்கள் மற்றும் பணிகளுக்கு மேலும் தூண்டுதல்களை வழங்குவதற்காக இவ்வரவு செலவுத் திட்டத்தினூடாக நான் பல ஊக்குவிப்புக்களையும் வழங்கியுள்ளேன். பல பாரிய உள்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் கட்டுமானத்தின் கீழ் உள்ளன. அவை விரைந்த அபிவிருத்திக்கு வழிசமைக்கும். வரவு செலவுத் திட்டமானது பணவீக்கத்தினை ஏறத்தாள 9 சதவீதத்திற்கு குறைக்கும் விதத்திலும் மொ.உ.உற்பத்தியினை 7.5 சதவீதத்தில் நிலையாக வளர்ச்சியுறச் செய்யும் விதத்திலும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## முடிவுரை

31. சபாநாயகர் அவர்களே, எமது சவால்கள் மிகப் பலம் பொருந்தியனவாகும். உலகப் பொருளாதாரச் சூழல் ஏற்ற இறக்கங்களுக்குள்பட்டிருக்கிறது. எண்ணெய் விலைகள் பாதிக்கப்படத்தக்கவையாகவும் இடர்நேர்வுகள் உயர்வாகவும் உள்ளன. பணவீக்கம் உயர்வாகக் காணப்படுகின்றது. தேசிய பாதுகாப்பு விட்டுக்கொடுக்கப்பட முடியாததொன்று. மிகத்தேவையான உள்கட்டமைப்பின் அபிவிருத்தியினை நீண்டகாலத்திற்கு தாமதிக்கமுடியாது. ஆகவே இச்சவால்களை வெற்றி கொள்வதற்கு

அரசாங்கம், தனியார்துறை மற்றும் தொழிற் சங்கங்கள் என்பன சில தியாகங்களைச் செய்ய முன்வர வேண்டும். கோமாகமவில் பன்னாட்டு விளையாட்டு அரங்கிற்காக நான் அத்திவாரக்கல் நாட்டிய அந்த நாளை நினைத்துப் பார்க்கிறேன். வாழ்க்கைச்செலவு உயர்வாக இருக்கிறது என நான் குறிப்பிட்ட பொழுது, திரண்டிருந்த மக்கள் தங்களால் அதனை தாங்கிக்கொள்ள முடியுமென்றும் நான் நாட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தாங்களாகவே பதிலளித்தனர். எம் மக்களில் பெரும்பான்மையானோரின் பரஸ்பர நோக்கு இதுவென்றே நான் நம்புகின்றேன். நாட்டின் நலன் கருதி தியாகம் செய்வதற்கு பெரும்பான்மையானோர் தயாராக இருக்கிறார்கள் என்பதே அந்த செய்தியாகும். வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் தமது சேமிப்பிற்கான இடமாக இலங்கையினைத் தெரிவு செய்து கொள்வதன் மூலமாவது தமது தாய் நாட்டிற்கு தமது பங்களிப்புக்களைச் செய்ய வேண்டுமென்ற சிறப்புக் கோரிக்கையொன்றினை விடுக்க விரும்புகிறேன். பிரதேச செயலாளர்களிலொருவர் குறிப்பிட்டவாறு உடற்பலத்தைக் கொண்டு எனது நாட்டின் மேம்பாட்டிற்காக ஒழுக்கப் பண்பாடுமிக்க ஒரு சமூகத்தினை கட்டியெழுப்புவதற்காக எமது வழியில் நாம் முன்னேறுவோமாக.

32. சபாநாயகர் அவர்களே, இவ் வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பிப்பதற்குத் தேவையான முழு விடயங்களையும் தயாரிப்பதில் கடுமையாக உழைத்த முழு அலுவலர் குழுவிற்கும் எனது நன்றிகள். எமது வரலாற்றில் மிக இடர்ப்பாடானதும் சவால் நிறைந்ததுமான கால கட்டத்தில் நிதியமைச்சராக எனது பொறுப்புக்களை ஆற்றுவதற்கு முழு மனதுடன் உதவிய எனது பிரதியமைச்சருக்கும் திறைசேரியின் செயலாளருக்கும் எனது நன்றிகள். சபாநாயகர் அவர்களே இவ் வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு தேவையான வசதிகளை வழங்கிய உங்களுக்கும் உங்கள் அலுவலர்களுக்கும் எனது நன்றிகள்.

நன்றி

பின்னிணைப்பு - I

## 2006 வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல் மீதான முன்னேற்றங்கள்

(1) அரசிறை முன்மொழிவுகள்

| முன்மொழிவு | செயற்படுத்தல் முகவராண்மை | முன்னேற்றம் |
|---|---|---|
| பெறுமதி சேர் வரி | | |
| ➢ **பெறுமதி சேர் வரி விலக்களிப்பு**: பால் பதனிடும் தொழிற்சாலை, பொறித்தொகுதி மற்றும் கைத்தறி உற்பத்திக்கான தொழினுட்பம் மற்றும் நிறச் சாயங்கள், நிர்மாணப் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், அரிசி ஆலைப் பொறித்தொகுதி, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றும் வகையில் கொழும்புக்கு வெளியில் ஏதேனும் ஒரு மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட விருக்கும் கம்பனியொன்றினால் பெறப்படும் பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள், இலங்கைக் கொடியின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட கப்பல்கள், கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், ரவர் மண்டப நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் மத்திய கலாசார நிதியம், இலங்கையில் பயிரிடப்பட்ட தானியங்களில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட உயர் புரத மற்றும் உயர் சக்தி விவசாய உணவு உற்பத்திகள், பதனிடப்படாத மரக்குற்றிகள், 5 சதவீத பெ. சே. வ. வீதத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகம், ஊடகவியலாளர்களின் பாவனைக்காக ஊடகவியல் உபகரணங்கள் அல்லது மோட்டார் சைக்கிள்கள். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **பெறுமதி சேர் வரி விகிதக் குறைப்பு**: உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட மருத்துவ மென்பானங்களுக்கு 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **பெறுமதி சேர் வரி விகிதக் அதிகரிப்பு**: நிதிச் சேவைகள் சீஜஎப் அறவீட்டில் மீதான அளவையில் 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதம், சுங்கத்தில் பெறுமதி சேர் வரி 5 சத வீதத்திலிருந்து 7 சதவீதம். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ உள்ளீடுகள் ஒழுங்குபடுத்தல் கடன் மீதான 10 சதவீத பெறுமதி சேர் வரிக்கு இலங்கை மத்திய வங்கியில் பிரத்தியேகக் கணக்கொன்றினைப் பேணுதல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ ஏற்றுமதிகளுக்கான பெறுமதி சேர் வரி மீளளிப்புக் காலத்தினை வங்கி உத்தரவாதம் ஒன்றுடன்/ காப்புறுதிப் பூட்கை ஒன்றுடன் அவர்களது மீளளிப்புக் கோரிக்கைகளை முன்வைப்பார்களாயின் மீளளிப்புக் காலம் 30 | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| நாட்களிலிருந்து 15 நாட்களாகக் குறைக்கப்படும். ஏனையவர்களுக்கு 4 நாட்களாக அதிகரிக்கப் படும். | | |
| ➢ பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பெறுமதி சேர் வரி மீளளிப்பு முறைமை யொன்றினைத் தாபித்தல் (கோரிக்கையானது 100 ஐ. அ. டொலருக்கு அதிகமாகவிருப்பின்). | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் படவில்லை. |
| ➢ குறித்த வரி விதிப்புக் காலத்தின் இறுதியில் பெறுகைகளின் இறுதித் திருத்தத்திற்கு உட்பட்ட மாதாந்த அடிப்படையில் பதிவுசெய்த அனைவரும் பெறுமதிசேர் வரியினைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ உள்ளீடு மற்றும் இடையீட்டுப் பொருட்கள் உற்பத்தி விநியோகம் மரபுவழியல்லாத ஏற்றுமதிகளை நோக்ககாகக் கொண்ட கம்பனிகள் உள்ளடங் கலாக புடைவை கோட்டா சபை/ ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பன மூலப்பொருள் இறக்குமதிக்கு வசதியளிப் பதற்கும் அதேபோல் மூலதனப் பொருட்களை வித்தியாசமான பெறுமதி சேர் அடிப்படையில் வசதிபெறுவதற்கும் பெறுமதி சேர் வரித் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.<br><br>ஏற்றுமதிகளின் மூலம் பெறப்பட்ட மூலதனப் பொருட்கள் இறக்குமதியின் போது பெறுமதி சேர் வரி விலக்களிப்புக்கு உட்படுகின்றது. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| வருமான வரி | | |
| ➢ **வருமான வரி விலக்களிப்பு:**<br>ரவர் மண்டப நிலையம், மத்திய கலாசார நிதியம், முதியோர் இல்லங்களை முகாமை செய்யும் தர்ம நிறுவனங்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் வித்தியாசமான இயலுமை உடையோருக்கான இல்லங்கள், வட்டி வருமானம் மீதான நிறுத்திவைத்தல் வரி உள்ளடங்கலான அனைத்து வரி வருமானங்கள், ஆரம்ப விவசாய பதனிடல் உற்பத்திகளிலிருந்தான வருமானம், பழங்கள், காய்கறி, அரிசி, வெட்டுப் பூக்கள், அரும்புத் தாவரங்கள் மற்றும் சேதன விவசாய உற்பத்திகள் போன்ற விவசாய பதனிடல் பொருட்களின் ஏற்றுமதி வருமானத்தின் மீதான 15 சதவீத வரியினை நீக்குதல். உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களைப் பூர்த்திசெய்த கொழும்பு, கம்பஹா மாவட்டங் களுக்கு வெளியே ஏதேனும் மாவட்டம் ஒன்றில் உருவாக்கப்படும் கம்பனி ஒன்றின் வருமானம், கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலுள்ள ஏதேனும் தாபனம் ஒன்று ஏனைய வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றுதல், இளைப் பாறியவர்களால் கொள்வனவுசெய்யப்படும் பொருட்கள், இலங்கை உயர் தொழில் | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| புரிநர்களினால் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்படும் உயர்தொழில் சேவைகள், உயர் தொழில்புரிநர்களால் நடுத்தர காலத்தில் திறைசேரி முறிகளின் மீது செய்யப்படும் முதலீட்டிருந்து கிடைக்கும் வெளிநாட்டு உழைப்புகள், சர்வதேச நிகழ்வுகள். | | |
| ➢ **வருமான வரி விகித குறைப்பு:** கூட்டுறவுச் சங்கங்கள் மீதான வருமான வரி விகிதத்தினை 20 சதவீதத்திலிருந்து 5 சத வீதமாகக் குறைத்தல் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வரி விதிப்பு வருமானம் ரூ. 5 மில்லியனை விஞ்சாதிருத்தல், வெளிநாட்டு நாணயங்களுக்கான உயர் தொழில் சேவைகளை வழங்கும் கம்பனிகள் மீதான வருமான வரியை 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்தல், வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கப்பற் றொழில் முகவராண்மைகளினால் வெளிநாட்டு நாணயத்தில் பொருளேற்றல் முகவராண்மைக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதிலிருந்தான வருமானத்திற்கு 15 சதவீதம். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **வருமான வரி விகித குறைப்பு:** 5 மில்லியன் வரி வருமானத்தினை விஞ்சிய கம்பனிகள் மீதான வருமான வரி 35 சதவீதத்தினால் அதிகரிக்கப்படும் அதேநேரம் புதிய கம்பனிகள் முதல் 5 வருடங்களுக்கு 33 1/3 சதவீதம், சூதாட்டம் மற்றும் தன்னியக்க லொத்தர்கள் மீதான வியாபாரத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கான வருமான வரி விகிதம் 40 சதவீதமாகும், ஆள்சார் வருமான வரிக்கு 30 சதவீதத்திற்காக ரூபா 500,000 மற்றும் மீதி வருமானத்திற்கு 35 சதவீதம், இலங்கைப் பிரசைகளல்லாதவர்களுக்கு ஆளுக்குரிய வரியில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **ஏனைய நடவடிக்கைகள்:** கையளவு நீளக் கொள்கையினை அமுல் படுத்துவதற்குத் தேவையான சட்டக் கூட்டிணைப்பு மற்றும் எளிய மூலதனமாக்கல் குறைப்பினைத் திருத்துதலும், வதிவல்லாக் கம்பனிகள் சிலவற்றிற்கான வரி விதிப்பு, இறுதி வரியாக தனிப்பட்ட ஒருவரின் வருமானம் கணிக்கப்பட்டு அதன் வட்டி மீதான வரி 10 சதவீதம், வங்கி வட்டியினையொத்ததாக ஒருங்கிணைந்த படுகடன் பிணையங்களின் வட்டியினைக் கருதுதல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **வரி நிர்வாகம்** அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், வருமான வரி மீதான நேர வரையறை, முறைப்பாடுகள் கிடைத்தமை பற்றி அறிவித்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| ➢ **வரி இணக்கப்பாடு**<br>பெறுகைகளினை ஏற்றுக்கொள்ளுதல், சிறந்த வரி செலுத்துநர்களுக்கான ஊக்குவிப்புகள், இணங்கியொழுகும் வரிசெலுத்துநர்களுக்கான வெகுமதிகள். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டமொன்றினை உருவாக்குதல்** | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **வரிக் கல்விக் கழகமொன்றினைத் தாபித்தல்** | நிதி திட்டமிடல் அமைச்சு | முன் தகைமை களுக்காக சில அமைவிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன |
| இறக்குமதித் தீர்வு | | |
| ➢ **இறக்குமதித் தீர்வை விலக்களிப்பு:**<br>கைத்தறி உற்பத்திகளுக்கான பொறித்தொகுதி மற்றும் தொழினுட்பம், ஊடகவியலாளர்களின் பயன்பாட்டிற்கான ஊடக உபகரணம் அல்லது மோட்டார் சைக்கிள்கள், பால் பதனிடும் பொறித் தொகுதி, அனைத்து வகையான கடதாசி வகைகளுக்கும் 15 சதவீத தீர்வை, நிர்மாண பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பூரணப்படுத்திய கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கு வெளியே ஏதேனும் மாவட்டமொன்றில் புதிய கம்பனியொன்றினைத் தாபிப்பதற்கான பொறித் தொகுதி மற்றும் இயந்திரங்கள், அங்கவீனர்களின் பயன்பாட்டிற் கான செவிப்புல உபகரணங்கள், மற்றும் ஏனைய உபகரணங்கள். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **இறக்குமதித் தீர்வைக் குறைப்பு:**<br>இசைக்கருவிகளுக்கு 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதம், முச்சக்கர வண்டி ரயர்கள் 28 சதவீதத்திலிருந்து 15 சதவீதம், இறக்குமதி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்டவைக்கு 6 சதவீதம் அச்சுமூலப் பொருட்கள் மீதான தீர்வையினைக் குறைப்பதன் மூலம் முரண்பாடு களை நீக்குதல். வரி தளர்த்தல்களுக்கான உயர் தொழினுட்பப் பொதியின் கீழ் முதலீட்டு வரையறையினை ரூபா. 2 மில்லியனாகக் குறைத்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **ஏனைய நடவடிக்கைகள்:**<br>தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு விசேட தீர்வைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| பொருளாதார சேவைக் கட்டணம் | | |
| ➢ **பொருளாதார சேவைக் கட்டண விலக்களிப்பு:**<br>அரசாங்க நிறுவனங்கள் | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **பொருளாதார சேவைக் கட்டணக் குறைப்பு:**<br>தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடல் தொழிற்சாலைகள் 1 சதவீதத்தனை 0.25 சத வீதமாகக் குறைத்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | | |
| ➢ **பொருளாதார சேவைக் கட்டண அதிகரிப்பு:** எந்தவொரு நிறுவனத்தினாலும் செலுத்தப்படும் பொருளாதார சேவைக் கட்டணத்தின் அளவை ரூபா 50 மில்லியனிலிருந்து ரூபா 60 மில்லியனாக அதிகரித்தல். கடப்பாட்டுப் புரள்வினை ரூபா 40 மில்லியனாகக் குறைத்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **கடப்பாட்டு புரள்வு அடிப்படையிலான நடப்பு ஆண்டுக்கு மாற்றுதல்:** ஏதேனும் வருமான வரிக்கு எதிராக பொருளாதார சேவைக் கட்டணத்தை உருவாக்க அனுமதித்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| <u>சமூகப் பொறுப்பு அறவீடு</u> | | |
| ➢ சமூகப் பொறுப்பு அறவீட்டினை 0.25 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக அதிகரித்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| <u>திரைப்பட அறவீடு</u> | | |
| ➢ ஆவணங்கள் மற்றும் கல்வி விடயங்கள், வெளிநாட்டு வர்த்தகங்கள் தவிர்ந்த வெளிநாட்டு தொலைக்காட்சி/ வெளிநாட்டுத் திரைப்படம் மீதான தீர்வை விதிப்பனவு. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| <u>துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு</u> | | |
| ➢ **துறைமுக மற்றும் விமான நிலைய விலக்களிப்பு:** ஏற்றுமதிகளுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களின் இறக்குமதி. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **துறைமுக மற்றும் விமான நிலைய அறவீடு அதிகரிப்பு:** ஏற்றுமதிகளுக்காகப் பயன்படுத்தப்படும் இறக்குமதிகள் தவிர்ந்த பொருட்களின் இறக்குமதி. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| <u>முத்திரைத் தீர்வை</u> | | |
| ➢ சில ஆதனங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் முத்திரைத் தீர்வையினை மீள அறிமுகஞ்செய்தல். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| <u>பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு</u> | | |
| ➢ நேரடி ஒளிபரப்பு நிலையங்களுக்கு பந்தய மற்றும் சூதாட்ட அறவீட்டினை ரூபா. 300,000 ஆக அதிகரித்தல் நேரடி ஒளிபரப்பல்லாத நிலையங்களுக்கு ரூபா 50,000. | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ 3 வருட காலப் பகுதியொன்றுக்குக் குறித்த பிரதேசங்களுக்குப் பந்தய நிலையங்களினை இடம்மாற்றுதல். | நிதி திட்டமிடல் அமைச்சு | சட்டமூலம் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது |
| <u>மது வரி</u> | | |
| ➢ மது வரி அதிகரிப்பானது வன் மதுபானங்களில் லீட்டர் ஒன்று ரூபா. 15/- மோல்ட் மதுபானம் லீட்டர் ஒன்று ரூபா. 5/-, சில்லறை மதுபான | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் விற்பனை நிலையங்களுக்கு ஏற்புடைத்தான வருடாந்த உரிமக் கட்டணத்தை அதிகரித்தல். | | |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி குறைப்பு** | | |
| ➢ செல்லிட தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள்கள், எப்ரிஏ ஏற்பாடுகளின் கீழ் தகுதி பெற்றதும் உள்ளூர் பெறுமதி சேர்வினை 30% இனால் உறுதிப்படுத்திய உள்நாட்டில் பொருத்தப்பட்ட புதிய மோட்டார் வாகனங்கள். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| ➢ **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி அதிகரிப்பு:** சிகரெட்டுகள் | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |
| **செஸ்** | | |
| ➢ சில இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான விகிதத் திருத்தங்கள். | நிதி திட்டமிடல் அமைச்சு | செயற்படுத்தப் பட்டுள்ளது |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**2006 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் மீதான முன்னேற்றம்**

**2006 நவம்பர் 13 அன்றுள்ளவாறு**

(02.) **அபிவிருத்தி முன்மொழிவுகள்**

| | வரவு செலவுத்திட்ட முன்மொழிவு | செயற்படுத்தல் முகவராண்மை (அமைச்சு/ திணைக்களம்) | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 1 | ***சமயங்களின் அபிவிருத்தி*** | | |
| | * ஒவ்வொரு சமய தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடாந்த புத்தக கொடுப்பனவு | சமய அலுவல்கள் | **75000 தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கு நவம்பர் இறுதியில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட புத்தகக் கொடுப்பனவு ரூபா 61 மில்லியனிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.** |
| | * பௌத்த விகாரைகள், கோயில்கள், பள்ளிவாசல்கள், மற்றும் தேவாலயங்களை பாதுகாத்தலும் புனரமைப்புச் செய்தல். | சமய அலுவல்கள் | **83 விகாரைகள் மற்றும் 12 தேவாலயங்கள் ரூபா 50 மில் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.** |
| 2 | ***கலையும் கலாசாரமும்*** | | |
| | * கலாநிகேதனய ஒன்றினை உருவாக்குதல் | கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் | தேசிய திட்டமிடல் திணைக்களம் கருத்திட்ட முன்மொழிவினை சிபாரிசு செய்துள்ளதுடன் கட்டிட வடிவமைப்பும் நிறைவடைந்துள்ளது. |
| | * யுனெஸ்கோவின் உதவியுடன் தேசிய திரைப்பட அக்கடமி ஒன்றினை நிர்மாணித்தல். | கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் | அசைச்சு கருததிட்ட முன்மொழிவொன்றினை தயாரித்துள்ளது. |
| | * சீன அரசாங்கத்தின் உதவியுடன் நவீன நாடகக் கலையரங்கமொன்று கொழும்பில் பூரணப்படுத்தப்படல் | கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் | இறுதி வடிவமைப்பானது அங்கீகாரத்திற்காகவேண்டி வடிவமைப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| 3 | ***ஊடகவியலாளர்கள்*** | | |

| | | | |
|---|---|---|---|
| | * ஊடகவியலாளர்களுக்கு கணனிகள், ஊடகக்கருவிகள் மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்கு சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள் | ஊடக மற்றும் தகவல் | மக்கள் வங்கியினூடாக ஊடக வியலாளர்களுக்கு கணனிகள், ஊடக உபகரணங்கள், மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்வதற்கு சலுகை கடன் வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| | * இளம் பத்திரிகையாளர்கள் தமது தொழில்சார் திறனை விருத்தி செய்வதற்கான நிதி உதவி | ஊடக மற்றும் தகவல் | 1,200 பத்திரிகையாளர்களுக்கு 7 செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. தகுதிபெற்ற பத்திரிகையாளர்களுக்கு நீண்டகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தெரிவுகள் |
| 4 | ***தாய்மார்க்கும் பிள்ளைகளுக்குமான நிகழ்ச்சித்திட்டம்*** | | |
| | * கர்ப்பினித் தாய்மார்களுக்கு இலவச போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் | சமுர்த்தி மற்றும் வறுமைத் தனிப்பு | 119 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 79,800 கர்ப்பினித்தாய்மார்களுக்கு ரூ. 500 பெறுமதியான "போஷனமல்ல" போஷாக்கு உதவிகளை வழங்குதல். |
| | * கர்ப்பினித் தாய்மார்களுக்கு கிராமிய வைத்தியசாலைகளுடன் தொடர்பான மருத்துவ ஆலோசனைகள் | சமுர்த்தி மற்றும் வறுமைத் தனிப்பு | குறித்த மருத்துவ ஆலோசனைகளை உள்ளடக்கிய 100,000 கையேடுகள் அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| | * 5 வயதுவரைக்குமான சிறுவர்களுக்கு, பால் கொள்வனவு கொடுப்பனவு ரூபா 200 மில்லியன் | சமுர்த்தி மற்றும் வறுமைத் தனிப்பு | 2 - 5 வயதுக்குட்பட்ட சிறுவனர்களுக்கு பால் வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தல் 10 பி.செ.பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 40,000 பயனுகரிகள் சமுர்ததித் திணைக்களம் இனம் காணப்பட்டவர்கள் ஏற்கனவே முத்திரிகைகளை வழங்கியுள்ளது. |
| | * குறைவிருத்தியடைந்த சிறுவர்களுக்கான பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம். | கல்வி | 100 ற்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் 01 மற்றும் 02 ஆம் வகுப்பில் உள்ள 301,578 சிறுவர்களை கொண்ட 6287 பாடசாலைகளில் செயற்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | * 'சேனஹாச' வங்கிக் கணக்கு | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல் | மக்கள் வங்கியினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. 683 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. ரூ.7.9 மில்லியன் கடனாகப் பெறப்பட்டுள்ளது. |
| 5 | | | |
| | ***பிள்ளைகள், முதியோர் மற்றும் வேறுபட்ட ஆற்றலுடையோருக்கான இல்லங்களுக்கான சலுகைகள்*** | | |
| | * முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், வேறுபட்ட ஆற்றலுள்ளவர்களுக்கான இல்லங்கள் ஆகியவற்றின் முகாமைப்படுத்தல். | சமூக சேவை மற்றும் சமூக நலனோம்பல் | 07 வயோதிபர் இல்லங்கள் கட்டிட நிர்மாணததிற்காக கேள்விப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. 15 ஊனமுற்றவர்களுக்கான இல்ல கட்டிட நிர்மாணத்திற்கான கேள்விப் பத்திரம் அனுமதிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 13 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. |
| | * 'ரகவரனை நிவச' இனைத் தாபித்தல் | சமூக சேவை மற்றும் சமூக நலனோம்பல் | 10 மில்லியன் ரூபா மீள ஒதுக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாண நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதாக |
| | * வேறுபட்ட ஆற்றல் கொண்டவர்களுக்கான கொடுப்பனவினை பொருத்தமான முறையில் அதிகரித்தல். | சமூக சேவை மற்றும் சமூக நலனோம்பல் | 10 மில்லியன் ரூபா மீள ஒதுக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாண நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதாக |
| | * சிறுவர் இல்லங்களை புனரமைப்பதற்கு நிதி உதவி | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல் | மேல் மாகாணத்தில் 02 சிறுவர் இல்லங்களின் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 6 | *தரமான சுகாதார முறைமை* | சுகாதார மற்றும் போஷாக்கு | 17 வைத்தியசாலை கட்டிட நிர்மாணத்தில் 15 வைத்தியசாலைகள் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. 10 வாகனங்கள் கொள்வனவிற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது. |
| 7 | *சமுர்த்தி ஊடாக ஜீவனோபாய அபிவிருத்தி* | | |
| | பிரதேச செயலாளர்கள் பிரிவொன்றுக்கு ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு | சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு | 6567 திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றது. ஆவற்றில் 707 திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டன. 425 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. |
| | * சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்வதற்கான கடன் | | மோட்டார் சைக்கிள் கடன் 15000 ச.அ.அலுவலர்களிற்கு சலுகை வட்டி அடிப்படையில் மக்கள் வங்கியினூடாக வழங்கப்படும் |
| | * சமுர்த்தி மாதாந்த கொடுப்பனவினை 50% இனால் அதிகரித்தல். | | 113 பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகரிக்கப்பட்டபடி கொடுப்பனவு 1,316 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. |
| | * மரணத்திற்கான உதவி, மகப் பேற்றிற்கான கொடுப்பனவுகளை அதிகரித்தலும் சமுர்த்தி சகன ஆரக்சன நிதியத்தினை உறுதிப்படுத்தல். | | "சமூக பாதுகாப்பு நிதி" ஊடாக டிசெம்பர் 2005 ம் ஆண்டிலிருந்து முன் மொழிவு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |
| 8 | *யொவுன் திறிய* | | |

| | | | |
|---|---|---|---|
| | *பல்வேறு அரசாங்க அமைப்புகளில் காணப்படும் திறன்சார் வெற்றிடங்களுக்கு 2006 ஆம் ஆண்டின் போது 10,000 பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல். | முழு அரசாங்கத்துறையின் | இலங்கை நிர்வாக கோவையில் 250 பேரும், மதிப்பீட்டாளர்கள் 536, 544 வரி அலுவலர்களும் இறைவரித் திணைக்களத்திலும் நியமிக்கப்பட்டதுடன் 116 புள்ளி விபரவியலாளர்கள், 21 சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர்கள் தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களத்திலும் நியமிக்கப்பட்டனர். |
| | *சான்றிதழ் வழங்கப்பட்ட தேர்ச்சி வழங்குநர்கள் | வாழ்க்கைத் தொழில், தொழில் பயிற்சி | சான்றளிக்கப்பட்ட தேர்ச்சி வழங்குபவர்களிற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டது. சான்றளிக்கப்பட்ட தேர்ச்சி வழங்குபவர்களின் விபரங்களடங்கிய விபரக்கொத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.பெலியத்த வீரவல தொழில் நுட்ப கல்லூரிகளை நவீன மயப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் மிரிஜாவெல்ல, கட்டுவண, கன்னறுவ, பாதுக்க ஆகிய இடங்களில் வாழ்க்கை தொழில் பயிற்சி நிலையங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 53 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது. |
| 9 | ***வெளிநாட்டு தொழில்வாய்ப்பு*** *தாதிமார் விஷேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தாதிமார்களைப் பயிற்றுவிப்பதற்கு தாதிமார் பாடசாலைகளை உருவாக்குதல். | தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு | நுகேகொட தற்காலிக பயிற்சி நிலையத்தில் டிசெம்பர் 2005 நடுப்பகுதியிலிருந்து 100 தாதிய மாணவர்களிற்கு முதல் தொகுதியில் பயிற்சி வழங்க அமைச்சு திட்டமிடப்பட்டுள்ளது. களுபோவில கொழும்பு தெற்கு பயிற்சி வைத்தியசாலையில் செய்முறை பயிற்சி வழங்கப்படும். |

| | | |
|---|---|---|
| * வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக கணனி விஞ்ஞானத்தில் விஷேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் போஷாக்கு அமைச்சு | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஏற்றதனை தகவல் தொழில் நுட்ப பயிற்சிகளை இளைஞர்களிற்கு வழங்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது வாழ்க்கை தொழில் பயிற்சி நிலையம், தேசிய தொழில் பயிலுனர் பயிற்சி சபை, வியாபார முகாமைத்துவத்துக்கான தேசிய நிலையம் என்பவற்றுடன் ஏற்ற பயிற்சி நெறியினை தீர்மானிப்பதற்காக கலந்துரையாடப்பட்டது. எனினும் இற்றைவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொருத்தமான நிறுவனத்தினை தெரிவு செய்யவில்லை. |

10 *தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி*

| | | |
|---|---|---|
| * தோட்டப் பாதைகளை புனரமைத்தல் (8000 கி.மி) | தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி | கேள்விப் பத்திரம் அனுமதிக்கப்பட்டு வீதி புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 614 கி.மீ வீதி புனர்நிர்மாணம் முடிவடைந்துள்ளதுடன் 325 மில்லியன் செலவழிக்கப்பட்டது. |
| * தோட்டத் துறையில் 50,000 வீடமைப்பு அலகுகளை அபிவிருத்தி செய்தல். | தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி | 10,530 வீட்டு நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டதுடன் 4132 வீட்டு நிர்மாணங்கள் பூர்த்தியாக்கப்பட்டன. ' இதற்கான 320 மில்லியன் ரூபா செலவளிக்கப்பட்டது. |
| * நுவரெலியாவில் தொழில் பயிற்சி கல்லூரி ஒன்றினை உருவாக்குதல். | தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி | நுவரெலியா பழைய மாவட்ட செயலகத்தின் ஓர் பகுதி இத் தேவைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | * தோட்டத்துறை பல்கலைக்கழகமொன்றினை உருவாக்குவதற்கான சாத்திய வள ஆய்வு | தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி | பங்குபற்றுனர்கள் இம் முன்மொழிவினை செயற்படுத்தும் விருப்பம் இல்லை. |
| 11 | *நகர வீடமைப்பு அபிவிருத்தி* | | |
| | *நகர வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தை உருவாக்குதல் நகர சேரிக் குடிசைகளில் வாழ்பவர்களுக்கான பிரத்தியேக வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (60,000) | நிதி, திட்டமிடல் | கருத்திட்ட அலகினைத் தாபித்தல் கேள்விப்பத்திர ஆவணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ரூபா 15 மில் செலவிடப்பட்டுள்ளது. |
| 12 | *விவசாயம்* | | |
| | * உரமானியம் | கமநலச் சேவைகள் மற்றும் விவசாய சமுதாயங்கள் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களம் | 114,327 மெற்றிக் தொன் உரங்கள் யால பருவத்தின் போது விநியோகிக்கப்பட்டுள்ளது. ரூ 10,669 மில் செலவிடப்பட்டுள்ளது. |
| | * இலுப்பல்ல விதை அபிவிருத்தி ஹொறணை, சீதா எலிய, கிராந்துரு கோட்டை லபதுவ விதைபண்ணைகள் மஹா இலுப்பிள்மை களப் பயிர் ஆராய்ச்சி நிறுவகம் | விவசாய அபிவிருததித் திணைக்களம் | 40,000 புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 64 தொன் களப் பயிர்கள் விதை மற்றும் 10 தொன் மரக்கறி விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| | * நெற் சந்தைப்படுத்தல் சபையினை / மீளதாபித்தல் (சுழற்சி நிதி) | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 2006 செப்டம்பர் 13 இல் சுழற்சி நிதியம் தாபிக்கப்பட்டது. ரூ. 3,313.6 மில் நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| * மங்குஸ்த்தான், தோடம்பழம், துரியம்பழம், பப்பாசிப்பழம், ரம்புட்டான் மற்றும் அன்னாசி பழம் விவசாய உற்பத்தி பிரத்தியேக வலயங்களை தாபித்தல். | விவசாய அபிவிருத்தி | தூரியான், மங்குஸ்தான், ரம்புட்டான், வாழைப்பழம், அன்னாசி, கிரியல அபிவிருத்திகளுக்கு வறண்ட வலையங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.ஈரப்பழா பதனிடல் நிகழ்ச்சித்திட்டம் கன்னொருவ உணவு ஆராய்ச்சி அலகில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| * விவசாய - பல்நோக்கு தாவரங்களின் மூலம் விவசாயத்தில் தரமேம்பாடு | விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் விவசாய அபிவிருத்தி | கேள்விப்பத்திரக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்த வழங்கல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. 4,750 பிளாஸ்ரிக் பெட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 10 மரக்கறி/பழங்கள் பதனிடல் கிராமங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. கேப்பிட்டிபொல மற்றும் வலது இடது கரைகளில் பின் அறுவடை தொழில் நுட்ப நிலையங்களை தாபித்தல். |
| - பொதியிடல் நிலைமையினை முன்னேற்றுதல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான போக்குவரத்தினைக் குறைத்தல். | விவசாய அபிவிருத்தி | 4,750 பிளாஸ்ரிக் பெட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 10 மரக்கறி/பழங்கள் பதனிடல் கிராமங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. கேப்பிட்டிபொல மற்றும் வலது இடது கரைகளில் பின் அறுவடை தொழில் நுட்ப நிலையங்களை தாபித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | விவசாய அபிவிருத்தி | பூச்சிக்கொள்ளி எதிர்ப்புக்கான சேதப்பொருள் வளர்ச்சித் தாவரங்களினை கண்காணித்தல். இரண்டு மதிப்பீட்டு முறைகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு மாதிரி இடங்கள் இனம் காணப்பட்டுள்ளன. பூச்சிக் கொல்லி பரிசோதனை ஆய்வு கூடத்தினை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பூச்சிக்கொள்ளி எதிர்ப்புக்கான சேதப்பொருள் வளர்ச்சித் தாவரங்களினை கண்காணித்தல். இரண்டு மதிப்பீட்டு முறைகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு மாதிரி இடங்கள் இனம் காணப்பட்டுள்ளன. பூச்சிக் கொல்லி பரிசோதனை ஆய்வு கூடத்தினை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | -தேசிய சேதன தராதரம் மற்றும் சான்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திடடத்தினை செயற்படுத்தல். | | |
| | | ஏற்றுமதி அபிவிருததிச் சபை | 2006 மே மாதம் 01 ஆம் திகதி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆலொசனையாளர்களின் ஆரம்ப விஜயம் பூர்த்தியடைந்துள்ளது. ஆய்வு பூர்த்தியாகியுள்ளது. கருத்திட்ட ஆலோசனை மற்றும் இயக்கக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஒரு செயலமர்வு கொண்ட மற்றும் லுனுவிலவில் இடம்பெற்றுள்ளது. |
| 13 | *பெருந்தோட்டக் கைத்தொழில்* | | |

| | | |
|---|---|---|
| * பெருந்தோட்ட விவசாயத்திற்காக 10 பில்லியன் சுழற்சி நிதியம் ஏற்படுத்தப்பட்டது. | பெருந்தோட்டக் கைத்தொழில் | இந்த சுழற்சி நிதியினை நம்பிக்கை நிதியமொன்றாக மாற்றுவது தொடர்பாக முன்மொழிவொன்றினைத் தயாரிப்பதற்கு அரச நிதி பணிப்பாளர் நாயகம் அமைச்சினைப் பணித்துள்ளார். பங்குபற்றுநர்களுக்கு மத்தியில் வரைவு நம்பிக்கை உறுதி கருத்துகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. |
| பெருந்தோட்ட அமைச்சினால் சொந்தமாக்கப்பட்டுள்ள காணி மற்றும் ஆதனங்களை வர்த்தக அடிப்படையில் அபிவிருத்தி செய்தல். நிதிப்பாய்ச்சல் ஒழுங்கை சுழற்சி நிதிக்கு ஒழுங்குபடுத்தல். | பெருந்தோட்டக் கைத்தொழில் | கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்து மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் வாடகைக்காரர்களுக்கிடையிலான புதிய வாடகை ஒப்பந்தத்திற்கு வேண்டுகொள்விடுத்தல். |
| * மஹாவலி பிரதேசங்கள் காலி, மாத்தறை, ஹம்மாந்தோட்டை, கம்பஹா, குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் தென்னைச் செய்கையினை அபிவிருததி செய்தல். | தெங்கு அபிவிருத்தி | விதை வழங்கல்கள் பூர்த்தி பயிரிடப்பட்டுள்ள அளவு 4,370 ஏக்கர்கள். 16,757 மெற்றிக் தொன் உரம் வழங்கப்பட்டுள்ளது. செஸ் நிதியானது முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| * மொனராகலை மாவட்டத்தில் 20,000 ஹெக்டேயர் இறப்பர் தோட்டச் செய்கையினை அபிவிருத்தி செய்தல். | பெருந்தோட்டக் கைத்தொழில் | 1,375 ஹெக்டேயர்களுக்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. நாற்றுமெடை மற்றும் மொனராகலை அலுவலக கட்டிட நடவடிக்கைகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளது. ஒட்டுத்தாவர நாற்றுமெடைக்கான காணி ஒழுங்குபடுத்தல் பூர்த்தி ரூபா.14 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. |
| * கந்தளாய் சீனித்தொழிற்சாலை ஹிங்குரானை தொழிற்சாலை ஆரம்பம் | | செயற்படாத அரச தொழில் முயற்சிகளுக்காக அமைச்சரவைக் குழு கந்தளாய் சீனித் தொழிற்சாலையினை இலங்கை இராணுவத்திற்குக் கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளது. இந்த விடயங்களை பொமுசீ ஆணைக்குழு மேற்கொள்ளும். |

| | | |
|---|---|---|
| * மஹா ஓயா, அநுராதபுர, மொனராகலையில் விதை …… பூங்காக்களைத் தாபித்தல். | பெருந்தோட்டக் கைத்தொழில் | விதைப் பூங்காக்களுக்காக காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மஹா ஓயா காணிபற்றிய ஆய்வு பூர்த்தி, காணி உரிமை தொடர்பாக வளப்பாதுகாப்புத் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றன. மோனராகலை காணி அளவைக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. …..காணி சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மஹாவி….பணிகள் நிறைவு. செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளன. ரூபா.11 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. |

14 *மகாவலி பொருளாதாரம்*

| | | |
|---|---|---|
| * உயர் தராதரமுள்ள நெல் அரைக்கும் ஆலைகள் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட விவசாய பதனிடலை உருவாக்குவதற்கு மகாவலி பிரதேசத்தில் 500 சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு சிறப்பான சிறிய நடுத்தர தொழில் முயற்சிக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தல். | விவசாயம், நீர்ப்பாசனமும் மகாவலி அபிவிருத்தியும் | 10.11.2006 ல் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கும் இ.ம.அ.சிறிய நடுத்தர முயற்சி வங்கிக்கிடையில் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இ.ம.அலினால் 11 தெரிந்தெடுக்கப்பட்ட 11 தொழில் முயற்சியாளர்களில் 7 முயற்சியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு சிறிய நடுத்தர தொழில் முயறசி வங்கியினால் கடன்கள் கொடுக்கப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | * பாரிய தம்புள்ள நகரமய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | நகர அபிவிருத்தி | கலெவல, மடத்துகம, ஹபரணை, நாவுல, மற்றும் சிகிரியா ஆகிய 5 நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதோடு முற்று முழுதான பாரிய தம்புள்ள அபிவிருத்தித் திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டது. "கமெட்ட" சமூக நிலையத்தினால் இடம் துப்பரவாக்கப்பட்டது. முற்றும் சேகரிப்பு நிலையத்தினுடையதும் களஞ்சியங்களினதும் புனரமைப்பு கிராமிய சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இணைப்பு வீதி திருத்தம் மேற்கொள்ளப்பட்டது மற்றும் 3 மதருகளை அமைத்தல். முன்மொழியப்பட்ட முதலீட்டுச் சபை குளிர்பதனிடல் களஞ்சிய கருத்திட்டத்திற்கான சமாந்தர இணைப்பு வீதிக்கான நிலம் சம்பந்தமான விடயங்களின் தடைகள் நீக்கப்பட்டன. |
| 15 | ***மீன்பிடித்துறை அபிவிருத்தி*** | | |
| | * பாலியகொடை சென்.ஜோன்ஸ் மீன்சந்தை கட்டிடத் தொகுதி | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் | மண் பரிசோதனை முடிவடைந்துவிட்டது. கட்டிடக்கலை கம்பனிக்கு வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை பகுதிகள் வழங்கப்பட்டது. நில கொள்வனவு முடிவடைந்தது ரூபா 61 மில்லியன் செலவளிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | மீன்பிடித்தல் தரமுயர்த்தல் நிதியை உருவாக்கல் | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் | 37 பன்னாள் படகுகள் ஆழ்கடல் படகுகள் நிகழ்ச்சித் திட்டத்தில் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. 140 படகுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பூாரிய கொள்கலன் நிகழ்ச்சித் திட்டததின் கீழ் 2 பாரிய கொள்கலன்களுக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருக்கின்றது. தொழிலநுட்ப மதிப்பீட்டு குழு தெரிவு செய்யும் முறை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூபா 17 மில்லியன் செலவளிக்கப்பட்டுள்ளது. |
| | * அலங்கார மீன் மாற்றீடு உருவாக்கப்பட்டது | மீன்பிடி மற்றும் வளங்கள் | 2006 கார்த்திகை 03 இல் மாற்றீடு நிலையம் திறககப்பட்டது. ரூபா 35 மில்லியன் செலவளிக்கப்பட்டது. |
| | * புத்தள மாவட்டத்தில் கூனி இறால் பண்ணைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கைத்தொழிலை விரிவுபடுத்தலும் | மீன்பிடி மற்றும் வளங்கள் | முந்தல வடக்கிலிருந்து பாலாவி வரையான 18 கி.மீ நீளமான சேற்றுப்படி கால்வாயில் 14 கி.மீ நீளத்திற்கான வேலை பூர்த்தியடைந்தது.மதுரங்குழியிலிருந்து பாலாவி வரையிலான 7.5 கி.மீ இல் 500 மீற்றர் வரையான வேலைகள் பூர்ததியாக்கப்பட்டுள்ளன. ரூபா 23 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளன. |
| 16 | ***புடவை பதனிடல் கைத்தொழில்*** | | |
| | * நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற புடவை கைத்தொழில் கடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தியாக்கல். | | கடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை செலவு பங்கீடு அடிப்படையில பூர்த்தி செய்வதற்கு வங்கி சம்மதம் அளிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | * துல்கிரியவை அர்ப்பனிக்கப்பட்ட புடவை பதனிடல் பகுதியாக மயப்படுத்தப்பட்டது. | | **7.7.2006** இல் மாஸ் கப்பிட்டல் ஹோால் டிக்ஸிக்கும் முதலீட்டுச் சபைக்குமிடையில் முதலீட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. **30.07.2006** இல் நிலக்குத்தகைக்காக ஒப்பந்தம் மாஸ் கப்பிட்டல் ஹோாலடிக்கும் முதலீட்டுச் சபைக்கு மிடையில் கைச்சாத்திடப்பட்டது. |
| | * கொரணலை பிரத்தியேக புடவை பதனிடல் பகுதியாக மயப்படுத்தப்பட்டது. | | மொரட்டுவை பல்கலைக்கழகம் சாந்தி வள ஆய்வு செய்வதற்கு வேண்டப்பட்டிருக்கின்றது. முதலீட்டுச் சபையால் மீள் அமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 17 | *புடவை மற்றும் ஆடைக் கல்லூரி* | பொது முயற்சி அபிவிருத்தி மற்றும் மூலதன ஊக்குவிப்பு | மாஸ் கப்பிட்டல் ஹோால்டிங் லிமிட்டெக்கு துல்கிரிய இடம் கையளிக்கப்பட்டது. பயிற்சி நிறுவனம் கம்பனியால் ஸ்தாபிக்கப்பட்டது. ஏசியன் அப்ரல் கூட்டுத்தொகுதியை கையேற்று அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்துவிடல் முதலீட்டு கருததிட்டமத்தை ஆரம்பிப்பதற்கு ஒரு கம்பனி ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. |
| 18 | *கட்டுநாயக்காவில் பிரதேச ஆடை வலயமாக உருவாக்கல்* | | முதலீட்டு முன்மொழிவுக்கான வடிவமைப்பு எண்ணக்கரு முன்மொழிவுக்கான வடிவமைப்பு எண்ணக்கரு முன்மொழியை தயாரிப்பதற்காக உள்ளூர் கட்டிடக்கலை கம்பனி வேண்டப்பட்டுள்ளது. |
| 19 | *காந்தாதிரிய* | | |

| | | | |
|---|---|---|---|
| | * பரிசு மற்றும் கைத்தறி கைத்தொழில் | புடவைக் கைத்தொழில் | 466 கைத்தறி இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 842 இயந்திரங்கள் மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளன. 465 பயிற்சியாளர்கள் கைத்தறிப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர் 76 பயிற்சியாளர்கள் தனியார் துறையில் இணைக்கப்பட்டுள்ளனர். ரூ 14மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. |
| | * பரிசுப் பொருட் கைத்தொழில் | தொழில் பயிற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 85 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதுடன் 60 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கருத்திட்ட விஜயங்களும் நேர்காணல்களும் இடம் பெற்றுள்ளன. 30 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆலோசகர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் ஆரம்ப நிகழ்வு நவம்பரில் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 20 | ***உயர் சந்தை சுற்றுலா*** | சுற்றுலாத்துறை | இலங்கை சுற்றுலாச்சபை கருத்திட்டத்திற்காகவேண்டி செஸ்சிலிருந்து ரூபா.100 மில் ஒதுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால் வேறு அவசிய தேவைப்பாடுகளினால் இல.சு.சபை கருத்திட்டத்திற்காக இதுவரை நிதி வழங்குவதற்கு இணங்கவில்லை. |
| 21 | ***அச்சிடல் மற்றும் பொதியிடல் கைத்தொழில்*** | | |
| | * பொதியிடல் அபிவிருத்தி நிலையமொன்றினைத் தாபித்தல். | | புதிய பொதியிடல் அலகொன்றினைத் தாபிப்பதற்குப் பதிலாக தற்பொழுதிருக்கும் பொதியிடல் நிலையத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 22 | *தனியார் பேருந்து சேவை வழங்குநர்களுக்கு சலுகை அடிப்படையிலான கடன் திட்டத்தினை அமுல்படுத்தல்.* | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 400 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதுடன் அவர்களது கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. |
| 23 | *"கமநக்ம" - சனசமூக அடிப்படை அபிவிருத்தி* | கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி | 119 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் 46 கிராமங்களில் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது கட்டம் செயற்படுததப்பட்டுள்ளது. 3 ஆவது கட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஜனசல மற்றும் ஜனசபா செயலகங்களுக்கான கட்டிட நிர்மானம், பாதைகள் மற்றும் மின்சார அபிவிருததி என்பவற்றுக்காக ரூபா.222 மில் செலவிடப்பட்டுள்ளது. |
| 24 | *கிராமிய மின் விநியோகத்திற்கான புதுப்பிக்கக் கூடிய சக்தி* | | |
| | * கிராமிய வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள புதுப்பிக்கக்கூடிய சக்தி இணைப்பு ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபா மானியம் வழங்குதல்.<br>* புதுப்பித்தல் சக்தி ஒத்துழைப்பு பிணை மிதக்கவிடப்படல். | | குறித்த முகவராண்மைகளுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்திய பின்னர் சக்தி பாதுகாப்பு நிதியமானது தேசிய திட்டமிடற் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக வேண்டி கருத்திட்ட முன்மொழிவொன்றினை சமர்ப்பித்துள்ளது. சாத்தியப்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. |
| 25 | *நிர்மாணக் கைத்தொழிலினை நவீனமயப்படுத்தல்* | | |
| | * நிர்மாணக் கம்பனிகளிற்கு உதவுவதற்கு கடன் உத்தரவாத திட்டத்தினைச் செயற்படுத்தல் | நிதி, திட்டமிடல் | லங்கா புத்ரா அபிவிருத்தி வங்கி மூலம் முன்மொழிவுகள் செயற்படுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 26 | ***"லங்கா புத்ரா" வங்கியினை உருவாக்குதல்*** | நிதி, திட்டமிடல் | வங்கி அதன் செயற்பாடுகளை தற்பொழுது ஆரம்பித்துள்ளது. ஆரம்ப மூலதனமாக ரூபா.1500 மில்லியனை திறைசேரி வழங்கியுள்ளது. |
| 27 | ***புதுமை கண்டுபிடிப்பு வசதியளிப்புகளும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வலையமைப்பும்*** | | |
| | * புதிய கண்டுபிடிப்பு வசதி வலையமைப்பை உருவாக்குதல். | தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு | 60 புரோடோ-வகை உற்பத்திகள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது. 3,300 இளம் கண்டு பிடிப்பாளர் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 112 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் பாடசாலை கண்காட்சிகள் நடத்தப்பட்டன. ரூபா.17 மில் செலவிடப்பட்டுள்ளன. |
| | * விஞ்ஞான ஆராய்ச்சியினை மேம்படுத்தலும் ஏனைய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் வலையமைப்பை ஏற்படுத்தலும் | சனாதிபதி செயலகம் | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 30 ஆராய்ச்சியாளர்களுக்கு ரூபா. 100 மில் வழங்கப்பட்டுள்ளது. |
| 28 | ***சர்வதேச உறவுகள் மற்றும் உபாயக் கற்கைகளுக்கான நிறுவனம்*** | வெளிநாட்டு அலுவல்கள் | இந்நோக்கத்திற்காக மாண்புமிகு லக்ஷ்மன் கதிர்காமரின் பெயரில் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளது. இராசதந்திர உறவுகளில் அறிவை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| 29 | *தொழில் உறவுகளுக்கான கல்விக் கழகம்* | தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு | இந்த நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு கூட ......மற்றும் நிர்வாக ஏற்பாடுகள் தொழில் உறவுகள் அமைச்சு பூரணப்படுத்தியுள்ளது. இது தொழில் திணைக்களததின் தொழிலாளர் கல்விப் பிரிவுடன் இணைக்கப்படும். சான்றிதழ் மற்றம் டிப்ளோமா மட்ட கற்கைகளுக்கு கல்வி மற்றும் பயிற்சி மொடியுல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமைச்சு குறித்த நிறுவகத்தை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடத்தை தேடிக்கொண்டிருக்கின்றது. |
| 30 | *அரசாங்க ஊழியர்களின் சம்பளம்* | | |
| | * வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 06/2006ஆம் இலக்க 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இது திருத்தப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்துறை ஊழியர்களும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 27 மற்றும் 28 ஆம் இலக்க சுற்றுநிருபத்தினால் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| | * சம்பள அதிகரிப்பு | | இல.06/2006 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி விடுமுறைக்குப் பணம் வழங்குதல் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | * பெறப்படாத விடுமுறைகளில் ஆகக்கூடியது 30 நாட்களுக்கு பணம் வழங்குதல் | | இல.06/2006 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி விடுமுறைக்குப் பணம் வழங்குதல் அறிமுகப்படுத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| * தந்தை மகப்பேற்று விடுமுறை | | இல.06/2006 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி தந்தை மகப்பேற்று விடுமுறை வழங்கப்பட்டது. |
| * குறித்த வகுப்பினருக்கு ஆபத்து காப்புறுதித் திட்டம் | | இல.06/2006 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி அரசாங்கத்துறை பதவி வகுப்பாக்கம் உருவாக்கப்பட்டது. |
| * அரசாங்கத்துறை உதவி வகுப்பாக்கத்தினை உருவாக்கல் | | ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடைமுறைப்படுத்தலுக்காக |
| அரசாங்க அலுவலர்களுக்கான வைத்தியசாலை வாட்டுக்களை அமைத்தல். | | 6 வைத்தியசாலைகள் இனம் காணப்பட்டுள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படும். |
| * அக்ரஹாரா காப்புறுதித் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு மருத்துவ நலன்களை வழங்குதல். | தேசிய வரவுசெலவுததிட்ட திணைக்களம் | தேசிய நம்பிக்கை நிதியச் சட்டம் 28/2006 மூலம் தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| * பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு வீடமைப்புக் கடன் | பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | இல.06/2006 2006.04.24 ஆந்திகதிய 129ஆம் இலக்க சுற்றுநிருபம் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களததினால் வெளியிடப்பட்டது. பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி |
| * சம்பளத்தின் 07 வருடங்களுக்கு அரசாங்க சேவை வீடமைப்புக் கடன் வழங்கல் | | இல.06/2006 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி |
| * வங்கித் தொழில் முறைமையினுர்டாக அரசாங்க ஊழியர்களின் வாசனக் கடன் செயற்பாடு | | இல.06/2006 2006.04.25 ஆந்திகதிய பொதுநிர்வாக சுற்றுநிருபத்தின்படி |
| * வாகனம் கொள்வனவு அனுமதிப்பத்திரம் | நிதி அமைச்சு | இன்னும் தீர்மானிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| 31 | *ஓய்வூதியங்கள்* | | |
| | * ஓய்வூதியம் பெறுநர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | ஓய்வூதியத் திணைக்களம் | கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| | * ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ஒருங்கிணைந்த இடைக்கால கொடுப்பனவுகளை வழங்குதல் | ஓய்வூதியத் திணைக்களம் | கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| | * ஓய்வூதியத்துடன் வழங்கப்படும் நன்மைகளை விரிவாக்குதல் | ஓய்வூதியத் திணைக்களம் | சேவைகள் தீருத்தப்பட்டவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| | * விதவைகள் அவர்களது கொடுப்பனவினை தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் வகையில் விதவைகள் அநாதைகள் சட்டத்தினைத் திருத்துதல். | ஓய்வூதியத் திணைக்களம் | இந்த திருத்தத்திலிருந்து நடவடிக்கைகள் |
| 32 | *குற்றத்தடுப்பு* | பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் கட்டளை | **175 முச்சக்கரவண்டிகள், 4 டபிள்கப்கள், 6 பஸ்கள் 18 சிங்கல் கப்ஸ் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 01 படகு தயாரிக்கப்பட்டுள்ளது.** |
| | * சமுதாயக் கொள்கை ஆக்கத்தினை மேம்படுத்தல் | | |
| | *வர்த்தக நிலையங்களுக்கு அன்மையில் புதிய பொலிஸ் நிலையங்கள் | | |
| | *இலத்திரனியல் பாதுகாப்பு முறைமையினை பொறுத்துதல் | | |
| | * கடற்பாதுகாப்பு செயன்முறை | | |

| | | | |
|---|---|---|---|
| | * தானியங்கி விரல் அடையாள முறைமை ஒன்றினை நிறுவுதல். | | |
| 33 | ***ஒருங்கிணைந்த அனர்த்த பாதுகாப்பு முகாமைத்துவம்*** | | |
| | * அனர்த்த பாதுகாப்பு முகாமைத்துவம் | அனர்த்த மற்றும் காலநிலை அவதான திணைக்களம் | 6 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. |
| | * காலநிலை பாதுகாப்பு ராடர்முறைமை | | உலக வளிமண்டல அமைப்பின் ஊடக டப்ளர் ராடார் கருவியினை கொள்வனவு செய்ய அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 34 | ***அக்கரஹார காப்புறுதி நம்பிக்கை நிதியம்*** | நிதி, திட்டமிடல் அமைச்சு | 2006.08.29 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 35 | ***கமட கர்மாந்த- 300 தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டம்*** | கைத்தொழில் அபிவிருத்தி தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் 9 கருத்திட்டங்களுக்கான கட்டிட நிர்மாணப்பணிநடைபெறுகின்றது. 4 கைத்தொழில்கள் வர்த்தக உற்பத்திகளை ஆரம்பித்துள்ளன. தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் 63 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. 23 கைத்தொழிற்சாலைகள் தற்பொழுது நிறுவப்பட்டுவருகின்றது. 14 தொழிற்சாலைகள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. |

## அரசிறை வழிமுறைகள்

| | ரூ. மில். |
|---|---|
| வருமான வரியிலான மாற்றங்கள் | 1,500 |
| பெறுமதிசேர் வரியிலான மாற்றங்கள் | 2,700 |
| செஸ் வரியிலான சீராக்கங்கள் | 1,200 |
| சுங்கத் தீர்வையிலான சீராக்கங்கள் மற்றும் (தீர்வைத் தளர்த்தல்களின் நீக்கம்) | 2,500 |
| கலால் (விசேட) ஏற்பாட்டு வரியிலான சீர்திருத்தங்கள் | 1,250 |
| துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி | 4,000 |
| பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வரி | 1,600 |
| விஸாக் கட்டணம் மற்றும் கடவுச் சீட்டுக் கட்டணங்களின் திருத்தம் | 1,200 |

## செலவின வழிமுறைகள்

| | ரூ.மில். |
|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | |
| தெரிந்தெடுக்கப்பட்ட மீண்டெழும் செலவினங்கள் மீதான 2 சதவீதக்குறைப்பு (குறிக்கோள் குறியீட்டு எண் 1202,1205,1301,1401,1402,1403) | -900 |
| குறைவாகச் செயலாற்றும் தொழில் முயற்சிகளுக்கான ஏற்பாடுகளிலிருந்து 5 சதவீதக் குறைப்பு | -1,000 |
| இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வின் கடுமையான நடைமுறைப்படுத்தல் | -1,100 |
| சம்பள முரண்பாடுகள் மற்றும் தொடர்பான எதிர்பாராச் செலவுகள் | 2,000 |
| பாதுகாப்பற்ற பகுதிகளில் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான விசேட நலன்புரி | 150 |
| பெருந்தோட்ட சமுதாய நலன்புரி | 150 |
| **மூலதனச் செலவினம்** | |
| மூலதனச் செயற்றிட்டங்களின் இரட்டிப்பை இல்லாமல் செய்தல் மற்றும் வீதிகள், வீடமைப்பு. நீர்ப்பாசனம், மின்வலு மற்றும் ஜீவனோபாயத்திற்கு மீள்வழிப்படுத்தல் | -16,000 |
| குறைச் செலவினத்திலிருந்தான சேமிப்புக்கள் மற்றும் கொண்டு செல்லப்பட்ட செலவழிக்காத ஏற்பாடுகள் | -25,500 |
| ஈ கிராமம் முன்னோடிச் செயற்றிட்டம் | 1,000 |
| பத்தலகொட அரிசி ஆராய்ச்சி நிறுவனம் | 100 |
| லங்காபுத்திர வங்கி | 100 |
| மாகாண மேல் நீதிமன்றம் | 2,000 |
| சமய நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரித்தல் | 100 |
| உற்பத்தித்திறன் மேம்பாட்டிற்கான சனாதிபதி செயலணிக்குழு | 150 |

**மொத்த கடன்பாடுகளின் தேவைப்பாடு - 2007**

| | *ரூ.பில்* |
|---|---|
| அரச கடன்பாடுகள் தவிர்ந்த மொத்தப் பெறுகைகள் | 646 |
| மொத்தக் கொடுப்பனவுகள் | 1,281 |
| இடர்நேர்வுக்கான ஏற்பாடு | 20 |
| அரச கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய மொத்த கடன்பாட்டுத் தேவைப்பாடுகள் | 655 |
| மொத்த படுகடன் மீள் கொடுப்பனவு | 336 |

இதன்படி, ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கடன்பாட்டுத் தேவை ரூ.695 பில்லியனிலிருந்து ரூ.655 பில்லியனுக்கு குறைக்கப்படும்

### இணைப்பு III

## I. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்)

### 1. உள்ளீட்டு வரிக் கோரிக்கை

2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பின்வரும் வரையறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

(அ) தொடர்புபட்ட வரி அறவிடக்கூடிய காலவரையறைக்கு வாய்ப்பளிக்கும் உள்ளீட்டு வரியின் அளவு அல்லது வெளியிடப்படும் உற்பத்தி வரியில் 85% ஆகிய பெறுமானங்களில் மிகக் குறைந்த பெறுமானம் வரை உள்ளீட்டு வரிக் கோரிக்கை மட்டுப்படுத்தப்படும்.

நிலுவை ஏதும் இருப்பின் முன்கொண்டு செல்வதற்கும், அதனைத் தொடர்ந்து வரும் வரி அறவிடக்கூடிய காலப் பிரிவுகளில் மேற்போந்த வரையறைகளுக்குட்பட்டு அந்த நிலுவை கோரப்படலாம்.

எவ்வாறாயினும், பின்வரும் வழங்குநர்களுக்காக மேற்போந்த வரையறைகள் ஏற்புடைத்தாகா.

- பூச்சிய பெறுமான வழங்கல்கள் வழங்கப்படும் வழங்குநர்கள்.
- ஏற்றுமதியாளர்களுக்கான பண்டங்கள் அல்லது சில சேவைகளை வழங்கலுக்காக புடவைப் பங்குச் சபையில் அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குநர்கள்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் 22(7) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்கள்.

(ஆ). பயணிகள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்காக தற்போது அளிக்கப்படும் 50% உள்ளீட்டு வரி வாய்ப்பு முற்றாக நீக்கப்படும். மோட்டார் வாகனங்களுக்கான உள்ளீட்டு வரி என்பதில் கொள்வனவுகள், காப்புறுதி, பழுதுபார்ப்பு முதலிய செலவினங்கள் போன்ற உள்ளீட்டு வரிகளும் உள்ளடங்கும்.

(இ). “வரி பற்றுப்பத்திரம்” மீதான சீராக்கல்களுக்காக தற்போது கால வரையறை விதிக்கப்படவில்லை. “வரி பற்றுப்பத்திரம்” மீதான உள்ளீட்டு வரிச் சீராக்கல்கள், தொடக்க வரி இன்வொய்ஸ் பிறப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாத காலத்துள் வெளியிடப்பட்ட “வரி பற்றுப்பத்திரங்களுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்படும்.

**2. உள்ளீட்டு வரி மீளப்பெறப்படும்போது விதிக்கப்பட்டிருந்த பின்வரும் வரையறைகள் 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு நீக்கப்படும்.**

(அ). ஏற்றுமதிக்கான பண்ட உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர் ஒருவரால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் அந்த உற்பத்தியாளனாலேயே ஏற்றுமதி செய்யப்படுவதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திருப்தி கொள்வாராயின், அந்த உற்பத்தியாளரால் ஏற்றுமதிக்கான பண்ட உற்பத்திக்குக் கையாளப்படும் மூலப்பொருள் இறக்குமதிக்காக 20% வீதத்தின் கீழ் செலுத்தப்படும் வரி சார்பாக உள்ளீட்டு வரியைப் பெற்றுக்கொள்ளும்போது விதிக்கப்பட்டிருந்த 15% வரையறை ஏற்புடைத்தாகாது.

(ஆ). வரிக்குட்பட்ட வழங்கலின் பின்னர் வரி விடுதலை வழங்கல் ஒன்றாக மாறிய வேளையில், ஏலவே பெற்றுக் கொண்டுள்ள உள்ளீட்டு வரி வாய்ப்பளிக்காத, தற்போதைய சீராக்கல் நீக்கப்படும்.

**3. ஏனைய திருத்தங்கள்:**

(1) 2006.11.27 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பண்ட இறக்குமதியின்போது தீர்வை வரிப் பணிக்காகத் தீர்மானிக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதியின் பேரில் சுங்கத்தில் அறவீடு செய்யப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான எல்லை இலாபம் 7 வீதத்திலிருந்து 10 வீதம் வரை அதிகரிக்கப்படும். செஸ் வரி மற்றும் உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிக் கணிப்பீட்டுக்கும் அத்தகைய எல்லை இலாபத்திற்கான வரி வீதமே ஏற்புடைத்தாகும்.

(2) அரசாங்க நிறுவனங்களுக்கான வழங்கல்களுக்காக ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஏனைய எந்தவொரு சேவை வழங்குநருக்கும் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் மீது வரித் தொகையில் 1/3 ஐ நிறுத்தி வைப்பதுடன் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு மேற்கொண்ட அதே தினத்தில், அத்தகைய நிறுத்திவைத்தல் வரித்தொகை நேரடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டும். இங்கு, எந்தவொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள், இலங்கை அரசாங்க தொழில்முயற்சிகள், அரச கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள், பல்கலைக்கழகங்கள், முதலீட்டுச் சபை, அரச வங்கிகள், அரசாங்கத்தின் மூலம் நிதியுதவி அளிக்கப்படும் கருத்திட்டங்கள் மற்றும் திரட்டு நிதியத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படும் நிறுவனங்கள் என்பன அரசாங்க நிறுவனம் என்பதில் அடங்கும்.

(3) பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்குட்படும் புரள்வு வரையறை ஏறத்தாழ ரூ.1.8 மில்லியனுக்கு அண்மிய எனினும் பதிவு செய்யப்படாத ஆட்கள் 5% மீள அளிக்கப்படாத பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையொன்றைச் செலுத்தக்கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- இந்தத் திட்டம் தொண்டு அடிப்படையில் செயற்படுத்தப்படும்.
- புரள்வு ஆண்டொன்றுக்கு ரூ. 2.5 மில்லியன் வரையில் அல்லது இந்த முறைக்கு உட்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டு காலம் வரை ஆகிய வரையறைகளில் முன்னர் எழும் வரையறை வரை, 5% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துவது அத்தகைய ஆட்களுக்கு முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும்.
- சாதாரண பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தும் பணிக்காகப் பதிவு செய்யப்படாதுள்ள ஆட்களுக்கு வரி இன்வொய்ஸ் வழங்கப்பட முடியாது.
- உள்ளீட்டு வரிகளுக்கு வாய்ப்பளிக்கப்படமாட்டா.
- மேற்போந்த வரையறைகளை எய்த முன்னரும்கூட, சாதாரண பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு பதிவு செய்யப்படுவதற்கான தற்றுணிபு அத்தகைய ஆட்களுக்குண்டு.

(4) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி புடவை வழங்கலானது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(5) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தல் தேவைக்காக வழங்கப்படும் பெறுமதியைக் கணிப்பிடும் பணிப்பாக, எந்தவொரு பரிசூதிய வகையையும் சேர்ந்த சீட்டுக்களையும் விற்பனை செய்யும்போது, எந்தவொரு பிரதிநிதிக்கும் செலுத்தப்பட்ட எந்தவொரு தரகுத் தொகையும் குறைக்கப்படலாம்.

உருப்படி (1) தவிர எஞ்சிய திருத்தங்கள் 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

## II. காப்புறுதிக் கைத்தொழில்

1. காப்புறுதிக் கைத்தொழிலிலிருந்து பெறப்படும் இலாபங்களையும் வருமானங்களையும் தீர்மானிக்கும்போது, ஆயுள் காப்புறுதி மற்றும் ஏனைய காப்புறுதிகள் தனியான தொழில் முயற்சிகளாகக் கருதப்படும். ஒரு காப்புறுதி முயற்சியிலிருந்து எழும் இலாபத்திற்கு எதிராக ஏனைய காப்புறுதி முயற்சி சார்பாக கொடுத்துத் தீர்ப்பதற்கு வாய்ப்பில்லை.

2. சகல காப்புறுதி கம்பனிகளும் தமது மீள் காப்புறுதித் தொழில்முயற்சிகளைக் குறைந்தபட்சம் 50 வீதமேனும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கீழ் நடாத்திச் செல்வது கட்டாயமானதாகும்.

## III. கம்பனியின் இலாபங்களைப் பகிர்ந்தளித்தல்

2007, ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டுக்கும், கம்பனியொன்றுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பங்கிலாபம், பகிரக்கூடிய இலாபத்தில் 25 வீதத்திற்குக் குறைவாகவுள்ள சந்தர்ப்பங்களில், ஏலவே பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபத்தின் அளவை விஞ்சும், பகிரக்கூடிய இலாபத்தில் 1/3 மிகையின் பேரில் 15 வீத மேலதிக வரியொன்று குறித்த கம்பனிகளால் செலுத்தப்பட வேண்டும்.

இங்கு, எந்தவொரு ஆண்டுக்காகவும் பகிரப்படக்கூடிய இலாபத்தின் அளவு குறித்த ஆண்டுக்கான வரி செலுத்தியதன் பின்னரான இலாபமாக அமைவதுடன், அந்த ஆண்டுக்கு காணிகளுக்கும் ஏனைய ஆதனங்களுக்குமான முதலீட்டில் அந்த ஆதனங்களுக்காக அந்த ஆண்டுக்கு அறவிடப்பட்ட தேய்மானக் கொடுப்பனவைக் குறைத்ததன் பின்னரான முதலீடுகளின் பெறுமதியைக் குறைத்த பின்னர் பெறப்படும் பெறுமானமாக அமையும்.

## IV. சிறிய அளவிலான கம்பனிகளின் வரி விதிப்பு

1. 2007, ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, கம்பனி, கூட்டுத் தொழில்முயற்சியொன்றினால் நிருவகிக்கப்படும் ஒரு கம்பனியாக அல்லது கூட்டுத் தொழில்முயற்சியொன்றின் துணைக் கம்பனியாக இருக்கும்போது சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் அத்தியாயம் 'ஆ' 15 சதவீதம் அத்தயை ஒரு கம்பனிக்கு ஏற்புடைத்தாகாதவாறு உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்தப்படும். அவ்வாறன்றிய வேளைகளில், 15 வீதம் ஏனைய கம்பனிகளுக்கு ஏற்புடைத்தாகும்.

2. அந்தக் கம்பனிகள், 2007 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பொருளாதார சேவைகள் கட்டண வீதம் 1 வீதம் முதல் 0.5 வீதம் வரை குறைக்கப்படும்.

## V. அறவிட முடியாக் கடனும் அறவிடமுடியாக் கடனுக்கான விசேட ஏற்பாடுகளும்

1. பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடனுக்கான வருமான வரி ஏற்பாடுகள் மாற்றமின்றி இருக்கும்.

2. ஒரு வங்கி அல்லது நிதிக் கம்பனி அல்லது வங்கிகள், நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகளுக்குச் சமனான சேவைகளை வழங்கும், ஆளெவரினதும் குறிப்பான கடன் ஏற்பாடுகளுக்கான குறைப்புகள், பின்வரும் அளவுகளை விடக் குறைந்த அளவு வரை மட்டுப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்தப்படும்.

   - ஒதுக்கீடுகளின் உள்ளபடியான அளவு அல்லது
   - ஆண்டிறுதியில் உள்ளவாறான கடன்படுநர் நிலுவையில் 1 வீதம்

3. ஏனைய வர்த்தகங்கள், தொழில் முயற்சிகள் ஆகியவற்றின் குறித்துரைக்கப்பட்ட கடனுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில், அத்தகைய ஒதுக்கீடுகளுக்கான விசேட கணக்காய்வு அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பது கட்டாயமானதாக அமையும். குறைப்புகளுக்காக செய்யப்படும் கோரிக்கைக்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியினால் அவரின் தீர்மானத்தை வழங்கும் போது ஏனைய விடயங்களுடன் இந்த அறிக்கையும் கருத்திற்கொள்ளப் படும்.

   இது தொடர்பான திருத்தங்கள் 2007 ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

## VI. பொருளாதார சேவை கட்டணம் (ESC)

பின்வரும் ஏற்பாடுகளைச் செய்யும்பொருட்டு, 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண சட்டம் திருத்தப்படும்.

அ. வரிக்குட்படும் புரள்வு வரையறை, ரூபா 10 மில்லியனிலிருந்து ரூபா 7.5 மில்லியன் வரை குறைக்கப்படும்.

ஆ. ஒரு தொழில்முயற்சி அல்லது தொழில்முயற்சியின் அலுவல்களை ஆரம்பித்த தினத்திலிருந்து 3 ஆண்டு காலத்திற்கான புரள்வு, பொருளாதார சேவைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு தற்போது உட்படாது. இந்த 3

ஆண்டுகால வரி அறவிடாமை, எதிர்காலத்தில் உற்பத்திக் கைத்தொழிற்றுறை தொடர்பில் மாத்திரம் ஏற்புடைத்தாகும்.

இ. செலுத்திய பொருளாதார சேவைக் கட்டணம், அதிக பங்கு செலுத்த வேண்டிய வருமான வரியிலிருந்து குறைத்துக்கொள்ளக்கூடிய காலப் பகுதியானது, 3 வரியாண்டுகளிலிருந்து 5 வரியாண்டுகள் வரை நீடிக்கப்படும்.

ஈ. ஒரு காலாண்டுக்காக பொருளாதார சேவைக் கட்டண மதிப்பீடொன்றைத் தயாரிப்பதுடன் தொடர்பான காலப்பிரிவு, தொடர்புபட்ட காலாண்டின் இறுதியிலிருந்து 18 மாதங்களுக்கு வரையறுக்கப்படும்.

உ. சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல் மதிப்பீடொன்றைச் சமர்ப்பிக்போது மதிப்பீட்டாளரால் அறிக்கை ஏன் ஏற்றுக்கொள்ளப்பட வில்லையென்பதை விளக்குவது அவசியமானதாக அமையும்.

(ஊ) வீத மாற்றங்கள்

| | புரள்வு | உத்தேச வீதம் | தற்போதைய வீதம் |
|---|---|---|---|
| 1. | வருமான வரி விலக்களிப்பு<br>(இ. மு.ச. தொழில் முயற்சிகள் உள்ளிட்ட) | 0.25% | 0.25% |
| 2. | சலுகை வீதங்களின் கீழ் வரிக்குட்படும்<br>(5 ஆம் அட்டவணை) | 0.5% | 0.5% |
| 3. | மொத்த மற்றும் சில்லறை -<br>- மோட்டார் வாகனங்கள் மற்றும் மதுபானம் விற்பனை செய்யும் வர்த்தகர்களும் விநியோகத்தர்களும் தவிர<br>- வாகனங்கள், மதுபான வர்த்தகர்கள் | 0.25%<br>0.5% | 0.5%<br>0.5% |
| 4. | விநியோகத்தஸ்தர்கள் பொ.சே.க. சட்டத்தில் | 0.5% | 0.1% |

| | | | |
|---|---|---|---|
| | விபரிக்கப்பட்டவாறு) | | |
| 5. | இரத்தினக் கற்கள்/ ஆபரணங்கள் / வைரம் (இ.மு.ச. கம்பனிகள் உள்ளிட்ட)<br><br>1. உற்பத்திசெய்து உள்ளூர் சந்தையில் விற்பனை செய்தல்<br>2. ஏற்றுமதி<br>- இரத்தினக்கல்/ வைரம் வெட்டுதலும் ஒப்பமிடுதலும்<br><br>- ஆபரணங்கள் | 1%<br><br>1%<br><br>(பெறுமதி சேர்ப்பின் மீது)<br><br>0.25% | 1%<br><br>0.25%<br><br>(மொத்தப் பெறுமதியின் மீது)<br><br>0.25% |
| 6. | ஆடை<br>(இ. மு. ச. கம்பனிகள் உள்ளிட்ட)<br><br>- ஆடை ஏற்றுமதியாளர்கள்<br>- ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புடவைகளை வழங்கும் வழங்குநர்கள்.<br>- இ.மு.ச. அங்கீகரித்த ஆடை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள்.<br>(1) மொத்தப் புரள்வு க.மு.பெ. (FOB) படி கணிப்பிடப்பட்டிருப்பின்<br><br>(2) பெறுமதி சேர்த்தல் மீது கணிப்பிடப்பட்ட க.மு.பெ. (FOB) தவிர.<br>(வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கு உட்பட்டு) | 0.1%<br><br>1.0% | மொத்தப் புரள்வின் மீது 0.5% இலிருந்து 0.25% வீதம் வரை மாறுபடும்.<br><br>மொத்தப் புரள்வின் மீது 0.5% இலிருந்து 0.25% வீதம் வரை |

| | | | |
|---|---|---|---|
| | | | மாறுபடும். |
| 7. | க.மு.பெ. (FOB) இன் மீது துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் வர்த்தகம் உள்ளூர் கொடுக்கல் வாங்கலாகும்போது | 0.1% | 0.5% |
| 8 | பரிசூதியம், பந்தயம் அல்லது சூதாட்டச் செயற்பாடுகள் | 1% | 1% |
| 9. | இரண்டாவது அட்டவணையின் பகுதி அ மற்றும் ஆ (1) இன் மீது வருமான வரிக்குட்படும் | 0.5% | 1% |
| 10. | பெறுமதி சேர்ப்பின் மீது கப்பல் பண்டம் அனுப்புவோர் (வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு) | 1% | 1% |
| 11. | சில மதுபான உற்பத்திகள் தவிர உலர்த்திய தேங்காய், தேங்காய் எண்ணெய், தென்னந் தும்பு, கொப்பரை, சீட் இறப்பர் உள்ளிட்ட தேயிலை, தெங்கு, இறப்பரின் முதல்கட்ட மாற்றங்கள். | 0.25% | 0.5% இலிருந்து 1% வரை மாறுபடும். |
| | வேறு | 1% | 1% |

**(எ) விலக்களிப்புகள்-**

1. துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் வர்த்தகம் - கடல் கடந்த கொடுக்கல் வாங்கல்களின் புரள்வு.

2. மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீளத் திறத்தல் - மீளத் திறக்கப்பட்டதிலிருந்து 3 ஆண்டு காலம் பூர்த்தியடைதல்.

இந்தத் திருத்தங்கள், 2007 ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் ஏற்புடைத்தாகும்.

## VII. பங்குடைமை மீதான வரி விதிப்பு

1. ரூபா 600,000 கொண்ட வரி செலுத்துதலுக்கு உட்படும் வரையறையைப் பங்குடைமைகளுக்கு விதிப்பதற்காக உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்தப்படும்.

2. பகிரக்கூடிய இலாபம் ரூபா 600,000 ஐத் தாண்டுமாயின், ரூபா 600,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு மாத்திரம் 10 வீத வரி ஏற்புடைத்தாகும்.

3. பங்குடைமையாளர்களிடையே இலாபங்களைப் பகிரும்போது வரி செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்படும் வரையறையும் உள்ளிட்ட மொத்தத் தொகை, பங்குடைமையின் இலாபமாகக் கருதப்படும்.

## VIII. கூறு நம்பிக்கைப் பொறுப்புக் கைத்தொழில்

1. பங்கு விற்பனையின் மூலம் பெறப்படும் இலாபங்களை வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்குமாறு கோருவதற்கு கூறு நம்பிக்கைப் பொறுப்புகளுக்கு இயலுமானவாறு அமையும் பொருட்டு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு (பந்தி Y) திருத்தப்படும்.

2. கூறுகளை வெளியிடுதல் அல்லது மாற்றுவதற்கான ஆவணங்களை வரி செலுத்துதன் மூலம் விலக்களிப்பதற்காக முத்திரை வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படும்.

3. கூறு நம்பிக்கைப் பொறுப்பை 0.5 சதவீத பொருளாதார சேவைக் கட்டண வீதத்திற்காகத் தகுதிப்படுத்தக்கூடியவாறு திருத்தப்படும்.

## IX. தவறவிடப்பட்ட வரிகளைத் திரட்டல்

உள்ளூர் இறைவரி ஆணையாளர் அதிபதியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட தவணைக் கட்டணம் செலுத்தும் திட்டத்தின்படி 3 ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலத்தில் வரி செலுத்துவதைப் புறக்கணித்த ஆட்களால் செலுத்தப்படாத வரித் தொகை செலுத்தப்படுமாயின் 2005 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் எந்தவொரு வரி ஆண்டுக்கும், எந்தவொரு வருமான வரி அளவையும் செலுத்தாமை சார்பாக திரண்ட தண்டப்பணம் செலுத்துவதை நீக்குவதற்கு, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதிக்குத் தத்துவமளித்து, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 173 ஆம் பந்தி திருத்தப்படும். அவ்வாறு இணங்கிக் கொள்ளப்பட்ட திட்டத்தின்படி செலுத்துவதற்கு

முடியாமற் செல்லுமாயின் வரியை மொத்தத் தண்டத்துடன் செலுத்த வேண்டி நேரிடும்.

## X. வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் மூலம் ஆட்களின் வட்டிகளின் பேரில் நிறுத்தி வைக்கும் வரியை அறவிடுதல்

1. வங்கிகள், நிதி நிறுவனங்கள் மூலம் நிறுத்தி வைக்கும் வரியை அறவிட்டுக் கொள்வதற்கான செயன்முறை கடந்த 20 ஆண்டு காலமாக நடைமுறையிலுள்ளது. இந்த வரி நிறுத்தி வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியது, எத்தகைய நிலைமைகளின் கீழ் என்பதையும் குறிப்பாக, ரூபா 300,000 ஆக அமையும் வரி அறவீட்டுக்கு உட்படும் வரையறை தொடர்பாக, அண்மைக்காலம் முதல் வட்டியின் பேரில் நிறுத்திவைக்கும் வரியை அறவிடும் முகவர்கள் மற்றும் வைப்பாளர்களிடையே ஒரு தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. வட்டியின் பேரில் நிறுத்தி வைக்கும் வரியை அறவிடும் முகவர்களும் எளியதொரு செயன்முறையைப் பின்பற்றுவதற்கான தேவையைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பின்வரும் ஏற்பாடுகளுக்காக உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்தப்படும்:

எந்தவொரு வைப்பாளரும் தனது மொத்த வருமானம் பின்வருமாறு இருப்பதாக வெளிப்படுத்துவாராயின்,

i. ரூபா 300,000 ஐ விடக் குறைவாயின் குறைக்கப்படமாட்டாது.

ii. மொத்த வருமானம் ரூபா 300,000 ஐ விட அதிகமாக இருப்பின், அத்துடன் ரூபா 600,000 ஐத் தாண்டாவிடின், ரூபா 300,000 இற்கு மேற்படும் தொகைக்காக 5 வீத நிறுத்தி வைக்கும் வரி வைப்பாளரால் மேற்கொள்ளப்படும் பிரகடனத்தினால் காண்பிக்கப்படும் தொகையின் பேரில் அறவிடப்படும்.

iii. மொத்த வருமானம் ரூபா 600,000 விட அதிகரிப்பின், ரூபா 600,000 ஐ விட அதிகமான தொகைக்கான 10 வீத வரியின் கீழ் நிறுத்தி வைக்கும் வரி அறவிடப்படும்.

3. சகல வங்கிகள், நிதி நிறுவனங்களாலும் ஆண்டு வட்டி வருமானம் ரூபா 600,000 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு வைப்பாளரினதும் பிரகடன மொன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

4. அத்தகைய பிரகடனமொன்றை முன்வைக்க முடியாத எந்தவொரு வைப்பாளரினதும், சகல வைப்புகளினதும் மொத்த வட்டியின் மீது 10 வீத நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்படும்.

5. வைப்பாளர்களின் மொத்த வருமானம் ரூபா 300,000 ஐ விடக் குறைவாக அமையின் அத்துடன், ரூபா 600,000 ஐ விடக் குறையின் அல்லது ரூபா 600,000 ஐ விட அதிகரிக்குமாயின் மாத்திரம் பிரகடனத்தில் உள்ளடக்கப்படும். வேறு எந்தவொரு தகவலும் இந்தப் பிரகடனத்தினூடாகத் தேவைப்படுத்தப்பட மாட்டாது.

## XI. ஓய்வுபெறும் ஊழியர் இறுதி நன்மைகளின் வரி விதிப்பு

ஊழியர் பங்களிப்புத் தொகை வரி அடிப்படையில் நீக்கப்பட்டுள்ள போதிலும் சேமலாப நிதியத்திலிருந்தான மீளச் செலுத்தல்கள் (இறுதி நன்மைகள்) ஓய்வுபெறும் ஊழியர்கள் மீதான வரிக்கு உட்படுத்தும் செயற்பாடு ஈவிரக்கமற்றது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 20 ஆண்டு கால சேவையின் பின்னர் ஓய்வுபெறும் ஆட்கள் தொடர்பில் வரி அறவிடக்கூடிய வருமான எல்லையை அதிகரிப்பதன் மூலம் நிவாரணம் அளிக்கப்படும். 2007 ஏப்பிரல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஒரு மதிப்பீட்டு ஆண்டு தொடர்பில், சேவைக் காலம் அல்லது பங்களிப்புக் காலவரையறை அடிப்படையில் பின்வரும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி 4 இல் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**(அ) 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல்:**

- முதல் ரூ. 5,000,000/- - வரி விடுதலை
- அடுத்த ரூ. 1,000,000/- - 5%
- எஞ்சிய - 10%

**(ஆ) 20 ஆண்டுகளுக்குக் குறைவு:**

- முதல் ரூ. 2,000,000/- - வரி விடுதலை
- அடுத்த ரூ. 1,000,000/- - 5%
- எஞ்சிய - 10%

## XII. ஊழியர் பங்குரிமை அளிப்புத் திட்டம்:

மகிழ்ச்சியுடன் இருக்கும், தனது தொழில் தருநரிடமிருந்து கிடைக்கப்பெறும் கவனிப்பின் மூலம் திருப்தி கொள்ளும் ஊழியர் ஒருவர், தனது தொழில்தருனரின் நிறுவனத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மிகவும் பயனுறுதிவாய்ந்த விதத்தில் செயலாற்றுவதற்கு, விருப்புடன் பங்களிப்பாற்றுவதற்குத் தூண்டப்படுகின்றமை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். அதன் காரணமாக, ஊழியர்கள் மீது பங்கு உரிமை அளிப்பதற்கான திட்டம் ஊக்குவிக்கப்படும். ஊழியர்கள் அத்தகைய திட்டங்களில் பங்குபற்றுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

ஊழியர் ஒருவரால் ஊழியர்கள் மீது பங்கு உரிமை அளிக்கும் திட்டத்திற்குப் பங்களிப்புச் செலுத்துவதற்காக சகல ஊழியர்களுக்கும் ஒன்றுபோல் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும்போது, அந்தத் திட்டத்தில் பங்குபற்றும் எந்தவொரு ஊழியரும், 2007 ஏப்பிரல் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பெறும் நன்மைகளின் பெறுமதியை வருமான வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுவதற்காக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும். அந்தப் பகுதியை நீக்கும் வரி அறிவீடு தொடர்பான உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மாற்றமுறாமல் இருக்கும்.

## XIII. பேருந்துப் போக்குவரத்து

**சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி (வற்)**

பின்வரும் நிவாரணங்களை ஏற்பாடுசெய்து வழங்குவதற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் -

- செல்லுபடியான செல்வழி அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எந்தவொரு பேருந்து உரிமையாளரும் தற்போது பயன்படுத்தும் பேருந்தும் சார்பாக வேறு பேருந்து வண்டிகளை இறக்குமதி செய்வதற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விலக்களித்தல்.
- பயணிகள் அனுமதிச் சீட்டுக்களை வழங்கும் இயந்திரங்களின் உற்பத்திக்காகப் பயன்படும் இயந்திரங்களுக்கு ஏற்புடைத்தாகும் வரி வீதம் 5% குறைப்பு.

மேற்போந்த திருத்தங்கள், 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

## XIV. சுகாதாரம்

**பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்)**

பின்வரும் உயர் - தொழினுட்ப மருத்துவ உபகரணங்களின் மீதான வரி 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு 15 % இலிருந்து 5 % வரை குறைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| **90.18** | | வீஞ்ஞான வரைவுக் கருவி உட்பட மருத்துவ பற்சிகிச்சை அல்லது மிருக வைத்திய துறைகளில் பிரயோகப்படுத்தப் படும் கருவிகளும், உபகரணங்களம் ஏனைய மின் மருத்துவ கருவிகளும் பார்வை சோதனையிடும் உபகரணங்களும். |
| | | மின்னியல் நோயறுதியிடும் கருவிகள் (உடற் கூறுகளின் தன்மையையும் தொழிற்பாட்டுத் தன்மையையும், சோதிக்க உதவும் கருவிகள் உட்பட) : |
| | 9018.11 | மின்னியல் இதயத் துடிப்பு வரை பொறிகள் |
| | 9018.12 | 'அல்ரா சோனிக்' ஆய்வு உபகரணம் |
| | 9018.13 | காந்த கலம்பு நிழல் உபகரணம் |
| | 9018.14 | பொறி வரைபு உபகரணம் |
| | 9018.19 | பிற |

## XV. நிர்மாணக் கைத்தொழில்

### 1. வருமான வரி

**தற்போது:**

(1) இலங்கையில் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு தனிப்பட்ட நபர் அல்லது பங்குடைமை, வதிவிடக் கம்பனியின் இலாபங்களும் 15% சலுகை வருமான வரி வீதத்திற்கு உட்படும்.

(2) இலங்கைக்கு வெளியே அதே தொழிலில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு பங்குடைமை அல்லது கம்பனியினதும் இலாபங்களுக்கும் வருமான வரி விலக்களிக்கப்படும்.

பின்வரும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்தப்படும் -

(1) இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை வெளிநாட்டுப் புழக்கப் பணத்தில் பெற்று, ஒரு வங்கியின் மூலம் அனுப்பப்பட்ட ஆளொருவரின் இலாபங்களை விடுவிப்பதற்காக.

(2) நிர்மாணக் கைத்தொழிலில் கையாளப்படும் இயந்திர உபகரணங்களின் மீதான தேய்மானக் கொடுப்பனவை 12.5% இலிருந்து 25% வரை அதிகரிப்பதற்காக.

(3) நிர்மாண சேவைக் கட்டணங்கள் பேரில் அறவிடப்படும் நிறுத்தி வைத்தல் வரியை 5% இலிருந்து 1% வரை குறைப்பதற்காக.

பின்வரும் திருத்தங்கள் 2007.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

2. நிர்மாணக் கைத்தொழிலுக்காகக் கையாளப்படும் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்பட்ட பின்வரும் இயந்திர உபகரணங்களுக்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான தேவையை நீக்குதல். இது 2007.11.27 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு நீக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கொங்கிரீட் கலவைப் பம்பிகள் | - | HS குறியீடுகளின் கீழ் - 8413.40.02 |
| பாரந் தூக்கிகள் (கிரேன்கள்) | - | HS குறியீடுகளின் கீழ் - 8426.41.02, 8426.49.02, 8426.49.05, 8426.91.02, 8426.99.02, 8426.99.05 |
| போர்க் லிவ்ட் டிரக்ஸ் | - | HS குறியீடுகளின் கீழ் - 8427.20.01, 8427.90.01 |
| சுயமாக இயங்கக்கூடிய புல்டோசர்கள் | - | HS குறியீடுகளின் கீழ் - 8429.11, 8429.19.09, 8429.20.02, 8429.20.09, 8429.30.09, 8429.40.02, 8429.40.09, 8429.51.09, 8429.52.09, 8429.59.09 |
| ஏனைய அசைவுகள், தரப்படுத்தல், மட்டப்படுத்தல் | - | HS குறியீடுகளின் கீழ் - 8430.10.02, 8430.20.02, 8430.31.02, 8430.39.02, 8430.41.02, 8430.49.02, 8430.50.02, 8430.50.05, 8430.61.02, 8430.69.02. |
| வகைப்படுத்தல், திரையிடுவதற்கான இயந்திரங்கள் | - | HS குறியீடுகளின் கீழ் 8474.10.01, 8474.20.01, 8474.20.03, 8474.31.01, 8474.32.01, 8474.32.03, 8474.39.01, 8474.80.01, 8474.80.03, 8474.90.01 |
| கிரேன் லொறிகளும் கொங்கிரீட் கலவை ஆக்கிகளும் | - | HS குறியீடுகளின் கீழ் 8705.10.09, 8705.40.09 |

3. வைக்கோல் மற்றும் அதற்கு நிகரான பொருட்களிலிருந்து அட்டைகளை உற்பத்தி செய்வதற்கு உதவும்பொருட்டு பின்வரும் உருப்படிகளின் மீதான செஸ் வரி 2006.11.17 இலிருந்து நடைமுறைக்குவருமாறு அதிகரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **68.08** | 6808.00 | தாவரத் தும்பினால், வைக்கோலினால், மரச் சீவலினால் அல்லது துணிக்கையும், துண்டுகளினால், மரத்தூள்களால் அல்லது மரக்கழிவுப் பொருட்களினால், சீமெந்துடன் கலக்கப்பட்டு. சாந்துடன் கலக்கப்பட்டு அல்லது வேறு ஒட்டும் கனிப்பொருட்களுடன் கலக்கப்பட்டுள்ள சட்டங்கள், பலகைகள், ஓடுகள், குற்றிகள் இவை போன்றவைகளும்- | **20% அல்லது கி.கி. ஒன்றுக்கு ரூபா 25 ஆகியவற்றில் கூடியது.** |
| | | | |
| **68.09** | | சாந்தினாலான அல்லது சாந்தினை மூலமாகக் கொண்ட கலவைகளினாலான பொருட்கள். | |
| | | | |
| | 6809.11 | காகிதத்தினால் அல்லது காகித அட்டையினால் மாத்திரம் புற அமைக்கப்பாகக் கொண்ட அல்லது வலுவூட்டப் பெற்றவைகள் | 35% |
| | 6809.11.01 | கட்டிடங்களை அழிக்கும் போதிலான உண்டாகும் சாந்து அட்டைகள் அல்லது மதில் அட்டை கனிக்கல் கழிவு | 35% |
| | 6809.11.09 | பிற | 35% |
| | 6809.19 | பிற | 35% |
| | 6809.19.01 | கட்டிடங்களை அழிக்கும் போதிலான உண்டாகும் சாந்து அட்டைகள் அல்லது மதில் அட்டை கனிக்கல் கழிவு | 35% |
| | 6809.19.09 | பிற | 35% |
| | 6809.90 | பிற பொருட்கள் | 35% |

4. (1) நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி நிருவாகத்திற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதிக்கு தத்துவம் அளிக்கப்படுமாறு, 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் திருத்தப்படும்.

(2) 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, நிர்மாணக் கட்டணங்களின் பேரில் நிறுத்தி வைக்கும் வரியுடன் இந்த வரி சேர்க்கப்படும்.

## XVI. மின்சாரம்

### பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்)

1. 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு மின்சாரம் வழங்கலின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தலிலிருந்து விடுவிக்கப்படும். அதன் படி,

   (அ) மின் உற்பத்தி
   (ஆ) மின் விநியோகம்

ஆகியன பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தலிலிருந்து விடுவிக்கப்படும்.

2. இலங்கை மின்சார சபையின் மூலம் இயந்திர உபகரணங்களை இறக்குமதி செய்வதும், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தலிலிருந்து விடுக்கப்படும்.

## XVII. உள்ளூர்த் திரைப்படக் கைத்தொழில்

உள்ளூர் திரைப்படக் கைத்தொழிலுக்கு உதவுமுகமாக பின்வரும் சலுகைகள் அளிக்கப்படும்:

**(அ) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்)**

**(1) விலக்களிப்புகள்:**

- எந்தவொரு திரைப்படத்தையும் 2007.01.01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் தயாரித்தல், விநியோகித்தல், காட்சிப்படுத்தல்.
- 2007.01.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் திரைப்படத் தயாரிப்புக்காக திரைப்படக் கூட வசதிகளை வழங்குதல்.
- இலங்கையில் தயாரிக்கப்பட்டு மேலதிக செப்பனிடல் அல்லது பிரதியாக்குதலுக்காக திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் வெளிநாடொன்றுக்கு எடுத்துச்செல்லப்படும் எந்தவொரு திரைப்படத்தையும் 2007.01.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் இறக்குமதி செய்தல்.

**(2) வரி வீதக் குறைப்பு:**

2007.01.01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் பின்வரும் உருப்படிகளின் இறக்குமதி 5% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி வீதக் குறைப்புக்கு உட்படும்.

| இயைபு முறைக் குறியீடு | விவரணம் | சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி | சுங்கத் தீர்வை (2006.11.17 இலிருந்து நடைமுறைக்கு வரும்) |
|---|---|---|---|
| 3702.52.01, 53.01, | அகலம் 16 மி. மீ. கொண்ட சலன திரைப்படங்கள் | 5% | வரி விலக்கு |

| | | | |
|---|---|---|---|
| 55.01,<br>91.01,<br>93.01,<br>94.01 | | | |
| 3706.10 | அகலம் 35 மி. மீ. கொண்ட அல்லது அதற்குக் கூடுதலான | 5% | வரி விலக்கு |
| 8520.39.01 | இரு புறமும் துளையிட்ட 35 மி. மீ. காந்த சலனத் திரைப்படங்களுக்கான ஒலிப் பதிவுக் கருவிகள் | 5% | வரி விலக்கு |
| 9007.19,<br>20.09, 91,<br>92 | ஏனையவை | 5% | வரி விலக்கு |
| 9010.50.01 | திரைப்பட ஆய்வு கூட உபகரணத் தொகுதிகளும் உபகரணங்களும் | 5% | வரி விலக்கு |
| 9010.60 | திரைப்படத் திரைகள் | 5% | வரி விலக்கு |

**(ஆ). சுங்கத் தீர்வை**

(1) மேலே (அ) 11 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு உருப்படியும், 2006.11.17 ஆந் திகதி அல்லது அதன் பின்னைய இறக்குமதிகளுக்குத் தீர்வை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

(2) திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன், மேலதிக செப்பனிடுகைக்கும் பிரதியாக்கலுக்கும் வெளிநாடொன்றுக்கு எடுத்துச் செல்லப்படும். இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படத்திற்கு 2006.11.17 ஆம் திகதி அல்லது அதன் பின்னைய இறக்குமதித் தீர்வை வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

**(இ) வருமான வரி:**

**(1) வரி மன்னிப்புக் காலம்**

டிஜிடல் தொழினுட்பம், டி.ரி.எஸ். (ரிஜிடல் ஒலியமைப்பு) மற்றும் டொல்பி ஒலியமைப்பு முறை, ஏனைய அதிநவீன தொழினுட்ப வசதிகளுடன்கூடிய, திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் அனுமதிக்கப்பட்ட சினிமா சாலையொன்று தொடர்பில்,

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சினிமா சாலையொன்றுக்காக 10 ஆண்டு கால வரி விடுதலை காலமும் அத்துடன்,

மேற்போந்த வசதிகளுடன்கூடிய, நவீனமயப்படுத்தப்பட்ட தற்போதைய சினிமா சாலையொன்றுக்காக 5 ஆண்டு கால வரி விடுதலை காலமும் அளிக்கப்படும்.

வரி மன்னிப்பு காலம், செயற்பாடுகள் ஆரம்பிக்கும் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும்.

**(2) வருமானத்திலிருந்து குறைப்புகள்**

திரைப்படத் தயாரிப்புக்கான செலவுகள் தொடர்பில் தகைமைபெறும் கொடுப்பனவொன்றாக வருமானத்திலிருந்தான குறைப்பு, தற்போதுள்ள ரூ.10 மில்லியனிலிருந்து ரூ. 25 மில்லியன் வரை அதிகரிக்கப்படும்.

2007.04.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் பூர்த்தி செய்யப்பட்ட தயாரிப்புகளுக்கு இந்தக் குறைப்பு ஏற்புடைத்தாகும்.

**(இ) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி வரி**

திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன், மேலதிக செப்பனிடல் மற்றும் பிரதியாக்குவதற்காக வெளிநாடொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படத்தின், 2007.01.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னைய இறக்குமதிக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

## XVIII. க்ருஷி நவோதய திட்டம்

**நோக்கம்:** விவசாய உள்ளீடுகளை தாங்கக்கூடிய ஒரு செலவிற்குள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் சிறு விவசாயிகளை வலுவூட்டல்.

**பயன் பெறுவோர்:** ஒரு வருடத்திற்கு ஏறத்தாழ 50,000 விவசாயக் குடும்பங்கள்.

**கடன் பிரேரணைத் திட்டம்:** பங்கு பற்றும் நிதி நிறுவனங்கள் 14 ன் மூலம் சிறு விவசாயிகளுக்கு ரூபா 10,000 இலிருந்து ரூபா 100,000 வரையிலான கடன் நிதியை பெற்றுக் கொடுப்பதற்காக வருடாந்தம் ரூபா 3,000 மில்லியன் பகிர்ந்தளிக்கப்படும்.

பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி இயலளவை விருத்தி செய்யும் நோக்குடன் ரூபா 100 மில்லியன் மானியமாக வழங்கப்படும். இதனூடாக இந்நிறுவனத்துக்கு அதிகூடிய விளைச்சலைப் பெறக்கூடிய விதை நெல்களை விருத்தி செய்வதற்கும், இந்நிறுவனத்தின் கண்காணிப்பின் கீழ் இவ்விதை நெல்களை வளர்ப்பதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கவும் முடிகின்றது.

**தகுதி பெற்ற துறைகள்:** நெல், வெங்காயம், கிழங்கு, மிளகாய், சோளம், குரக்கன், தட்டைப் பயறு, பயறு, உளுந்து, சோயா அவரை, எள் போன்ற ஏனைய உணவுப் பயிர்கள், கறுவா, மிளகு, ஏலம், போன்ற ஏற்றுமதி விவசாயப் பயிர்கள், கரும்பு, பழங்கள், மரக்கறிகள், மலர்ச் செடிகள், மரமுந்திரிகை, கால் நடை, மீன் பிடி, சேதன உரங்களைப் பயன் படுத்தி உற்பத்தி செய்யும் விவசாயம், விதைகள் மற்றும் கன்றுகள் போன்ற விவசாய உள்ளீடுகள், சேதன விவசாயம், பயிர்ச் செய்கைக்கு அவசியமான மூலப்பொருட்கள், சேதன உரங்களின் அபிவிருத்தி, பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழினுட்பம் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள், பழங்கள் மற்றும் உணவு பதனிடல், அரிசி மா அரைத்தல்.

**தகுதி பெற்ற நபர்கள்:** விவசாயிகள், சிறு ஏற்றுமதிப் பயிர்களை உற்பத்தி செய்வோர், சேனைப் பயிர் செய்வோர், கரும்பு உற்பத்தி செய்யும் வவசாயிகள், மரக்கறி, மற்றும் பழங்களைப் பயிரிடுவோர், மரமுந்தரிகை பயிரிடுவோர், மலர்ச் செடிகளைப் பயிரிடுவோர், கால் நடைகளை உற்பத்தி செய்வோர், மீனவர்கள், சேதன விவசாயப் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வோர், விதைகள், கன்றுகள் மற்றும் சேதன உரங்களை உற்பத்தி செய்வோர், பழங்கள் மற்றும் உணவு பதனிடுவோர், அரிசி மா அரைப்போர்.

**பொதிகள்:** கடன், நீடிக்கப்பட்ட சேவைகள், ஒன்றிணைக்கப்பட்ட பீடைகள் முகாமைத்துவம், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவற்றின் மீதான தீர்வை.'. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிவாரணம் போன்றவற்றிகான (உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படாத ஏனையவைகள்), தொழில் நுட்ப அறிவு, பண்ணைக்கு உள்ளேயும், பண்ணைக்கு வெளியேயும் அறுவடைக்குப் பின்னர் கையாளுகின்ற முறைகள், பதனிடல், ஆய்வும், அபிவிருத்தியும், விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தல்.

**பங்கு பற்றும் நிதி நிறுவனங்கள்:** இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நெ'னல் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி, றுஹுணு அபிவிருத்தி வங்கி, ரஜரட்டை அபிவிருத்தி வங்கி வயம்ப அபிவிருத்தி வங்கி, ஊவா அபிவிருத்தி வங்கி, சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி, கந்துரட்டை அபிவிருத்தி வங்கி, மற்றும் அவற்றினது கிளை அலுவலகங்கள்.

**அமுல்படுத்தும் நிறுவனங்கள்:** நிதித் திட்டமிடல் அமைச்சுக்காகவும், அதற்குப் பதிலாகவும் லங்கா புத்ர வங்கி இவ்வேலைத்திட்டத்தை ஒன்றிணைப்புச் செய்வதோடு மதிப்பீடும் செய்யும்.

**பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய செலவுகள்:** வருடாந்தம் 9% அரசாங்கத்தின்ால் பங்களிப்புச் செய்யப்படும். வருடாந்தம் 8% வாடிக்கையாளரின் பங்களிப்புச் செய்யப்படும்.

**அனுசரணையாளர்:** அபிவிருத்தி நிதித் திணைக்களம்

# XIX. பெருந்தோட்ட விவசாயம்

**தேயிலை, இறப்பர், தெங்கு**

**1. பொருளாதார சேவை கட்டணம் (ESC)**

2007.04.01 ஆம் திகதியிலிருந்து செயற்படுமாறு பின்வரும் தொழில்முயற்சிகள் தொடர்பிலான வீதங்கள் (வேளைக்கேற்ப) 0.5% அல்லது 1% வீதத்திலிருந்து 0.25% வரை குறைக்கப்படும்.

தேயிலை, உலர்த்திய தேங்காய், தேங்காய் எண்ணெய், தென்னந் தும்பு, கொப்பரை, சீட் இறப்பர், தென்னஞ் சிரட்டைக் கரி ஆகியவற்றின் தயாரிப்பு அல்லது உற்பத்தி செய்தல்.

**2. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி**

அடுப்பு எண்ணெய், (2710.19.06 இயைபுமுறைக் குறியீட்டின் கீழான எரிபொருள் எண்ணெய்) இறக்குமதிக்கும் விநியோகத்திற்கும் மின் வழங்கலுக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தலிலிருந்து 2007.01.01 ஆம் திகதியிலிருந்து விடுவிப்பதற்காக பெறுமதி சேர் வரிச் சட்டம் திருத்தப்படும்.

**3. சுங்கத் தீர்வை வரியும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும்**

தொழிற்சாலைகளின் நவீனமயப்படுத்துகைக்காக இறக்குமதி செய்யப்படும் பின்வரும் இயந்திர உபகரணங்களுக்காக 2006.11.17 ஆம் திகதியிலிருந்து சுங்கத் தீர்வை வரி செலுத்துவதிலிருந்தும், 2007.01.01 ஆம் திகதியிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

(1)

| | | | |
|---|---|---|---|
| **84.22** | 8422.30.02 | | 4 கிராமுக்கு உட்பட்ட எடையுள்ள தேயிலையை நிரப்புவதற்காக வடிகட்டும் கடதாசி மூலம் தயாரிக்கப்படும் தேயிலைப்பையை உற்பத்தி செய்வதற்கான தேயிலைப் பையடைக்கும் இயந்திரம் |
| **84.38** | | | இவ்வதிகாரத்தின் கீழ் வேறெங்கும் குறித்துரைக்கப்படாத அல்லது சேர்த்துக் கொள்ளப்படாதவையும் விலங்கின் அல்லது குறிப்பான தாவரக் கொழுப்பு அல்லது எண்ணை தயாரிப்பதற்கான அல்லது பிழிந்தெடுத்தற்கான இயந்திரங்கள் தவிர்ந்தவையும் கைத்தொழில் தயாரிப்புகளுக்காக அல்லது பருகுவன, உண்பனவான உற்பத்திகளுக்கானவற்றில் உபயோகிக்கப்படும் இயந்திரங்கள். |

| | | | |
|---|---|---|---|
| | 8438.80 | - | ஏனைய இயந்திரங்கள் ; |
| | 8438.80.01 | ---- | இ 55 மற்றும் எல். ரீ. பி தேயிலை இயந்திரங்கள் |
| | 8438.80.02 | ---- | தேயிலை கைத்தொழிலுக்கான நிறம்மாற்றுபவைகள் |
| | 8438.80.03 | ---- | ஏனைய தேயிலை தயாரிப்பு இயந்திரங்கள் |

(11) இயைபுமுறைக் குறியீட்டு இலக்கம் 8438.60.01 இன் கீழ் இறக்குமதி செய்யப்படும்- தென்னஞ் சிரட்டை அகற்றுவதற்கான இயந்திரங்கள் மீதான தீர்வை வரி விலக்களிக்கப்படும்.

(111) பின்வரும் இயைபு முறைக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் கைத்தொழில் கொதியுலைகள் மீதான தீர்வை வரி விலக்களிக்கப்படும்.

| இ.மு. முறை குறியீட்டு தலைப்புகள் | இ. மு. முறை குறியீட்டு இல. | விவரணம் |
|---|---|---|
| **84.02** | | நீராவி அல்லது ஆவி பிறப்பாக்கும் கொதியுலைகள் : |
| | 8402.11 | மணிக்கு 45 லீற்றருக்கு மேற்பட்ட நீராவியை உற்பத்தி செய்யக்கூடிய நீர்க்குழாய்க் கொதியுலைகள் |
| | 8402.12 | மணிக்கு 45 லீற்றருக்கு மேற்படாத நீராவியை உற்பத்தி செய்யக்கூடிய நீர்க்குழாய்க் கொதியுலைகள் |
| | 8402.19 | உயர் வெப்பக் கொதியுலைகள் அடங்கலாக ஆவி பிறப்பாக்கும் பிற கொதியுலைகள் |
| | 8402.20 | மிகை வெப்பமாக்கி நீர்க் கொதியுலைகள் |
| | 8402.90 | பாகங்கள் |

(iv) பழங்களும் மரக்கறிகளும்

இயைபு முறைக் குறியீட்டு இல: 8422.30.03 - தகரப் பேணிகளில் அடைக்கப்பட்ட பழங்கள், மரக்கறிகள். 8438.60.09 - ஏனையவை.

## XX. இறால் வளர்ப்பு/ கோழி வளர்ப்பும் கால்நடை வளர்ப்பும்

### (அ) இறால் வளர்ப்பு

(1) 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு இறால் வழங்கலுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(2) 2006.11.17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு 20% வீதம் அல்லது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.50 ஆகிய இரண்டில் கூடுதல் பெறுமதியுடைய பெறுமானத்தின் மீது கூனி இறால்கள், இறால்களுக்கான செஸ் வரி விதிக்கப்படும்.

| இயைபு முறைக் குறியீடு | விவரணம் |
|---|---|
| 0306.13 | கூனி இறால்களும் இறால்களும் |
| 0306.23.01 | உலர்த்திய இறால்கள் |
| 0306.23.02 | புதிய அல்லது குளிரூட்டிய |
| 0306.23.09 | ஏனைய |

(3) இறால் வளர்ப்புக்காகப் பயன்படுத்தப்படும் பின்வரும் உபகரணங்களின் இறக்குமதி, 2006.11.17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு தீர்வை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

| இயைபு முறைக் குறியீடு | விவரணம் |
|---|---|
| 8479.82.02- | இறால் வளர்ப்புக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் திரவங்களில் காற்றுச் சேர்க்கும் கருவிகள் (Aerators) |
| 8424.89.01 | இறால் வளர்ப்புக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் திரவங்களில் காற்றுச் சேர்க்கும் விசேட கருவிகள். (Jet Aerators) |

**(ஆ). கோழி வளர்ப்பு:**

1. 2006.11.17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பின்வரும் உருப்படிகளுக்காக, தீர்வை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்:

**(இ). கால்நடை வளர்ப்பு:**

கால்நடை வளர்ப்பு, பின்வரும் இறக்குமதிகளுக்கு (2006.11.17 ஆம் திகதியிலிருந்து) இறக்குமதி வரிகளிலிருந்தும், (2007.01.01 ஆம் திகதியிலிருந்து) பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

மாடு, எருது, கோழி, பன்றி, ஆடு, செம்மறி ஆடு மற்றும் அவற்றின் தாது அணுக்களும் கருக்களும்.

**வளர்ப்புக்கான விலங்குகளும் பொருட்களும்:**

| இயைபு முறைக் குறியீடு | விவரணம் |
|---|---|
| 0102.10 | தூய கலப்பின இனப்பெருக்கத்திற்கான மிருகங்கள் (மாடுகளும் எருதுகளும்) |
| 0103.10 | தூய கலப்பின இனப்பெருக்கத்திற்கான மிருகங்கள் (பன்றிகள்) |
| 0104.10.01 | தூய கலப்பின இனப்பெருக்கத்திற்கான மிருகங்கள் (செம்மறியாடுகள்) |
| 0104.20.01 | தூய கலப்பின இனப்பெருக்கத்திற்கான மிருகங்கள் (ஆடுகள்) |
| 0105.11.01 | வளர்ப்பதற்கான ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் |
| 0105.19.01 | வளர்ப்பதற்கான (ஏனையவை) |
| 0105.12.01 | வளர்ப்பதற்கான (வான் கோழி) |
| 0511.10 | எருதின மிருகங்களின் விந்து. |
| 0511.99.22 | பன்றி விந்து. |
| 0511.99.03 | ஆடுகளின் விந்து. |
| 0511.99.44 | கருக்கள். |

**(ஈ) பதப்படுத்திய மற்றும் பதப்படுத்தப்படாத இறைச்சி உற்பத்திகள்**

02.01, 02.02, 02.03, 02.04, 02.05, 02.06, 02.07, 02.08, 02.09, 02.10 ஆகிய தலைப்புகளின் கீழ் உள்ள சகல இயைபுமுறைக் குறியீடுகளின் கீழ் வரும் உருப்படிகளுக்கும் 20 % வரி அல்லது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 100 ஆகிய இரண்டில் அதிக பெறுமதியின் கீழ் 2007.11.17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு செஸ் வரியொன்று விதிக்கப்படும்.

## XXI. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கான கடன் பிரேரணைத் திட்டம்

**நோக்கம்:** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கான கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**பயன் பெறுவோா்:** வருடாந்தம் 100,000 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சியாளர்கள்.

**கடன் பிரேரணைத் திட்டம்:** சலுகை அடிப்படையிலான வட்டி விகிதமொன்றின் கீழ் ரூபா 13,295 மில்லியன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சித் துறைகளுக்காக ஒதுக்கப்படும். இவ்வட்டி விகிதங்கள் 6.5-14 வீதத்துக்கிடையிலான வீச்சில் இருப்பதோடு கருத்திட்டம் தொடர்பான துறையினைப் பொருத்து வட்டி விகிதம் தீர்மானிக்கப்படும்.

**தகுதி பெற்ற துறைகள்:** சுற்றாடல் பாதுகாப்பு, விவசாயம், கால் நடை, மீன்பிடி, நீர் வாழ் பயிர்கள், சமூக முதலீடு, புதுப்பிக்கக் கூடிய சக்தி, வாழ்வாதார அபிவிருத்தி, தோல் மற்றும் பாதணிகள், தென்னந்தும்பு, பொதியிடல், நிர்மாணம், சுரங்கத் தொழில், நெசவுக் கைத்தொழில், உலோக உற்பத்திப் பொருட்கள், அச்சிடல், மரப்பலகையும், மரப்பலகை உற்பத்திப் பொருட்களும், அலங்கார மீன்கள், வர்த்தகம், களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல், மற்றும் சேவைகள்.

**தகுதி பெற்ற நபர்கள்:** விவசாயிகள், கால் நடை உற்பத்தியாளர்கள், மீனவர்கள், இறால் உற்பத்தியாளர்கள், புதுப்பிக்கக் கூடிய சக்தி உற்பத்தியாளர்கள், தோல் மற்றும் பாதணிகளைத் தயாரிப்போர், தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் மரப்பலகையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள், பொதியிடும் பொருட்கள், நெசவு மற்றும் உலோக உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்போர், அச்சிடுவோர், அலங்கார மீன்களை வளர்ப்போர், வியாபாரிகள், வர்த்தகம், மற்றும் சேவைகளை வழங்குவோர்.

**தகுதி பெறுவதற்கான பரிமாணம்:**

- சொத்தின் பெறுமதி (காணி மற்றும் கட்டடங்கள் தவிர) ரூபா 50 மில்லியன்களை விட அதிகரிக்கக் கூடாது.
- ஊழியர்களின் எண்ணிக்கை 149ஐ விட அதிகரிக்கக் கூடாது.
- எஸ்எம்ஈ வங்கியிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்ட எவரும் இத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெற தகுதியுடையவர்கள் அல்ல.

**பொதிகள்:**

| | |
|---|---|
| • சுற்றாடல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவதற்கான கடன் வசதிகள் | ரூபா 1000 மில்லியன் |
| • விவசாயம், மீன் பிடி, கால் நடை, வர்த்தகம் போன்ற துறைகளின் வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளுக்கான கடன் வசதிகள் | ரூபா 100 மில்லியன் |
| • விவசாயம் தொடர்பான நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளை ஆரம்பித்தல் மற்றும் இம்முயற்சிகளை விரிவாக்குவதற்கான கடன் வசதிகள் | ரூபா 2,700 மில்லியன் |
| • சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கான நுண் கடன் வசதிகள் | ரூபா 300 । |
| • சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான உள் நாட்டு மீன்பிடி, மற்றும் நீர் வாழ் பயிர்களின் வியாபார முயற்சிகள் | ரூபா 50 மில்லியன் |
| • சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான புதுப்பிக்கக் கூடிய நீர்மின் வலுக்கருத்திட்டங்கள்: சிறிய நீர்மின்வலு உற்பத்தி நிலையங்கள், சூரிய சக்தி, விரகு போன்றவற்றுக்கான கடன் வசதிகள் | ரூபா 1,890 மில்லியன் |
| • பெண்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான கடன் | ரூபா 80 மில்லியன் |

வசதிகள்

| | |
|---|---|
| • உபகரணங்கள், மற்றும் இயந்திரத் தொகுதிகளின் கொள்வனவுக்கான கடன் வசதிகள் | ரூபா 850 மில்லியன் |
| • நுண் வியாபார முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | ரூபா 100 மில்லியன் |
| • வடகிழக்கு மாகாணங்களின் சிறிய மற்றும் நுண் வியாபார முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | ரூபா 325 மில்லியன் |
| • சுனாமியினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வியாபார முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | ரூபா 3,900 மில |
| • சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | ரூபா 1,600 மி |
| • நிர்மாணக் கைத்தொழில் முயற்சிகளுக்கான உபகரணங்கள், மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடன் வசதிகள் | ரூபா 400 மில் |

**பங்கு பற்றும் நிதி நிறுவனங்கள்:** இலங்கை வங்கி, டீ.எப்.சீ.சீ. வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, ஹட்டன் நெசனல் வங்கி, வர்த்தக வங்கி, சம்பத் வங்கி செலான் வங்கி, றுஹுணு அபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, வயம்ப அபிவிருத்தி வங்கி சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி, ஊவா அபிவிருத்தி வங்கி, கந்துரட்டை அபிவிருத்தி வங்கி, தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம், சேவா லங்கா மற்றும் மகளிர் அபிவிருத்தி நிதியம்.

**அமுல்படுத்தும் நிறுவனங்கள்::** நிதித் திட்டமிடல் அமைச்சுக்குக்காகவும், அதற்குப் பதிலாகவும் லங்கா புத்ர வங்கி இவ்வேலைத்திட்டத்தை ஒன்றிணைப்புச் செய்வதோடு மதிப்பீடும் செய்யும்.

**அனுசரணையாளர்:** அபிவிருத்தி நிதித் திணைக்களம்

## XXII. வர்த்தகத்திற்காக துறைமுகங்களில் களஞ்சியப்படுத்திவைக்கும் வர்த்தகம்

(அ). வர்த்தகத்திற்காக துறைமுகங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கும் வர்த்தகத்தில் கடல்கடந்த நடவடிக்கைகளிலிருந்து பெறப்படும் இலாபங்க ளுக்கு பல்லாண்டு காலமாக வருமான வரி செலுத்தலிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகள், 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பொருளாதார சேவைக் கட்டணத்திலிருந்தும் விலக்களிக்கப்படும்.

(ஆ). உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 42 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்படும் நிலைமைகளின் கீழ் எந்தவொரு உருப்படியையும் ஏற்றுமதிசெய்வதன் மூலம்

எந்தவொரு பண்டம் அனுப்புநர் அல்லது பண்டம் பெறுநர் பெறும் இலாபங்களுக்காக 2007 ஏப்பிரல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் எந்தவொரு வரி ஆண்டுக்கும், 10 சதவீதத்தை ஏற்புடைத்தாக்குவது, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 42 ஆம் உறுப்புரை 2007.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு திருத்தப்படும்.

(இ). 2007.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு உண்ணாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான பொருளாதார சேவைக் கட்டணம் 0.1% வரை குறைக்கப்படும்.

## XXIII. தங்கம்/ இரத்தினக்கல்/ வைரம்/ ஆபரணக் கைத்தொழில்

தங்கம்/இரத்தினக்கல்/வைரம்/ஆபரணக் கைத்தொழிலின் வரி விதிப்பு பின்வருமாறு மீளமைக்கப்படும்:

**1. ஆபரணங்கள்:**

(அ). 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு ஆபரணங்களின் வழங்கலின் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி வீதம் 20% இலிருந்து 5% வரை குறைக்கப்படும்.

(ஆ). 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் உள்ளூர் ஆபரண உற்பத்திக்கான பொறியமைப்பு, இயந்திரங்கள் அல்லது உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும்போது செலுத்தப்பட்ட வற் வரி அளவுக்கான வரி.

(இ). உற்பத்தி செய்யப்பட்ட ஆபரணங்கள் ஏற்றுமதி செய்யப்படுமாயின், அந்த ஆபரணங்களின் உற்பத்திக்காகக் கையாளப்பட்ட மூலப்பொருள் இறக்குமதியின் பேரில் 2007 சனவரி 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் செலுத்தப்படும் வற் வரியின் அளவுக்காக வரிப் பற்று வழங்கப்படும்.

(ஈ). ஆபணர உற்பத்தியின் மீதான பொருளாதார சேவைக் கட்டண வீதம் 1 % வீதமாக மாறாமல் பேணப்படுவதுடன், ஆபரண ஏற்றுமதியின் பேரிலான பொருளாதார சேவைக் கட்டணம், பெறுமதி சேர்ப்பின் 1% ஆகும். (இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது)

(உ). ஆபரண உற்பத்தியாளர்கள், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையில் பதிவுசெய்திருப்பது அவசியமாகும். இதற்காக, ரூ. 5000 வருடாந்த பதிவுக்

கட்டணமொன்று அறவிடப்படும். தற்போதைய ஆபரண உற்பத்தியாளர்கள் 2006.12.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்திருத்தல் வேண்டும். ஆபரணங்கள் என்பதில் நகல் ஆபரணங்களும் உள்ளடங்கும்.

(ஊ). பின்வரும் உருப்படிகள் 2006.11.17 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் இறக்குமதிகளின் பேரில் 15% செஸ் வரியொன்று விதிக்கப்படும். யாதேனும் உருப்படியொன்று மீள் ஏற்றுமதி செய்யப்படுமாயின், அந்த உருப்படியை இறக்குமதி செய்யும்போது செஸ் வரி மீள அறவிடப்படுகின்றது.

| | |
|---|---|
| | ஆபரணப் பொருட்களும் அவைக்கான பகுதிகளும் விலையுயர்ந்த உலோகங்களினது அல்லது விலையுயர்ந்த உலோகங்களுடன் பொதிவு இடப்பட்ட உலோகங்களின் |
| | |
| | விலையுயர்ந்த உலோகத்துடன் பொதிவு இடப்பட்ட அல்லது இடப்படாத விலையுயர்ந்த உலோகங்களினால் பூச்சிடப்பட்ட பூச்சிடப்படாத உலோகங்களின் : |
| 7113.11 | வேறு விலையுயர்ந்த உலோகங்களுடன் பொதிவு இடம் பெற்ற அல்லது இடப்பெறாத பூச்சிடப்படாத வெள்ளியின் |
| 7113.11.01 | உருப்படிகள் |
| 7113.11.09 | பாகங்கள் |
| 7113.19 | வெள்ளியிலான வேறு விலை உயர்ந்த உலோகத்தால் முலாம் பூசப்பட்ட அல்லது மேற்பூச்சயிடப்பட்ட |
| 7113.19.01 | உருப்படிகள் |
| 7113.19.09 | பாகங்கள் |
| 7113.20 | வெள்ளியிலான வேறு விலையுயர்ந்த உலோகத்தால் முலாம் பூசப்பட்ட அல்லது மேற்பூசிடப்பட்ட |
| 7113.20.01 | உருப்படிகள் |
| 7113.20.09 | பாகங்கள் |
| | |
| | பொற்கொல்லர்கள் அல்லது வெள்ளி வேலையாளர்களின் ஆக்க பொருட்களும் அவைக்கான பகுதிகளும் விலையுயர்ந்த உலோகத்துடன் பொதிவு இடப் பெற்ற விலையுயர்ந்த உலோகங்களின் |
| | |
| | விலையுயர்ந்த உலோகத்துடன் பொதிவு இடப் பெற்ற அல்லது இடப்படாத பூச்சிடப்படாத விலை உயர்ந்த உலோகங்களின் ; |
| 7114.11 | வேறு விலையுயர்ந்த உலோகத்துடன் பொதிவு இடம் பெற்ற அல்லது இடப்பெறாத, பூச்சிடப்பட்ட அல்லது பூச்சிடப்படாத வெள்ளியின் |
| 7114.19 | விலையுயர்ந்த உலோகத்துடன் பொதிவு இடம்பெற்ற அல்லது இடம்பெறாத, பூச்சிடப்பட்ட அல்லது பூச்சிடப்படாத இன்று விலையுயர்ந்த உலோகங்களின் |
| 7114.20 | விலையுயர்ந்த உலோகத்துடன் பொதிவு இடப்பட்ட மூல உலோகங்களின் |
| | |
| | விலையுயர்ந்த உலோகங்களினாலான அல்லது விலையுயர்ந்த உலோகங்களுடன் பொதிவு செய்யப்பட்ட உலோகங்களினாலான பிற பொருட்கள். |
| | |
| 7115.10 | பிளாற்றினத்தினாலான கம்பித்துணி அல்லது கிறில் அமைப்புகளைக் கொண்ட படிவங்கள் |
| 7115.90 | பிற |
| | |
| | இயற்கை அல்லது பண்படுத்திய செயற்கை முத்துக்களினாலான விலையுயர்ந்த அல்லது விலை மருவிய கற்கள் அல்லது விலைமருவிய கற்களினாலான பொருட்கள் (இயற்கை, செயற்கை அல்லது மீள அமைக்கப்பெற்றவை) |
| | |
| 7116.10 | இயற்கை அல்லது பண்படுத்திய (செயற்கை) முத்துக்களின் |
| 7116.20 | விலையுயர்ந்த அல்லது விலைமருவிய கற்களின் (இயற்கை, செயற்கை அல்லது மீள அமைக்கப்பெற்றவை) |
| | |
| | போலி ஆபரணங்கள். |
| | |
| | விலையுயர்ந்த உலோகங்களினால் பூசப்பெற்ற அல்லது பூசப்படாத உலோகங்களின் : |
| 7117.11 | சட்டைகளின் கைக்கொழுவிகளும் பொத்தான்களும் |
| 7117.19 | பிற |
| 7117.90 | பிற |

2. இரத்தினக்கல்/ வைரம்/ தங்கம்

(எ). 2007.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு,

பின்வரும் குறியீட்டு இலக்கங்களின் கீழ்வரும் இரத்தினக்கல், வைரம், அல்லது தங்கத்தின் மீது அறவிடப்படும் துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி வரி நீக்கப்படும்.

| | |
|---|---|
| 7101 | வேலைப்பாடமைந்த அல்லது வேலைப்பாடற்ற தரமாக்கப்படாத இயற்கை முத்துகள் அல்லது செப்பனிடப்பட்ட முத்துக்கள் ஆனால் ஒட்டப்படாதன அல்லது அடுக்கப்படாதன அல்லது கோவைப்படுத்தப்படாதன முத்துக்கள் இயற்கை அல்லது செப்பனிடப்பட்டவை கொண்டு செல்வதற்கு இலேசானதாகத் தற்காலியமாகக் கோவைப்படுத்தப்பட்டவை. |
| | |
| 7102 | வேலைப்பாடமைந்த அல்லது வேலைப்பாடற்ற வைரங்கள் ஆனால் ஒட்டப்படாதனவும் அடுக்கப்படாதனவும் |
| | |
| 7103 | விலைமதிப்பார்ந்த கற்கள் (வைடூரியங்கள் தவிர்ந்தன) விலை மருவிய கற்கள் வேலைப்பாடமைந்த அல்லது வேலைப்பாடற்ற அல்லது தரம் பிரிக்காத ஆனால் கோவைப்படுத்தப்படாத ஒட்டப்படாதன அல்லது அடுக்கப்படாதன ; தரம் பிரிக்கப்படாத விலைமதிப்பார்ந்த கற்கள் வைடூரியங்கள் தவிர்ந்தன விலைமருவிய கற்களும் கொண்டு செல்வதற்கு இலேசானதாகத் தற்காலிகமாகக் கோவைப்படுத்தப்பட்டவை. |
| | |
| 7104 | செயற்கை அல்லது மீள நிர்மாணிக்கப்பட்ட விலை மதிப்பார்ந்த அல்லது விலை மதிப்புமருவிய கற்கள், வேலைப்பாடமையாதன வேலைப்பட்டான அல்லது தரம் பிரிக்கப்பட்ட, பிரிக்கப்படாதவை ஆனால் கோவைப்படுத்தப்படாத ஒட்டப்படாதன அல்லது அடுக்கப்படாதன, தரம் பிரிக்கப்படாத செயற்கை அல்லது மீள நிர்மாணிக்கப்பட்ட விலைமதிப்பார்ந்த அல்லது விலை மதிப்பு மருகிய கற்களும் கொண்டு செல்வதற்கு இலேசானதாக தற்காலிகமாகக் கோவைப்படுத்தப்பட்டவை. |
| | |
| 7105 | இயற்கை அல்லது செயற்கை விலைமதிப்பார்ந்த அல்லது விலைமதிப்பு மருவிய கறிகளின் துகள் அல்லது பொடி. |
| | |
| 7106 | வெள்ளி, வெள்ளி முலாம் பூசியவை தங்கம் அல்லது பிளாட்டினம் பூசப்பட்ட வெள்ளியும் வேலை செய்யப்படாத அல்லது குறை உற்பத்தியாக்கப்பட்ட நிலையில் அல்லது பொடி நிலையில் |
| | |
| 7107 | வெள்ளியுடன் உருட்டப்பட்ட மூல உலோகங்கள் குறை உற்பத்தியாக்கப்பட்ட நிலையன்றி மேலதிகமாக வேலைப்பாடற்றவை. |
| | |
| 7108 | தங்கம் (பிளாட்டின முலாம் பூசப்பட்ட தங்கம் உட்பட) வேலைப்பாடற்றவை அல்லது குறையுற்பத்தியாக்கப்பட்ட நிலையிலுள்ளவை அல்லது பொடி நிலையிலுள்ளவை. |
| | நாணயம் சாராத : |
| | |
| 7109 | தங்கத்துடன் சேர்த்து உருட்டிய மூல உலோகங்கள் அல்லது வெள்ளி குறையுற்பத்தியாக்கப்பட்ட நிலையன்றி வேலைப்பாடற்றவை. |
| | |
| 7110 | குறையுற்பத்தியாக்கப்பட்டவை அல்லது மேல் வேலைப்பாடற்றவை அல்லது பொடி நிலையிலுள்ளவையான பிளாட்டினம். |
| | |
| 7111 | வெள்ளி அல்லது தங்கம் ஆகியனவற்றில் பிளாட்டினம் பொதிவு இடப்பட்ட மேலதிக வேலை செய்யப்படாத அல்லது குறையுற்பத்தியாக்கப்பட்ட மூல உலோகங்கள்- |
| | |

(ஏ) இரத்தினக்கல், வைரம், தங்கம் ஏற்றுமதிக்கான பொருளாதார சேவைகள் கட்டணம், 2007.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பெறுமதி சேக்கப்பட்ட வரியின்

1% ஆக அமையும். (இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்படும்.)

## XXIV. ஆடை மற்றும் புடவைக் கைத்தொழில்

ஆடைப் பங்கு முறையினால் வழங்கப்பட்டிருந்த நிவாரணத்தை நீக்குவதன் மூலம் ஏற்படும் போட்டித் தன்மைக்கு முகங்கொடுப்பதற்காக ஆடைக் கைத்தொழிலுக்கு உதவுவதற்கும், இந்தக் கைத்தொழிலின் உள்ளூர்ப் பெறுமதிசேர்ப்பு ஊக்குவிப்புக்கும் பின்வரும் நிவாரணங்கள் வழங்கப்படும்.

1. **பொருளாதார சேவை கட்டணம்**

(அ). பொருளாதார சேவைகள் கட்டணம் அறவிடப்படும் செலவு, ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் கப்பலேற்ற முன்னைய பெறுமதியாகக் கணிக்கப்படின், பின்வரும் உருப்படிகளின் மீது அறவிடப்படும் பொருளாதார சேவைக் கட்டண வீதத்தை 0.1% வரை குறைக்கக்கூடியவாறு பொருளாதார சேவைகள் கட்டணம் திருத்தப்படும்.

- ஆடை ஏற்றுமதியாளர்கள்
- ஆடை ஏற்றுமதியாளர்களுக்காக உற்பத்தியாளர்களால் புடவை வழங்கப்படல்.
- ஆடை ஏற்றுமதி செய்யும் முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட ஏற்றுமதி வர்த்தக நிலையங்கள்.

(ஆ). புரள்வு கப்பலேற்றுவதற்கு முன்னரான பெறுமதியல்லாதபோது குறித்த பொருளாதார சேவைக் கட்டண வீதம் 1 வீதமாக அமைவதுடன், வரி செலுத்தலுக்கு உட்படும் வரையறை ஏற்புடைத்தாகாது. அதன்படி, தொடர்புபட்ட ஏற்பாடுகள் பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும். இந்த மாற்றங்கள் 2007 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

2. உள்ளூர் சந்தைக்கான ஆடைகளின் வழங்கல் ஊக்குவிக்கப்படும். செஸ் வரியும் உள்ளிட்ட ஒரு துண்டு ஆடைக் கைத்தொழிலுக்காக ரூபா 25 கொண்ட திரண்ட வரியொன்று விதிக்கப்படும்.

3. 2007 சனவரி 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பின்வரும் உருப்படிகளின் இறக்குமதிகளுக்காக துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி வரி 2 வீதம் வரை குறைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| **84.44** | 8444.00 | மனிதனால் செய்யப்பட்ட ஆடைவகைப் பொருட்களை வெளிப் பீற்றும், இழுக்கும் பதனிடும், வெட்டும் (தொழிற்பாடுகளுக்கான) இயந்திரங்கள் |
| | | |
| **84.45** | | புடவைப் பொருட்களுக்கான நாரினைப் பதப்படுத்துவதற்கான இயந்திரங்கள், புடவைகளுக்கான நூலிழைகளைத் தயாரிப்பதற்கான ஏனைய இயந்திரங்களும், நூற்கும் முறுக்கும், இரணைப்படுத்தும் இயந்திரங்கள், புடவை நூல்களை சுற்றும் அல்லது முறுக்கும் இயந்திரங்களும் (ஊடு இழைய முறுக்குதலையும் சேர்த்து) தலைப்பு 84.46 அல்லது 84.47 இன் கீழ் வரும் இயந்திரங்களில் உபயோகப்படுத்தற்கான புடவை நூல் களைத் தயாரிக்கும் இயந்திரங்களும். |
| | | |
| | | புடவை நூலிழை நார்களைத் தயாரிப்பதற்கான இயந்திரங்கள் : |
| | 8445.11 | சிக்கெடுக்கும் இயந்திரங்கள் |
| | 8445.12 | சீவும் இயந்திரங்கள் |
| | 8445.13 | இழுக்கும் அல்லது வெளி அகற்றும் இயந்திரங்கள் |
| | 8445.19 | பிற |
| | 8445.20 | புடவைநூல் நூற்கும் இயந்திரங்கள் |
| | 8445.30 | புடவை நூலினை இரட்டிப்பாக்கும் அல்லது முறுக்கும் இயந்திரங்கள் |
| | 8445.40 | புடவை நூலினை சுற்றும் அல்லது முறுக்கும் இயந்திரங்கள் (ஊடு இழையை முறுக்கும் இயந்திரங்கள் அடங்கலாக) |
| | 8445.90 | பிற |
| | | |
| **84.46** | | நெய்யும் இயந்திரங்கள் (தறிகள்) |
| | | |
| | 8446.10 | 30 சென்ரி மீற்றருக்கு மேற்படாத அகலத்தினைக் கொண்ட துணிகளை நெய்வதற்கானவை |
| | | 30 சென்ரி மீற்றருக்கு மேற்பட்ட அகலத்தினைக் கொண்ட துணிகளை நெய்வதற்கானவை ; தையல் பொறியின் அடியிழை செருகும் கருவி வகை : |
| | 8446.21 | மின் தறிகள் |
| | 8446.29 | பிற |
| | 8446.30 | 30 சென்ரி மீற்றருக்கு மேற்பட்ட அகலத்தினைக் கொண்ட துணிகளை நெய்தற்கானதும், தையல் பொறியின் அடியிழை செருக்குங்கருவிகள் அல்லாதவை. |
| | | |
| **84.47** | | பின்னும் இயந்திரங்கள், தையல் (ஓட்டும்) பிணைப்பு இயந்திரங்கள், கெட்டியான நடுப்பகுதியுள்ள இழை, ஒரு வகையான பட்டுவலை பின்னற்பட்டி, சித்திரைத் தையல், கத்தரித்துச் சீர்செய்தல் சரிகைத் தலைப்பு அது வலை செய்வதற்கான இழைக்கும் இயந்திரங்களும் அடைத்தலுக்கான இயந்திரங்களும் |
| | | |
| | | வட்ட வடிவப் பின்னல் இயந்திரங்கள் : |
| | 8447.11 | 165 மி. மீற்றருக்கு மேற்படாத விட்ட அளவினைக் கொண்ட உருளைகளையுடைய |
| | 8447.12 | 165 மி. மீற்றருக்கு மேற்பட்ட விட்ட அளவினைக் கொண்ட உருளைகளையுடைய |
| | 8447.20 | தட்டைப்பின்னல் இயந்திரங்கள் ; தையல் பிணைப்பு இயந்திரங்கள் |
| | 8447.90 | பிற |
| | | |
| **84.51** | | ஆடைநூல் புடவைகளை, உற்பத்தி செய்த, ஆடைப்பொருட்களைக் கழுவுதல் சுத்தம் செய்தல், நீர் பிழிதல், உலர்த்துதல், மடித்தல், அழுக்கல் (தலைப்பு 85.50 இன் கீழ்வருவது தவிர்ந்த) (சேர்த்து அச்சிடும் இயந்திரங்கள் அடங்கலாக) வெளிரச் செய்தல், சித்திர இழைப்பு வேலை செய்தல், செய்து முடித்தல் அல்லது வண்ணம் தோய்த்தல், வண்ணமிடுதலுக்காய இயந்திரங்களும் மெழுகிட்ட மெழுகுத் துணிவகை அல்லது தளவிளிம்புகளின் உற்பத்தியில் நெசவு மூலப்பொருட்களுக்கு அல்லது பிற ஆதாரப் பொருட்களுக்குப் பசை பூசுவதற்காக உபயோகிக்கப்படும் ஒருவகை இயந்திரங்களும் புடவைத் துணிளைச் சுற்றும் குலைக்கும் மடிக்கும் வெட்டும் அல்லது அலங்கரிக்கும் இயந்திரங்கள் |
| | | |
| | 8451.30 | உடை அழுத்தும் இயந்திரங்கள், அமுக்கிகள் (இணைப்பு அழுத்தும் இயந்திரங்கள் அடங்கலாக) |
| | 8451.40 | சுத்தமாக்கும், வெளிரச் செய்யும் அல்லது சாயமூட்டும் இயந்திரங்கள் : |
| | 8451.50 | புடவைத் துணிகளைச் சுற்றும் குலைக்கும் மடிக்கும் வெட்டும் அல்லது அலங்கரிக்கும் இயந்திரங்கள் |
| | 8451.80 | பிற இயந்திர சாதனங்கள் : |
| | 8451.80.01 | முடிவுறும் புடவை துணிக்களுக்கான |

| | | |
|---|---|---|
| | | |
| **84.52** | | தலைப்பு 84.40 இல் வரும் புத்தகம் தைக்கின்ற இயந்திரங்கள் தவிர்ந்த தையல் இயந்திரங்கள், தையல் இயந்திரங்களுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட தனங்களும் அடிப்பாகங்கள், மூடிகள் என்பன ; தையல் இயந்திரங்களுக்கான ஊசிகள். |
| | 8452.21 | தன்னியக்கமானவை |
| | 8452.29 | பிற |

4. 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி புடவை வழங்கல், பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

## XXV. பதப்படுத்திய தோற்பொருட் கைத்தொழில்

அ. 2006.11.17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு பின்வரும் உருப்படிகள் மீதான செஸ் வரி அதிகரிக்கப்படும்.

i. சகல பாதணிகளும் - ஒரு சோடி பாதணிக்கு 25 வீதம் அல்லது ரூபா 300 ஆகிய பெறுமதிகளில் ஆகக் கூடியது.

ii. பாதணிகளின் மேற்பகுதிகள் - அலகொன்றுக்கு 25 வீதம் அல்லது ரூபா 300 ஆகிய பெறுமதிகளில் ஆகக் கூடியது.

(ஆ) வெளிப்புற சோல்கள் மற்றும் குதி அலகொன்றுக்கு 20 வீதம் அல்லது ரூபா 100 ஆகிய பெறுமானங்களில் அதிக பெறுமானத்தைக் கொண்ட செஸ் வரி 2006.11.17 ஆந் திகதியிலிருந்து விதிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **64.01** | | | இறப்பர் அல்லது பிளாஸ்திக்கினால் செய்த புற அடித்தளத்துடனும் மேற்பாகத்துடனும் கூடிய நீர்புகாத பாதணி, அதன் மேற்பாகம் அடிப்பாகத்துடன் ஒட்டப்பட்டிருக்கும் அல்லது தைக்கப்பட்டிருக்கும் அல்லது தறையப்பட்டிருக்கும் அல்லது புரியப் பொருத்திடப்பட்டிருக்கும் அல்லது செருக்கப்பட்டிருக்கும் அல்லது இவை போன்ற செயற்பாடு செய்யப்பட்டிருக்கும். |
| | | | |
| | 6401.10 | - | பாதுகாப்பு உலோக விரல்படி இணைக்கப்பட்ட பாதணி |
| | | - | பிற காலணிகள் : |
| | 6401.92 | -- | கணைக்காலினை மூடுவன ஆனால் முழங்காலினை மூடாதன |
| | 6401.99 | -- | பிற |
| | | | |
| **64.02** | | | வெளித்தோல்களும், மேற்பாகங்களும் இறப்பரினால் அல்லது பிளாத்திரிக் பொருட்களினாலான பிற காலணி |
| | | | |
| | | - | விளையாட்டுகளுக்கான காலணி : |
| | 6402.12 | -- | உறைபனி காலணிகளும் உள்நாட்டு விளையாட்டுகளுக்கான உறைபனி காலணி மற்றும் பனிப் பலகைக் காலணி |
| | 6402.19 | -- | பிற |
| | 6402.20 | - | வார்களுடனான மேற்றோல் கொண்ட காலணி |
| | | - | பிற காலணிகள் ; |
| | 6402.91 | -- | முழங்காலினை மூடுவன |
| | 6402.99 | -- | பிற |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **64.03** | | | வெளித்தோல்கள் இறப்பர், பிளாஸ்திரிக், தோல்களின் கூட்டுக்களினாலானவையும் மேற் தோல்களினாலானவையுமான பாதணி- |
| | | | |
| | | - | விளையாட்டகளுக்கான காலணி : |
| | 6403.12 | -- | உறைபனி காலணியும் உள்நாட்டு விளையாட்டுகளுக்கான உறைபனி காலணி மற்றும் பனிப்பலகைக் காலணி |
| | 6403.19 | -- | பிற |
| | 6403.20 | - | வெளித்தோல்கள் தோலினாலானவையும் மேற்பகுதி விரல்களுக்கு குறுக்காக வாரினைக் கொண்டதும் பெருவிரலைச் சுற்றி வாரினைக் கொண்டதுமான பாதணிகள் |
| | 6403.40 | - | விரற்கட்டைகளுக்கு காப்பளிக்கும் உலோகத்தினைக் கொண்ட பிற காலணிகள் |
| | | - | வெளித்தோல்கள் தோல்களினாலான பிற காலணி : |
| | 6403.51 | -- | முழங்காலினை மூடுவன |
| | 6403.59 | -- | பிற |
| | | - | பிற காலணி : |
| | 6403.91 | -- | முழங்காலினை மூடுவன |
| | 6403.99 | -- | பிற |
| | | | |
| **64.04** | | | வெளித்தோல்கள், இறப்பரினால், பிளாத்திரிக்கினால் அல்லது தோல்களின் கூட்டுக்களினாலானவையும் மேற்பாகம் புடவை மூலப் பொருட்களைக் கொண்டவையுமான காலணிகள். |
| | | | |
| | | - | வெளித்தோல்கள் இறப்பரினை அல்லது பிளாத்திரிக்கினைக் கொண்டிருப்பவை : |
| | 6404.11 | -- | விளையாட்டுக்கான காலணிகள், டெனிஸ் சப்பாத்துக்கள், கூடைப்பந்து சப்பாத்துகள், உடற் பயிற்சிக்கான சப்பாத்துகள், பயிற்சிகளுக்கான சப்பாத்துகளும் அவை போன்றவையும் |
| | 6404.19 | -- | பிற |
| | 6404.20 | - | வெளித்தோல்கள் தோல்களினாலான அல்லது கூட்டுத் தோல்களினாலான காலணி |
| | | | |
| **64.05** | | | பிற காலணிகள். |
| | | | |
| | 6405.10 | - | மேற்பாகம், தோல்கள் அல்லது கூட்டுத் தோல்களினால் ஆக்கப்பெற்றவை |
| | 6405.20 | - | மேற்பாகம் புடவை மூலப் பொருட்களால் ஆக்கப்பெற்றவை |
| | 6405.90 | - | பிற |
| | | | |
| **64.06** | | | காலணிப்பாகங்கள், சுழற்றக்கூடிய உட்தோல்கள், குருதியில் புரியுள்ளனவும் ஒத்த பொருட்களும் காலுறைகள் புறக்குப் பாயங்களும் ஒத்த பொருட்களும் அவை சார்ந்த பாகங்களும், பாகங்களும் |
| | | | |
| | 6406.10 | - | விறைப்பாக்கிகள் தவிர்ந்த மேற்பாகமும் அதனைச் சார்ந்த பாகங்களும் |
| | 6406.20 | - | இறப்பரினால் அல்லது பிளாஸ்திரிக்கினாலான வெளித் தோல்களும் குதிப்பான்களும் |
| | | - | பிற : |
| | 6406.91 | -- | மரத்தின் |
| | 6406.99 | -- | பிற மூலப் பொருட்களின் |

## XXVI. கப்பற் பணிக் கைத்தொழில்

### (அ) வருமான வரி

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் பின்வரும் ஏற்பாடுகளுக்காகத் திருத்தப்படும்.

- 2007 ஏப்ரல் 01 ஆந் திகதி அல்லது அத்திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட யாதேனும் ஒரு கப்பல் தொடர்பிலான 33 1/3 வீத மூலதனக் கொடுப்பனவுகள். அத்துடன்,
- இலங்கைக் கப்பலொன்றில் தொழில்புரியும் வதிவிட ஆளொருவரின் ஊதியத்திற்கு 2007 ஏப்ரல் 01 ஆந் திகதி அல்லது அத்திகதிக்குப் பின்னர் தொடங்கும் ஒரு காலப் பிரிவிற்காக விலக்களித்தல்.

### (ஆ) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

1. இலங்கைக் கொடியின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட கப்பல் இறக்குமதி செய்வதற்கு ஏலவே பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தலிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. 2007.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கப்பல்களை வாடகைக்குப் பெறல் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

### (இ) முத்திரை வரி

1465/20 ஆம் இலக்கமும் 2006.10.05 ஆந் திகதியும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கப்பல் அடகு வைத்தல், முத்திரை வரி செலுத்துவதிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளது.

### (ஈ) ஏனைய வரிகள்

2007.01.01 ஆந் திகதி அல்லது அத்திகதிக்குப் பின்னர் கப்பல்களை இறக்குமதி செய்தல், தீர்வை வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளது.

## XXVII. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்)

1. தற்போதைய 5 வீத எல்லை இலாபத்தின் பேரில் அறவிடப்படும் வரி 10 வீதம் வரை அறவிடப்படும்.
2. பூச்சுச் சாயங்கள் மீது 5 வீத உற்பத்தி வரி விதிக்கப்படும்.
3. இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் 2201.10.09 இற்கு ஏற்புடைய காபனேற்றப்பட்ட மென் பானங்களுக்கு லீட்டர் ஒன்றுக்கு ரூபா 6 உற்பத்தி வரியொன்று விதிக்கப்படும்.

பின்வரும் இயைபு முறைக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் வரும் பொலித்தீன் உறைகளுக்காக 5 வீத உற்பத்தி வரியொன்று விதிக்கப்படும்.

## XXVII. செஸ் வரி

2006.11.17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வரும் உருப்படிகளுக்காக அறவிடப்படும் செஸ் வரி பின்வருமாறு அதிகரிக்கப்படும்.

### i. நறுமணப் பொருட்கள், குளியலறைத் தயாரிப்புகள்

| இ. ப. த. இல. | இ. மு. குறியீடு | | விபரம் | வீதம் |
|---|---|---|---|---|
| **33.04** | | | வெய்யிலில் தோல் மெருகூட்டும் அல்லது வெய்யிலில் தோலைப் பாதுகாக்கும் தயாரிப்புகள் உட்பட, அழகு அல்லது ஒப்பனைத் தயாரிப்புகளும் தோல் பாதுகாப்புத் தயாரிப்புகள் (மருந்துப் பொருட்கள் தவிர) கால், கை என்பவற்றைப் பேணுவதற்கான தயாரிப்புகள் | 30% அல்லது ரூபா 60 ஆகியவற்றில் ஆகக் கூடியது |
| | | | | |
| **33.05** | | | மயிருக்குப் பயன்படுத்தும் தயாரிப்புகள். | 25% அல்லது ரூபா 50 ஆகியவற்றில் ஆகக் கூடியது |
| | | | | |
| **33.06** | | | பற்களை நிலைப்படுத்துவதற்கான பசைகளும் சாந்துகளும் உட்பட வாய் அல்லது பல் சுகாதாரத்திற்கான தயாரிப்புகள் ; தனித்தனி சில்லறை விற்பனை பொதிகளிலுள்ள பற்களுக்கிடையான இடைவெளிகளை துப்பரவாக்கும் நார் (டென்ரல் புளொஸ்). | |
| | | | | |
| | 3306.10 | - | பல்துலக்கும் பொருட்கள் | 25% அல்லது ரூபா 50 ஆகியவற்றில் ஆகக் கூடியது |
| | | | | |
| **33.07** | | | வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது சேர்க்கப்படாத சவரத்திற்குமுன், சரவத்தின் போது அல்லது சவரத்தின் பின்னர் உபயோகிக்கப்படும் தயாரிப்புகள், உடல் (வியர்வை) மணநீக்கிகள், குளியலுக்கான தயாரிப்புகள் ; மயிர் அசற்றும் | 25% அல்லது ரூபா 50 ஆகியவற்றில் ஆகக் கூடியது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பசைகளும் பிற நறுமண வகைகளும் வேறெங்கும் சேர்க்கப்படாத அல்லது குறிப்பிடப்படாத ஒப்பனை அல்லது குளியலறைத் தயாரிப்புகள் ; நறுமணமூட்டப்பட்ட அல்லது கிருமி நீக்கும் இயல்பு கொண்ட அல்லது இவையிரண்டும் கொண்டு தயாரிக்கப்பட்ட அறை மணமகற்றிகள் | |

ii. மின்குமிழ்கள் - இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு 8539.22 இன் கீழ் மின்குமிழ் ஒன்றுக்கு ரூபா 10 படி..

iii. சவர்க்காரம் - இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு இலக்கம் 3401 இன் கீழ் வரும் உருப்படிகளுக்காக 15 வீதம் அல்லது கி.கி. ஒன்றுக்கு ரூபா 20 ஆகிய பெறுமதிகளில் கூடியது.

iv. உராய்வு நீக்கிகள் - இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு இல. 2710.19.07 இன் கீழ் வரும் உருப்படிகளுக்காக 6 வீதம்.

v. தொலைக்காட்சியும் வானொலியும் - பின்வரும் இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு இலக்கங்களின் கீழ் வரும் உருப்படிகளுக்காக 5 வீதம். 8527.12.09, 8527.19.09, 8527.19.09, 8527.21, 8527.29, 8527.31, 8527.32, 8527.39, 8527.90, 8528.12.03, 8528.12.09, 8528.13.03, 8528.13.09, 8528.21.01, 8528.21.09, 8528.22.01, 8528.22.09, 8528.30.

vi. மின் கலன்கள் - இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு இலக்கம் 8506.10.01 இன் கீழ் ரூபா 3 படி.

## செஸ் வரி விதிப்பு

1. ஆயுள்வேத தயாரிப்புகள்/ மூலிகைகள் தயாரிப்புகள் - இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் 3031.90.01, 3004.90.01 இன் கீழ் வரும் உருப்படிகளின் மீது 25 வீதம்.

2. தொலைபேசி, வர்த்தக விவர கொத்துகள் - இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் 4101.99.02 இன் கீழ் வரும் உருப்படியின் மீது 25 வீதம் அல்லது கி.கி. ஒன்றுக்கு ரூபா 100 ஆகிய பெறுமதிகளில் ஆகக் கூடுதலானது.

3. நாட்குறிப்பேடுகள் - இயைபு முறைக் குறியீட்டு இலக்கம் 4820.10, 4820.30, 4820.40, 4820.50, 4820.90 இன் கீழ் வரும் உருப்படிகளின் மீது 20 வீதம் அல்லது கி.கி. ஒன்றுக்கு ரூபா 50 ஆகிய பெறுமதிகளில் ஆகக் கூடு:தலானது.

## XXIX. இரட்டைப் பிரஜா உரிமைக்காக விண்ணப்பிக்கும்போது அறவிடப்படும் கட்டணம்

இலங்கையில் வசித்து தற்போது வேறு ஒரு நாட்டில் பிரஜா உரிமை பெற்றுள்ள ஆளொருவர் இரட்டைப் பிரஜா உரிமைக்காக விண்ணப்பிக்கும்போது

விண்ணப்பகாரருக்கு ரூபா 200,000 கொணட தொகையும், வாழ்க்கைத் துணைக்கும் 18 வயதிற்கும் குறைவான பிள்ளைகளுக்கும் தலா ரூபா 50,000 வீதமும் செலுத்த நேரிடும். அதன்படி, ஒரு சராசரி குடும்பத்திற்கான இந்தக் கட்டணமாக ரூபா 200,000 முதல் ரூபா 400,000 வரை விண்ணப்பக் கட்டணம் செலுத்த நேரிடும்.

அத்தகைய பெருமளவான ஆட்கள் மீண்டும் இலங்கை வர பேராவலுடன் உள்ளனர். ஆகையால், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இரட்டைப் பிரஜா உரிமைக்காக விண்ணப்பிக்கும்போது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொள்ளாமல் குடும்ப அலகொன்றுக்கு ரூபா 200,000 மாத்திரம் அறவிடுவதற்கு முன்மொழியப்படுகின்றது. அதற்காகக் குறைந்தபட்சம் 3 ஆண்டு காலத்திற்காக இலங்கையிலுள்ள ஒரு வங்கியில் 25,000 ஐ. அ. டொலர் வைப்பொன்றை விண்ணப்பகாரர் பேண வேண்டும். ஒரு குடும்பத்தினால் மேற்போந்த விதத்தில் வைப்பிலிட்டு பேணப்படும் தொகை 50,000 ஐ. அ. டொலரை விட அதிகரிக்குமாயின் இரட்டைப் பிரஜா உரிமைக்காக விண்ணப்பிக்கும் கட்டணம் முற்றாக விலக்களிக்கப்படும். மேற்போந்த தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படின் இரட்டைப் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொள்ளும்போது கருத்திற்கொள்ளப்படும் வயது, கல்வித் தரம், செல்வ நிலை முதலிய தகவுதிறன்கள் எதிர்காலத்தில் ஏற்புடையனவாக அமையா. எவ்வாறாயினும், அத்தகைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்போது விண்ணப்பகாரர்களின் களங்கமற்ற நடத்தை பற்றிய உறுதிப்பாடொன்று அவசியமாகும்.

இந்த முன்மொழிவை 2006.12.01 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்துவதற்காக உள்ளக நிர்வாக அமைச்சரினால் 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் அறிவித்தலொன்று வெளியிடப்படவுள்ளது.

### பெயரளவிலான விசா கட்டணமொன்றை விதித்தல்

சுற்றுலாத் துறையை முன்னேற்றுவதற்கான ஒரு ஏற்பாடாக 78 நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டணம் அறவிடாமல் 30 நாள் சுற்றுலா விசா வழங்கப்படும். அவர்கள் நாட்டுக்கு வருகை தர முன்னர் விசா பெறப்பட வேண்டும். சூழல் பாதுகாப்புக்கும் தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பாதுகாப்புக்கும் ஈடுபடுத்தப்படும் 10 ஐ. அ. டொலர் விசா கட்டணமொன்று சகல சுற்றுலாப் பயணிகளிடமிருந்தும் அறவிடப்படும்.

இந்த முன்மொழிவை 2006.12.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்துவதற்காக உள்ளக நிருவாக அமைச்சரினால் 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பிரஜா உரிமை சட்டத்தின் கீழ் அறிவித்தலொன்று வெளியிடப்பட உள்ளது.

### பின்னிணைப்பு IV

## ஆவணங்களின் பட்டியல்

1. மகிந்த சிந்தனை: புதிய இலங்கை ஒன்றுக்கான தொலைநோக்கு (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
“பத்துவருட காலம்” அபிவிருத்திக் கட்டமைப்பு 2006 – 2016
கலந்துரையாடல் ஆவணம்
*தேசிய திட்டமிடல் திணைக்களம்*

2. இறை முகாமைத்துவ அறிக்கை – 2007 (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
*நிதி திட்டமிடல் அமைச்சு*

3. அண்மைய பொருளாதார அபிவிருத்திகள்
2006இன் முக்கிய பண்புகளும் 2007இற்கான வாய்ப்புக்களும் (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
*இலங்கை மத்திய வங்கி*

4. நடுத்தரகால வரவு செலவுத்திட்டக் கட்டமைப்பு 2006-2009 (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
*தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்*

5. பிரதேசச் செயலாளர் பிரிவால் இனங்காணப்பட்ட (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
அபிவிருத்திச் செலவினம்– 2006 – 2009
*தேசிய திட்டமிடல் திணைக்களம்*

6. புதிய இலங்கையை நோக்கிய பங்குடைமை (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
*வெளிநாட்டு வழங்கல் திணைக்களம்*

7. இலங்கை நிதியியற் புலனாய்வுப் பிரிவின் அறிக்கை (சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)
*நிதியியல் புலனாய்வுப் பிரிவு – இலங்கை மத்திய வங்கி*

8. இலங்கையில் விரைந்த அபிவிருத்திக்கான விசேடச்
செயற்றிட்டங்கள் (சுற்றறிக்கையிடப்பட்டுள்ளது)
*தேசிய திட்டமிடல் திணைக்களம்*

### பின்னிணைப்பு V

வரவு செலவுத் திட்டத்தின் சுருக்கம்

ரூ.மில்

| | 2005 | 2006 வ.செ.திட்டம் | 2006 திருத்தப்பட்டது | 2007 வ.செ.திட்டம் |
|---|---|---|---|---|
| மொத்த அரசிறை | **379,746** | **484,376** | **482,174** | **599,817** |
| வரி அரசிறை | 336,829 | 435,292 | 432,162 | 540,929 |